24 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969

நதி 24 | பாலம் 11 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 01, 2014

# இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றார்

16 வது லோக்சபா தேர்தலில் நரேந்திர மோடியின் தலைமையிலான பாஜக கூட்டணி வெற்றி பெற்றது. இதனையடுத்து லோக்சபா பாஜக தலைவராக (பிரதமர்) நரேந்திர மோடி தேர்ந்தெடுக்கப்பட்டார். நரேந்திர மோடி 15 வது பிரதமராக பதவி ஏற்கும் விழா மே 26, 2014 இல் டெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்றது. குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, நரேந்திர மோடிக்கு பதவிப் பிரமாணமும் ரகசியக் காப்பு பிரமாணமும் செய்துவைத்தார். கடவுள் பெயரால் நரேந்திர மோடி பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

இதனையொட்டி குடியரசுத்தலைவர் மாளிகையின் திறந்தவெளியில் 4000 பேர் அமர்ந்து பதவியேற்பு நிகழ்வை காணும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஒரே நேரத்தில் முக்கிய பிரமுகர்கள் கூடியதால் தலைநகர் டெல்லி பலத்த பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வரப்பட்டிருந்தது. 25,000 போலீஸார், துணை ராணுவப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். குடியரசுதின விழா அணிவகுப்பின் போது வழங்கப்படும் பாதுகாப்பை போன்றதொரு பாதுகாப்பு இவ்விழாவிற்கும் வழங்கப்பட்டது. குடியரசுத் தலைவர் மாளிகைக்கு மேலே விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. நரேந்திர மோடி பதவியேற்பு விழா தூர்தர்ஷனில் நேரடியாக 15 பிராந்திய மொழிகளில் ஒளிபரப்பப்பட்டது. மேலும் இந்த நிகழ்ச்சி தூர்தர்ஷன் நெட்வொர்க் மூலம் சார்க் நாடுகளில் ஒளிபரப்பப்பட்டது.

நரேந்திர மோடி பதவியேற்பு விழாவில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், இலங்கை அதிபர் ராஜபக்சே, ஆப்கன் அதிபர் ஹமீது கர்ஸாய், மாலத்தீவு அதிபர் அப்துல்லா யாமீன், மோரீஷஸ் பிரதமர் நவீன் ராம்கூலம், பூடான் பிரதமர் லியோன்சென் ஷெரிங் டோப்கய், நேபாள பிரதமர் சுஷில் கொய்ராலா, வங்கதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா சார்பில் அந்நாட்டு நாடாளுமன்ற அவைத் தலைவர் ஷிரீன் ஷர்மீன் சௌத்ரி உள்ளிட்ட சார்க் நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றனர். இந்திய பிரதமர் பதவியேற்பு விழாவில் சார்க் நாடுகளின் தலைவர்கள் கூட்டாக கலந்து



கொண்டது இதுவே முதல் முறை ஆகும்.

நரேந்திர மோடி முதலில் பிரதமராக பதவியேற்றுக் கொண்டார். பின்னர் அமைச்சர்கள் பதவியேற்றனர். பெரும்பாலான அமைச்சர்கள் இந்தியிலும் சிலர் ஆங்கிலத்திலும் பதவியேற்றனர். இந்த விழாவில் நரேந்திர மோடி தலைமையிலான 46 பேர் கொண்ட மத்திய அமைச்சரவை பதவியேற்றுக் கொண்டது. பிரதமர் நரேந்திர மோடியுடன் 23 பேர் கபினட் அமைச்சர்களாகவும், 10 பேர் தனிப்பொறுப்புடன் கூடிய இணை அமைச்சர்களாகவும் மேலும் 12 பேர் இணை அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

இந்த 46 பேரில் 7 பேர் பெண்கள். நாட்டிலேயே முதல் முறையாக 61 பெண் எம்.பிக்கள் இப்போதுதான் லோக்சபா தேர்தலில் தேர்வாகி இருக்கின்றனர். ராஜ்யசபாவில் 29 பெண் எம்பிக்கள் உள்ளனர். நரேந்திர மோடி அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளவர்களில் நஜ்மா ஹெப்துல்லா மட்டுமே முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர் ஆவார். இவர்தான் அதிக வயது (74) கொண்ட அமைச்சர். வயது குறைந்தவர், ஸ்மிருதி இரானி (38) ஆவார். இந்த இருவருமே பெண்கள். இந்த 46 பேரில் 2 பேர் தமிழர். தமிழக பாஜக தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் இணை அமைச்சராக பதவியேற்றார். பாஜக செய்தித் தொடர்பாளர் நிர்மலா சீதாராமன் தனிப் பொறுப்புடன் கூடிய இணை அமைச்சராக பொறுப்பேற்றுள்ளார். இவர் ஆந்திராவில் தற்போது ராஜ்யசபா உறுப்பினராக உள்ளார். இந்த அமைச்சரவையில், முன்னாள் முதல்வர்கள் 5 பேர் இடம்பெற்றுள்ளனர்.

## இந்தியாவின் 15 வது பிரதமர் - நரேந்திர மோடி

இந்தியாவின் குஜராத் மாநிலம், மேஹ்சானா மாவட்டத்திலுள்ள வட்நகர் என்ற இடத்தில் தாமோதர் தாஸ் முல்சந்த் மோடி என்பவருக்கும் ஹீராபேன்னுக்கும் 1950 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ம் திகதி நரேந்திர மோடி மகனாகப் பிறந்தார். ஒரு நடுத்தர வர்க்கக் குடும்பத்தில், மூன்றாவது குழந்தையாகப் பிறந்தவருக்கு ஆறு சகோதரர்கள் உள்ளனர். தன்னுடைய ஆரம்பக் கல்வியை வட்நகரில் உள்ள

தொடர்ச்சி 02ஆம் பக்கம்





Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி

TOYOTA MARKVILLE
905.294.8100

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd.
Company#10214

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

THE TRUSTED MORTGAGE SPECIALISTS
"I Work for you Not for the Bank"
BonaFide
Some Terms & Conditions May Apply
•I will arrange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage??? "When banks says no We says yes" @ interest rate starting from 6.99%+.

Thayalan Goblakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com

# இந்தியாவின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மேல்நிலைப் பள்ளியில் தொடங்கிய நரேந்திர மோடி அவர்கள், பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபொழுதே, ரயில் நிலையத்தில் டீக்கடை நடத்தி வந்த தன்னுடைய தந்தைக்கு உதவியாக இருந்து வந்துள்ளார். தன்னுடைய எட்டு வயதிலேயே, இந்தியாவில் இந்து தேசியவாதிகளால் உருவாக்கப் பட்ட ஆர்.எஸ்.எஸ் என அழைக்கப்படும் தேசிய தொண்டர் அணியில் உறுப்பினராக இணைந்த மோடி அவர்கள், அரசியலில் அதிக ஆர்வம் கொண்டவராக விளங்கினார். இதனால் குஜராத் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து அரசியல் அறிவியல் துறையில் முதுகலைப்பட்டம் பெற்றார்.



சிறுவயதிலேயே ஆர்.எஸ்.எஸ் இல் தன்னை இணைத்துக்கொண்ட மோடி அவர்கள், அகில பாரதிய வித்யார்தி பரிஷத் என்னும் மாணவர் குழுவின் தலைவராகவும் பொறுப் பேற்றிருந்தார். இந்தியாவில் நெருக்கடிநிலை அமலில் இருந்த பொழுது, போராட்டங்களில் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்ட மோடி அவர்களுக்கு, பல அரசியல் தலைவர் களின் அறிமுகம் கிடைத்தது. மோடியின் அயராத உழைப்பும், தன்னலமற்ற ஈடுபாட் டையும் கண்ட பிறகட்சித் தலைவர்கள் அவரை வெகுவாகப் பாராட்டினர். ஆர்.எஸ்.எஸ்-ன் தீவிர பற்றாளராக செயல்பட்டு வந்த அவர், பிறகு பாரதிய ஜனதா கட்சியின் உறுப்பினராகவும் சேர்ந்து, ஒரே வருடத்தில் குஜராத் மாநில பொதுச்செயலாளராக உயர்ந்தார்.

குறுகிய காலத்திற்குள், அத்வானியால் 1998ம் ஆண்டு குஜராத் மற்றும் இமாசலப் பிரதேச தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப் பட்ட மோடி அவர்கள், வெகு விரைவில் இமாசலப் பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர் மற்றும் ஜம்மு காஷ்மீர் போன்ற ஐந்து மாநிலங்களுக்கு, பாரதிய ஜனதாக் கட்சியின் பொதுச்செயலாளராக நியமிக்கப் பட்டார். 1998ம் ஆண்டு அடல் பிகாரி வாஜ்பாய் பிரதமராகப் பதவியேற்றபொழுது, மோடிக்கு தேசிய செயலாளர் பதவி வழங்கப்பட்டது. தனக்கு கொடுத்த அனைத்து பொறுப்புகளிலும் திறம்படச் செயல்பட்ட மோடி அவர்கள், 2001 ஆம் ஆண்டு அக்டோபர் 6 ஆம் திகதி, குஜராத் முதல்வராக இருந்த கேசுபாய் பட்டேல் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, பாரதிய ஜனதாக் கட்சியின் தனிப்பெரும்பான்மை ஆதரவுடன் அக்டோபர் 7 ஆம் திகதி குஜராத் மாநில முதல்வராக பதவியேற்றார்.

பின்னர் இடைத்தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றிப்பெற்ற அவர், பிப்ரவரி 27 ஆம் திகதி 2002 ஆம் ஆண்டு நடந்த கோத்ரா ரயில் எரிப்புச்சம்பவத்தைத் தொடர்ந்து, தன்னுடைய பதவியை ராஜினாமா செய்தார். இருந்தாலும் அதே ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலில் வெற்றிப்பெற்று

தொடர்ச்சி 06ஆம் பக்கம்









# 25 ஆவது ஆண்டில் விளம்பரம் நடத்தும் உலகளாவிய போட்டி

ரொறொன்ரோவில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் விளம்பரம் பத்திரிகை 25வது வருடத்தை (1991 - 2015) முன்னிட்டு நடத்தும் தமிழ் சமூக-இலக்கிய-வரலாற்றுப் போட்டி. போட்டிக்கான படைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு ஜனவரி முதலாம் திகதி 2015க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அஞ்சல் உறையில் அல்லது மின்னஞ்சல் பொருள் பகுதியில் '25வது ஆண்டு விளம்பரப் போட்டி' என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி
Vlambaram Publication Inc.
GTA Square,
5215 Finch Ave. East, #201
Toronto ON, M1S 0C2
மின்னஞ்சல் முகவரி:vlambaram@sympatico.ca

போட்டியில் வெற்றிபெற்ற மூன்று படைப்புக்களை தவிர ஏனையவற்றிற்கு எவ்வித பணமும் வழங்கப்பட மாட்டாது. ஆனால் சிறந்ததென நடுவர்களால் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் விளம்பரம் பத்திரிகையிலும் விளம்பரம் மற்றும் தமிழ்வணக்கம் இணையத்தளங்களிலும் பிரசுரிக்கப்படலாம்.

படைப்புக்கள் முன்னர் பத்திரிகைகள், இணையங்கள் உட்பட்ட மற்றைய ஊடகங்கள் எதிலும் பிரசுரமாகியிருக்கக் கூடாது. இதனை எழுத்தாளர் படைப்பின் முகப்பகுதியில் உறுதிப்படுத்த வேண்டும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் விளம்பரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

<u>போட்டி 1</u>
குறுநாவல் போட்டி

9,000-12,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

<u>போட்டி 2</u>
திரைப்படக் கதைப் போட்டி
(Script Writing)

1500-2000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

<u>போட்டி 3</u>
கவிதைப் போட்டி

60-100 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

<u>போட்டி 4</u>
கட்டுரைப் போட்டி

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றில் கட்டுரையை எழுதி அனுப்பலாம்.

1. புகலிட பொருளாதாரத்தில் தமிழரின் பங்கு
2. தமிழரின் கலையும் பண்பாடும்
3. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்கு
4. மருத்துவமும் தமிழரும்

1,500 - 2,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

நன்கொடை: போட்டி 1இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 1,000, 500, 300 வழங்கப்படும்.
நன்கொடை: தனித்தனியே போட்டி 2, 3, மற்றும் 4இற்கும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 500, 300, 200 என வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 8.5"-11" (A4) தாளில் 11pt எழுத்துரு அளவில் தமிழ் unicode font இல் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் word ல் ஆக்கத்தை பதிவு செய்து இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சலின் முகப்பில் ஆக்கத்தை பதிவு செய்ய வேண்டாம். படைப்பாளியின் முழுப்பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் உறுதிப்படுத்தலும் படைப்பின் முன் பகுதியில் தனித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். போட்டி உலகில் வாழும் தமிழர்கள் அனைவருக்குமானது. விளம்பரம் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களோ விளம்பரத்தின் எழுத்தாளர்களோ இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

# இலங்கையில் ஆட்சி மாற்றம் சாத்தியமா?

இலங்கையில் இன்று தேர்தல் குறித்த செய்திகள் சூடு பிடித்து வருகின்றன. இவ்வருட இறுதியிலோ அல்லது அடுத்த வருட முற்பகுதியிலோ தேர்தல்கள் நடை பெறலாம் என அரச தரப்பு வட்டாரங்களிலி ருந்தும், எதிர்கட்சிகள் தரப்பிலிருந்தும் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி தேர்தல் அல்லது, நாடாளு மன்றத்திற்கான தேர்தல் என இரண்டில் ஒன்று நடைபெறலாம் என தெரிவிக்கப்படு கின்றது. சில சமயங்களில் இவ்விரு தேர்தல் களுமே அடுத்தடுத்து நடத்தப்பட லாம். அரசாங்கம் கள நிலைமைகளை கவனத்தி லெடுத்து, எதிர்கட்சிகளின் பலம் பலவீனங் களை ஆராய்ந்து, எப்பொழுது எந்த தேர்தலை நடத்தலாம் என முடிவெடுக்கும். அது மட்டுமல்லாது சோதிடர்களின் ஆலோசனையும் இதில் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்படும். ஜனாதிபதி தேர்தலோ, நாடாளுமன்றத் தேர்தலோ இவற்றிற்கு எவ்வாறு முகம் கொடுக்கலாம் என்பது குறித்து பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆராய்ந்து வருவதாக அக்கட்சி தெரிவிக்கின்றது. இதில் எதிர்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு பொதுக் கூட்டணியை அமைப்பது என்பது பிரதான-மான யோசனைகளில் ஒன்றாகும்.

சிங்களக் கட்சிகள் மட்டுமல்லாது தமிழ் கட்சிகளையும் இணைத்து இக்கூட்டணியை அமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. தமிழ் கட்சிகள் என்று பார்க்கும் போது வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ் தேசியக்கூட்டமைப்பு முக்கியமானது. ஏனைய மலையக கட்சிகள், தெற்கில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று வளர்ந்துவரும் மனோ கணேசன் தலைமை யிலான ஜனநாயக மக்கள் முன்னணி என்பனவும் இதில் பிரதான பங்கை வகிக்கக் கூடியது. தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் நல்ல உறவைப் பேணிவரும் கட்சியாக மனோ கணேசனின் கட்சி உள்ளது. இதன் காரணமாகவே அண்மையில் நடந்து முடிந்த மேல், மத்திய மகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் தமிழ் தேசியக்கூட்ட மைப்பின் ஆதரவையும் அது பெறமுடிந்தது. உதாரணமாக, கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மனோ கணேசனின் கட்சிக்கு கொழும்பு வாழ் தமிழ் மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று உரை யாற்றியிருந்தார். அதன் பலனும் நன்றாகவே அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் நாட்டில் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என தீவிரமாகவே பரப்புரை செய்து வருகிறார். அண்மையில் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒரு சந்திப்பினையும் அவர் மேற்கொண்டார். அதில் ஆளும் தரப்பிற்கு எதிராக ஒரு பலமான பொதுக்கூட்டணியை அமைப்பது குறித்து ஆராயப்பட்டது. ரணில் விக்கிரம சிங்கவின் பிரத்தியேக இல்லத்தில் கடந்த 23-05-2014 அன்று இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது எதிர்காலத்தில் நடைபெற உள்ளதாக கூறப்படும் தேர்தல்கள் குறித்தே முக்கியமாக ஆராயப்பட்டது. இந்த சந்திப்பின்போது, ஐ.தே.க தலைவரான ரணில் விக்கிரமசிங்க, உத்தேச ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தங்கள் கட்சி செயற் குழு எடுத்துள்ள தீர்மானத்தை தெளிவு படுத்தினார். பிரதான எதிர்க்கட்சி என்ற



**- விகிர்தன் -**

அடிப்படையில் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர், எதிர்கட்சிகளின் ஆதரவுடன் எதிரணி பொது வேட்பாளராக, ஆளும் கட்சியின் வேட்பாளரை எதிர்த்து போட்டியிட உள்ளதாக ரணில் தெரிவித்தார். மஹிந்த அரசுக்கு எதிரான பொது எதிர்க்கட்சி கூட்டணியை உருவாக்கும் முயற்சிகளை அனைத்து பிரதான எதிர்கட்சிகளுடன் இணைந்து முன்னெடுக்கப் போவதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் நாட்டின் பிரதான எதிர்கட்சிகளுடன் கலந்துரையாடல்களை கட்டம் கட்டமாக நடத்த எண்ணியிருப்பதா கவும், சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை களை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மஹிந்த அரசின் குடும்ப ஆட்சியை எதிர்த்து, தேர்தல் வரை காத்திருக்காமல், பொது எதிர்கட்சிக் கூட்டணி வீதியிலிறங்கி போராட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் எனவும், அதற்காக அரசுக்கு எதிரான அனைத்து சக்திகளும் ஒன்று திரட்டப்பட வேண்டும் எனவும் ரணில் தெரிவித்தார். இந்த அடிப்படையில் சரத் பொன்சேகாவின் ஜனநாயக கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் பொது எதிர்க் கட்சி கூட்டணியில் இடம் பெறுவதை தான் எதிர்பார்ப்பதாக ரணில் கூறினார். ஜனாதிபதி தேர்தலில் பொது எதிரணி வேட்பாளரை ஆதரித்து வெற்றி பெறச்செய்யும் முயற்சியில் ஜனநாயக மக்கள் முன்னணி முழுமையாக ஈடுபடவேண்டும் எனவும், நீண்ட காலமாக நிலவி வரும் உறவு இரண்டு கட்சிகளுக்கு இடையில் தொடர்ந்து நிலவ வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். மஹிந்த அரசை வீழ்த்தும் அனைத்து எதிர்கட்சிகளையும் உள்ளடக்கிய எதிர்க்கட்சி கூட்டணி என்பது, தமது கட்சி யினதும் எதிர்பார்ப்பு எனவும், இந்த கூட்டணியில் தமிழ் தேசிய கூட்டமைப்பும், சரத் பொன்சேகாவின் ஜனநாயக கட்சியும் கட்டாயம் இடம்பெற வேண்டும் எனவும் இதன்போது மனோ கணேசன் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார்.


கடந்த சில வாரங்களில் தமது கட்சி சரத் பொன்சேகாவின் ஜனநாயக கட்சி, ஜே.வி.பி ஆகிய கட்சி தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியதாகவும், அதன் விபரங்களையும் மனோ கணேசன் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விளக்கினார். ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவற்றில் ஐ.தே.கவுடன் இணைந்து செயற்படுவதில் முரண்பாடுகள் இருக்காது எனவும், குறிப்பாக ஜனாதிபதி தேர்தலில் பொது எதிரணி வேட்பாளரை வெற்றி பெறச்செய்வதில் நமது கட்சி அர்ப்பணிப்புடன் செயல்படும் எனவும் மனோ கணேசன், எதிர்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார். ஆனாலும், இப்போது பலமாக இருக்கும் ஆளும் தரப்பை எதிர்த்துப் போட்டியிடக்கூடிய அல்லது இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை எதிர் கட்சிகள் எப்பொழுதோ ஆரம்பித்திருக்க வேண்டும். தேர்தல்கள் நெருங்கும் கட்டத்தில் எதிர்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவது பொதுக்கூட்டணி அமைப்பது குறித்து பேசிக் கொண்டிருப்பதில் எவ்வித பயனும் இல்லை.

போரின் பின்னான கால கட்டத்தில் நாட்டின் பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஏனைய எதிர் கட்சிகளும் மிகவும் பலவீனமான நிலைக்கே தள்ளப்பட்டுள்ளன. இதனை இக்கட்சிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்முரண்பாடுகள் இன்னமும் தீர்ந்தபாடில் லை. அதனை சீர்படுத்தும் நடவடிக்கை கள் எல்லாம் முழுமையாக வெற்றியளிக்க வில்லை. ஆட்சி மாற்றத்தைப் பற்றி அவர் பேசிக்கொண்டிருக்கும் நிலையில் கட்சியின் தலைமை மாற்றம் குறித்து ஐக்கிய தேசிய கட்சிக்குள் நிறைய பிரச்சினைகள் உள்ளன. ஏனைய எதிர்கட்சிகளுக்குள்ளும் முரண்பாடு களும் சுயநல நோக்கமும் குவிந்திருப்பதால் அவை ஒவ்வொன்றும் தனித்து ஓடவே விரும்புகின்றன.

அரசாங்கத்திற்கு எதிரான பிரச்சாரம் ஒன்றை மேற்கொள்ள ரணில், சரத் பொன்சேகா, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் பிரதான ஆளுமை மிக்கவர்களாக பார்க்கப்பட்டாலும் கூட, ஜனாதிபதி தேர்தல் பொது வேட்பாளர் என்று வருகின்றபோது அவர்களுக்குள் முரண்பாடுகள் வரும் நிலையே அதிகம் காணப்படுகின்றது. அண்மையில், ஜனநாயக கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதி யுமான சரத்பொன்சேகா மக்கள் சந்திப்பொன் றில் தெரிவித்துள்ள கருத்துக்களையும் இங்கு கவனிக்கலாம். "வரப்போகும் தேர்தல் களின் பின்னர், நாட்டின் மிகவும் பலமான கட்சி எமது ஜனநாயகக் கட்சி தான் என்பதை நிரூபித்துக் காட்டுவேன். எதிர்வரும் தேர்தல்களுக்கான பிரசார நடவடிக்கைகளை எதிர்வரும் நாட்களில் ஆரம்பிக்கவுள்ளோம். அடுத்த தேர்தலின் போது, ஆளும் கட்சியின் 75 ஆயிரம் வாக்குகளைப் பறிப்போம். ஒரு வருடத்தின் பின்னர் நடைபெறும் தேர்தலின் போது அரசாங்கத்துக்குச் சேர வேண்டிய 5 இலட்சம் வாக்குகளையும் நாமே பெற்றுக்கொள்வோம். பின்னர், சிறீலங்கா சுதந்திரக் கட்சியினால் திரும்பவும் எழவே முடியாது போகும்" இவ்வாறு அவர் விளாசித் தள்ளியள்ளார். எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவது குறித்தோ, பொதுக் கூட்டணி குறித்தோ அவர் ஒன்றும் பேசவில்லை.

ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டு மானால், அதற்காக முதலில் மேற்கொள்ள வேண்டியது ஒவ்வொரு கட்சிகளினதும், அதன் தனிநபர்களினதும் சுயநல நோக்கங் களை உதறித்தள்ளுவதாகும். அதற்கான ஒரு களம் இன்னும் உருவாக்கப்படவில்லை. அத்துடன், எதிர்கட்சிகள் தமிழ் கட்சிகளுடன் கூட்டுச் சேர்வது என்பதை மேலோட்டமாக பார்க்கும் போது நன்றாகத்தானிருக்கின்றது. ஆனால் இன்று இனவாதம் ஊட்டி வளர்க்கப் பட்டுள்ள பெரும்பான்மை சிங்கள மக்கள் தமிழ் கட்சிகளுடன் சிங்கள கட்சிகள் கூட்டுச்சேர்வதை ஏற்றுக்கொள்ளப்போவதில்

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

AABS DON VALLEY PEST CONTROL INC.
Please Call @ 647-931-7124 OR 1-800-816-6406
ABDV PEST CONTROL
The Name You Can Trust

Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit Flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


# இறந்தவர்கள் இங்கேயே இருக்கிறார்களா?

பலரும் என்னிடம் இறந்தவர்களைப் பற்றியே கேட்கிறார்கள். இறந்தபிறகும் அவர்கள் இங்கேயே இருக்கிறார்களா? அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியுமா என்றெல்லாம் கேள்விகள் நீள்கின்றன. அவர்களிடம் நான் விளையாட்டாக சொல்வதுண்டு, “மரணத்திற்குப் பின்னால் என்ன நிகழும் என்பதை நீங்கள் உங்கள் சொந்த அனுபவத்தில்தான் தெரிந்து கொள்ள வேண்டும்” என்று. அவர்கள் உடனே அதிர்ந்து போகிறார்கள்.

என்னுடைய பதிமூன்றாவது வயதில் அப்படியோர் அனுபவத்திற்கு முயன்றேன். எங்கள் பள்ளியில் தசரா பண்டிகைக்காகப் பதினைந்து நாட்கள் வரை விடுமுறை இருக்கும். விடுமுறை முடிந்து திரும்பிய பின், எங்கள் வகுப்பில் படித்த சிறுமி ஒருத்தி இறந்து விட்டதாகச் சொன்னார்கள். முதலில் இதுவும் எங்களுக்கொரு விளையாட்டாகத் தான் இருந்தது. அந்தப் பெண்ணின் பெயரை வருகைப் பதிவேட்டில் தொடர்ந்து அழைத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது நாங்கள் பெண் குரலில், “யெஸ் ஸார்” என்று குரல் கொடுப்போம். திடீரென ஒருநாள், அந்த விடயம் என்னில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. எங்கள் சம வயதில் இருந்த பெண்ணொருத்தி, உடன் விளையாடிய சிறுமி, திடீரென்று இல்லாமல் போகிறாள் என்றால் என்ன நடந்திருக்கும் என்று அறிந்து கொள்கிற ஆர்வம் என்னில் பெருகியது. இடையில் சில நாட்கள் இந்த சிந்தனையிலேயே அமிழ்ந்து, நான் பள்ளிக்குக் கூடப் போகவில்லை.

மரணம் என்றால் என்ன என்று சொந்த அனுபவத்தில் கண்டு கொள்கிற ஆவல் கரை மீறியது. என் தந்தை ஒரு மருத்துவர். அவருடைய மருந்துப் பெட்டியில் தேடினேன். பார்பிடுரேட் மாத்திரைகள் 98 இருந்த டப்பா கிடைத்தது. பெரியவர்கள் அதில் 30 மாத்திரைகள் சாப்பிட்டாலே செத்து விடுவார்கள் என்று கேள்விப்பட்டேன். பதிமூன்று வயதுச் சிறுவனுக்கு 98 போதாதா என்ன? என்னிடமிருந்த பொம்மைகள், விளையாட்டுப் பொருட்கள், சேமிப்பு எல்லாவற்றையும் என் நண்பர்களுக்கு விநியோகம் செய்தேன். “நான் சாகப் போகிறேன்” என்று சொன்னதை அவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. விளையாட்டுப் பொருட்கள் கிடைத்ததில் மகிழ்ந்தார்கள். நான் ஏதோ விளையாட்டாகச் சொல்கிறேன் என்று நினைத்துக் கொண்டார்கள். வெறும் வயிற்றில் சாப்பிட்டால்தான் அந்த மாத்திரை வேலை செய்யும் என்றும் எனக்குத் தெரிந்தது. ஒருநாள் இரவு உணவு வேண்டாமென்று சொல்லிவிட்டு மாத்திரைகளை விழுங்கி விட்டுப் படுத்துக் கொண்டேன். மூன்று நாட்களுக்குப் பிறகு கண் திறந்து பார்த்தபோது நான் சொர்க்கத்திலோ நரகத்திலோ இல்லை. என் தந்தையின் மருத்துவமனையில் இருந்தேன். மரணத்தைத் தெரிந்து கொள்ளும் வழி இதுவல்ல என்று தெரிந்து கொண்டேன்.

ஆனாலும் ஆர்வம் அடங்கவில்லை. சுடுகாட்டில் பேய்கள் இருக்கும். பிசாசுகள் இருக்கும் என்று பலரும் சொன்னார்கள். எனவே சுடுகாட்டில் நிறைய நேரம் செலவிட்டேன். தன் கட்டைவிரலில் பாதியை இழந்திருந்த ஒருவர் தன்னை ஒரு தாந்திரீக வாதி என்றழைத்துக் கொண்டார். ஒவ்வோர் அமாவாசை இரவிலும், தன் இரத்தத்தை பேய்களுக்குப் பருகத் தருவதாக சொல்லிக் கொண்டிருந்தார். எனவே ஒவ்வொரு அமாவாசையிலும் அவருடன் சுடுகாட்டுக்கு சென்றேன். போகும் போதெல்லாம், “இன்று இரவு பிசாசு வரவில்லை” என்று சொல்லத் தொடங்கினார். நான் வரும்போதெல்லாம் பிசாசு வரவில்லை போல!

பிறகுதான் ஒன்று புரிந்தது. மனிதன் என்பவனே உடலோடு கூடிய பிசாசுதான். உடல், மனம் ஆகிய இரண்டிலிருந்தும் ஓர் இடைவெளியை ஏற்படுத்திக் கொண்டாலே போதுமென்று தெரிந்தது.

உயிரை விட்ட உறவினர்களும், நண்பர்களும் இங்கேதான் இருக்கிறார்களா? எங்கே போனார்கள்? என்றெல்லாம் கேட்பவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். உங்கள் உறவினர்களையும், நண்பர்களையும் உடலளவிலும், ஓரளவு மனத்தளவிலும் சிறிதளவு உணர்வளவிலும் அறிவீர்கள். ஒருவர் இறந்தவுடன் இவையெல்லாமே போய்விடும். நிச்சயமாக உடல் திரும்பவும் எழாது. சிலர் உடலோடு சொர்க்கம் சென்றார்கள் என்று சிலபேர் சொல்லக் கேட்டிருப்பீர்கள். ஆனால் பூமித்தாய் தன் உரிமைப் பொருளாகிய உடலிலிருந்து ஒற்றை அணுவைக் கூட விட்டுத் தர மாட்டாள். புதைத்தாலும், எரித்தாலும் அப்படியே விட்டாலும் அவளுக்குக் கவலையில்லை.


மனம், உணர்வு ஆகியவற்றுக்கும் இதுவே பொருந்தும். எனவே அந்த மனிதரை எந்த நிலையில் எல்லாம் நீங்கள் அறிந்திருந்தீர்களோ, அத்தனையும் போய்விட்டன. எனவே உங்களுக்கும், அவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இருப்பதாக நினைத்துக் கொள்வீர்களேயானால் அது உங்கள் மனதோடும், உணர்வோடும் நீங்கள் நிகழ்த்தும் விளையாட்டன்றி வேறில்லை.

இந்த உலகில் ஏராளமானவர்கள் உயிரோடிருக்கிறார்கள். அவர்களுடன் நீங்கள் அற்புதமான உறவுகளை உருவாக்கிக் கொள்ள முடியும். இறந்தவர்களுடன் தொடர்பு கொள்ள முயலாதீர்கள். இறந்தவர்களை இறந்தவர்களிடமே விட்டு விடுங்கள். மரணத்தின் புனிதத்தை உணர்ந்து கொள்ளுங்கள். இப்போது வாழ்க்கை என்னும் விளையாட்டு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த விளையாட்டில் முழு மனதோடு ஈடுபடுங்கள். ஆனந்தமாக விளையாடுங்கள். விளையாட்டு முடிந்த பிறகு விசில் ஊதுவார்கள். அதன் பிறகு விளையாட்டைத் தொடர நினைக்காதீர்கள். எல்லா ஓவர்களும் முடியும்வரையில் ஒரு ரன் கூட எடுக்காமல், விளையாட்டு முடிந்த பிறகு சிக்ஸர் அடிப்பது பற்றி சிந்திப்பதால் பயனில்லை.

எனவே, மனிதர்களுக்கு ஏதாவது செய்ய நினைத்தால் அவர்கள் இருக்கிறபோதே செய்து விடுங்கள். அவர்களிடம் அன்பு காட்டுவதோ, உரையாடுவதோ, அவர்களை மகிழ்விப்பதோ, அவர்களுக்காக நடனமாடுவதோ எதுவாயிருப்பினும் அவர்கள் இருக்கும்போதே செய்து விடுங்கள். அவர்கள் போனபின் அவர்களிடம் அன்பு செலுத்த நினைத்தால்... செத்தவர்களுக்கு உங்கள் அன்பால் சல்லிக் காசு கூட பயனில்லை. இதைத் தெரிந்து கொள்ளுங்கள். செத்தவர்களுக்கு உணவு படைக்க முற்படுகிறீர்கள். பசுவுக்கும், காக்கைக்கும் நீங்கள் உணவளிக்கலாம். உயிர்வாழும் அந்தப் பிராணிகளுக்கு அது மிகவும் நல்லது. ஆனால் உடலை விட்டவர்களுக்கு உணவால் எந்தப் பயனும் இல்லை. உங்கள் தனிப்பட்ட ஆசைகளுக்காக மரணத்தைக் களங்கப் படுத்தாதீர்கள். மரணம்தான் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகிறது.

வாழ்வில் நீங்கள் செய்ய விரும்புவதையெல்லாம் வாழ்கிறபோதே செய்யுங்கள். உங்களை உணர்வதன் மூலம்தான் நீங்கள் வாழ்வை உணர முடியும். சின்சினாட்டி விமான நிலையத்தில் நீண்ட வரிசையில் பயணிகள் நின்று கொண்டிருந்தனர். ஒருவர் வரிசையை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைய முற்பட்டார். பலரும் தடுத்தார்கள். “நான் யார் தெரியுமா? நான் யார் தெரியுமா?” என்று கர்ஜித்தார். உடனே விமானநிலைய அலுவலர், ஒலிபெருக்கியில் அறிவித்தார், “தான் யாரென்று தெரியாத ஒருவர் இங்கே தடுமாறுகிறார். யாராவது அவருக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்” என்று.

உங்களில் பெரும்பாலானவர்கள் இந்த நிலையில்தான் இருக்கிறீர்கள். நீங்கள் யாரென்று என்னைக் கேட்டால் பரவாயில்லை. உங்களையே யாரென்று என்னிடம் கேட்கிறீர்கள். உங்கள் இருப்பின் தன்மையை உணராமல் இங்கே நீங்கள் இருப்பது பைத்தியக்காரத்தனமானது. உங்கள் அனுமானங்கள், உங்கள் தத்துவங்கள், உங்கள் குழுக்கள் எல்லாமே மரணம் வந்தால் நொறுங்கிவிடும். மரணத்திற்குப் பிறகு நேராக கடவுளின் மடிக்குப் போவேன் என்று சிலர் வீர முழக்கமிடுகிறார்கள். அவ்வளவு உறுதியாய் இருந்தால் உடனே கிளம்பலாமே! ஏன் காத்திருக்கிறீர்கள்? வாழ்க்கை பற்றியும் தெரியாமல், மரணம் பற்றியும் புரியாமல் இருப்பவர்களே ஏராளம்.



சத்குரு வாசுதேவ்

இறந்தவர்கள் பற்றிய கேள்விகள், சந்தேகங்கள் எல்லாமே அக்கறையின் அடிப்படையில் எழுவது எனக்குப் புரிகிறது. ஆனால் இறந்தவர்களைத் தொந்தரவு செய்யாமல் இருந்தால்தான் நீங்கள் நல்லபடி வாழ முடியும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

உயிரோடிருக்கும்போது மனிதர்களுடன் முழுமையாக ஈடுபடுங்கள். இறந்த பிறகு அவர்களை விட்டுவிடுங்கள். உங்களுக்கு எவ்வளவுதான் நெருக்கமானவர்களாய் இருக்கட்டும். மூன்று நாட்களுக்கு முன்னால் இறந்த அவர்கள் இன்று திரும்ப வந்தால் அஞ்சி அலறுவீர்கள் இல்லையா!

இறந்தவர்களுடன் உங்கள் உணர்வுகளை இணைக்கும்போது உங்கள் வாழ்க்கை உயிரற்றுப் போகிறது. அது பெரிய குற்றம். இறந்தவர்களின் நினைவுகளைப் போற்றுங்கள். அவர்களுடனான அனுபவங்களை நன்றியுடன் நினையுங்கள். அவர்களை மீண்டும் இங்கே கொண்டு வர முயலாதீர்கள். அதன் மூலம் உங்கள் வாழ்வை இழப்பீர்கள். இது கொஞ்சம் கடுமையாக இருக்கலாம். ஆனால் இதுதான் உண்மை. இறப்பு வருகையில் இறந்து கொள்ளலாம். வாழும்போது முழுமையாக வாழுங்கள்.




# இலங்கையில்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சியுடன் எதிர்கட்சிகள் கூட்டுச் சேர்ந்தால் அதனை ஆளும் தரப்பு சிங்கள மக்கள் மத்தியில் தமக்கு சாதகமாகவே பிரசாரத்தை மேற்கொள்ளும் நிலைதான் ஏற்படும். ஆகவே. இன்றுள்ள களநிலவரத்தைப் பொறுத்த மட்டில், பொதுக்கூட்டணி ஒன்று அமைக்கப்பட்டாலும் கூட, ஆளும் தரப்பிற்கு சில வேளைகளில் வாக்குச் சரிவை ஏற்படுத்துவது சாத்தியமானாலும் கூட ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது உடனடி சாத்தியமில்லை என்பது தான் யாதார்த்தம்.

# மோர்ட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

## இலவச ஆலோசனை

- மோட்கேஜ் எடுக்க
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- கடன்களை, ஒன்றுபடுத்த
- பவர் ஒப் சேல் பிரச்சினையை தடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- பாங்க்ரப்சி செய்தோருக்கான மோட்கேஜ் எடுக்க
- 2nd or 3rd மோட்கேஜ்
- மற்றும் பல

WIN UP TO **$100,000**

Everyone Who Funds A Mortgage With US Ask How !

*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

## மோட்கேஜ் கிளினிக்

416-613-2788 / 416-816-9011

திங்கள்–வெள்ளி (call for appointment)



**வோக்-இன் Wel Come - சனிக்கிழமை 9.00 - 5.00 வரை**

1504 Markham Rd . Toronto ON M1B 2V9

(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240

Corporate Office:
2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON M2J 5B4 Lic # 10530
Toll Free: 1-877-365-3487

ஜெ (Jey)இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

---

# உங்கள் விற்பனைக் கொமிசனை நீங்களே தீர்மானியுங்கள்.

# எனது மிகக் குறைந்த விற்பனைக் கொமிசன் $1000* மட்டுமே!!!

கூட்டெண் 6
Oshawa



$332,000

கூட்டெண் 5
9th line & 14th Ave



$595,900

கூட்டெண் 6
Ajax



$480,000

கூட்டெண் 7
Brimley & Ellesmere



$264,900



*"To Every Bird, Its Own Nest is Beautiful"*

**Jey Rasathurai** MBA, BBA (Hon)

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE

Dir: 416 - 816-9011
Brokerage:416- 391-3232
#112 - 895 Don Mills Rd, Toronto, ON M3C 1W3

Real Estate Sales Representative
Cell: 416-624-4843

**#1 Brokerage in Toronto***

*Listing commission does not include buyer brokerage commission of 2.5%

# விளையாட்டுத் தகவல்கள்

350

## ஐ.பி.எல். கிரிக்கெட்: மும்பையை வெளியேற்றியது சென்னை சூப்பர் கிங்ஸ்!

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் வெளியேற்றுதல் சுற்றில் மும்பையை வீழ்த்திய சென்னை சூப்பர் கிங்ஸ் அணி அடுத்து 2-வது தகுதி சுற்றில் பஞ்சாப்புடன் பலப்பரீட்சை நடத்த உள்ளது. ஐ.பி.எல். கிரிக்கெட்டில் புள்ளி பட்டியலில் 3-வது மற்றும் 4-வது இடங்களை பிடித்த அணிகளான சென்னை சூப்பர் கிங்சும், நடப்பு சாம்பியன் மும்பை இந்தியன்சும் 'வெளியேற்றுதல்' சுற்றில் மும்பை பிராபோர்ன் மைதானத்தில் குதித்தன.

டொஸ் வென்ற சென்னை கப்டன் தோனி முதலில் மும்பையை பாட் செய்ய அழைத்தார். லெண்டில் சிமோன்சும், மைக் ஹஸ்சியும் அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் புகுந்தனர். சென்னையின் பந்து வீச்சை நேர்த்தியாக சமாளித்து விளையாடிய இவர்கள் முதல் விக்கெட்டுக்கு 76 ரன்கள் சேர்த்து மும்பைக்கு பலமான அஸ்திவாரம் அமைத்து கொடுத்தனர். மைக் ஹஸ்சி 39 ரன்களில் சுழற்பந்து வீச்சாளர் ரவீந்திர ஜடேஜாவின் பந்து வீச்சில் கிளீன் போல்டு ஆனார். அடுத்து வந்த கோரி ஆண்டர்சன் சிறிது நேரமே மையம் கொண்டாலும், 10 பந்தில் அணிக்கு பயனுள்ள பங்களிப்பை அளித்தார். இதைத் தொடர்ந்து சிமோன்சும், கேப்டன் ரோகித் ஷர்மாவும் கைகோர்த்தனர். இவர்கள் ஆடிய விதத்தை பார்த்தபோது மும்பை அணி எப்படியும் 190 ரன்களை தாண்டும் என்றே தோன்றியது. 16 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 140 ரன்கள் எடுத்திருந்தது. வலுவான நிலையை நோக்கி சென்று கொண்டிருந்த மும்பை வீரர்களை கடைசி நேரத்தில் சென்னை பவுலர்கள் கட்டுப்படுத்தி ஆறுதல் அளித்தனர். சிமோன்ஸ் 67 ரன்களிலும், கேப்டன் ரோகித் ஷர்மா 20 ரன்னிலும் பெவிலியன் திரும்பினர். இதன் பிறகு கீரன் பொல்லார்ட், ஆதித்ய தாரே (0), அம்பத்தி ராயுடு, பிரவீன்குமார் ஆகியோர் வந்த வேகத்தில் ஆட்டம் இழந்ததால் இறுதிகட்ட 'எக்ஸ்பிரஸ் ரன் வேகம்' ஒரேயடியாக தளர்ந்து போனது. முதல் 2 ஓவர்களில் 25 ரன்களை வாரி இறைத்த வேகப்பந்து வீச்சாளர் மொகித் ஷர்மா கடைசி நேரத்தில் 3 விக்கெட்டுகளை சாய்த்தார். என்றாலும் கடைசி பந்தில் ஹர்பஜன்சிங் சிக்சர் அடித்ததால் மும்பை அணி 170 ரன்களை கடந்தது. 20 ஓவர்களில் மும்பை அணி 8 விக்கெட் இழப்புக்கு 173 ரன்கள் குவித்தது. கடைசி 4 ஓவர்களில் அந்த அணி 6 விக்கெட்டுகளை இழந்து 33 ரன் மட்டுமே எடுத்தது. சென்னை தரப்பில் மொகித் ஷர்மா 3 விக்கெட்டுகளும், ஆஷிஷ் நெஹரா, ரவீந்திர ஜடேஜா தலா 2 விக்கெட்டுகளும், அஸ்வின் ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர். பின்னர் 174 ரன்கள் இலக்கை நோக்கி சென்னை அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக வெய்ன் சுமித்தும், பாப் டு பிளிஸ்சிஸ்சும் களம் இறங்கினர். சுமித், 5



ரன்னில் இருந்த போது, பிரவீன்குமாரின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ. ஆனார். அது நல்ல அவுட் என்ற போதிலும், நடுவர் ஆக்சன்போர்டு அவுட் வழங்க மறுத்ததால் சுமித் தப்பினார். இதேபோல் பிளிஸ்சிஸ் 16 ரன்னில் இருந்த போது தூக்கியடித்த கேட்ச் வாய்ப்பை, அம்பத்தி ராயுடு, ஹர்பஜன்சிங் இருவரும் வீணடித்தனர்.

## வரலாற்று சாதனை படைத்த மும்பை!

ஐ.பி.எல் கடைசி லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் அணியை, மும்பை மிகக் குறைவான ஓவர்களில் வீழ்த்தி வரலாற்று சாதனை படைத்துள்ளது. தொடர் தோல்விக-ளால் துவண்டு வந்த மும்பை அணி, துடுப்பாட்டத்தையும், பந்து வீச்சையும் சரிசெய்து வெற்றிப்படியை நோக்கி பயணம் செய்தது. இந்நிலையில் ராஜஸ்தான் அணிக்கெதிரான கடைசி லீக் ஆட்டத்தில் 'பிளே-ஆப்' சுற்றுக்கு செல்ல ராஜஸ்தான் அணிக்கு தான் அதிக வாய்ப்பிருந்தது. ஆனால் அந்த விதியையும் மாற்றி எழுதியது மும்பை. ராஜஸ்தான் றோயல்ஸ் அணியுடனான கடைசிப் பந்தில் வெற்றியைப் பெற்றதோடு, 'பிளே ஆப்' சுற்றுக்குள்ளும் நுழைந்து உற்சாகத்தில் துள்ளிக் குதித்தது மும்பை இந்தியன்ஸ்.

ஐபிஎல் வரலாற்றில் மட்டுமல்லாமல் டி20 கிரிக்கெட் வரலாற்றிலும் இந்த போட்டி புதிய வரலாற்றை எழுதி விட்டது. மும்பை அணி தனக்கு நிர்ணயிக்கப்பட்ட 190 ஓட்டங்களை 14.3 ஓவர்களில் எடுத்தாக வேண்டும் என்ற நிலையில் களம் இறங்கியது. ஒரு பந்து தவறினாலும் கூட மும்பை வெளியேறிவிடும். 14.3 ஓவரின்போது இரு அணிகளின் ஓட்டங்களும் சமமாகி விட்டன. இதனால் மும்பை 'பிளே-ஆப்' பிரிவுக்குத் தகுதி பெறுமா என்பதில் குழப்பம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அடுத்த பந்தில் பவுண்டரி அடித்தால் மும்பை அணி தகுதிச் சுற்றுக்குத் தகுதி பெறும் என்று நடுவர்கள் அறிவித்தனர். கடைசி நேரத்தில் தரே சிக்சர் அடித்து 'பிளே-ஆப்' சுற்றை உறுதி செய்தார். இதுவரை எந்த ஒரு டி 20 போட்டியிலும் 14.4 ஓவர்களில் 195 ஓட்டங்கள் எடுக்கப்பட்ட தில்லை. அந்த வகையில் இது ஒரு புதிய சாதனையாக பதிவாகி விட்டது.


## மாட்ரிட் ஓபன்: நடால், ஷரபோவா சாம்பியன்

மாட்ரிட் ஓபன் ஆடவர் சுற்றின் இறுதிப்போட்டியில், நிஷிகோரியின் உடல் நிலை பாதிப்பால் அவர் வெளியேற ரபேல் நடால் பட்டம் வென்றதாக அறிவிக்கப்பட்டார்.

மாட்ரிட் நகரில் நடைபெற்று வரும் மாட்ரிட் ஓபன் போட்டியில் உலகின் முதல்நிலை வீரர் ரபேல் நடாலும், ஜப்பான் நாட்டின் கீ நிஷிகோரியும் மோதினர். விறுவறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 2-6, 6-4, 3-0 என்ற கணக்கில் ஆட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது நிஷிகோரி கடுமையான முதுகுவலியால் பாதிக்கப்பட்டார். இருப்பினும் காயத்துடன் மீண்டும் களமிறங்கி போராடிய நிஷிகோரிக்கு உடல் ஒத்துழைக்காததால் அவர் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். இதனையடுத்து நடால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இது நடால் கைப்பற்றும் 4வது மாட்ரிட் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

## மகளிர் ஒற்றையர் பிரிவு:

மகளிர் ஒற்றையர் பிரிவில் ரஷ்யாவை சேர்ந்த முன்னணி வீராங்கனை 'ரபோவாவும் ரோமானிய வீராங்கனை சிமோனாவும் மோதினர். இப்போட்டியில் 'ரபோவா 1-6, 6-2, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று பட்டத்ததை கைப்பற்றினார். காயத்தால் அவதிப்பட்டு நீண்டகாலமாக விளையாடாமல் இருந்த 'ரபோவா ஓய்வுக்குப் பின் வெல்லும் முதல் பட்டம் இதுவாகும்.



**எஸ். கணேஷ்**

# இந்தியாவின்...

### 02ஆம் பக்கத்தொடர்ச்சி

மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். பின்னர் 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று, மூன்றாவது முறையாக குஜராத்தின் முதல்வர் பதவியை அலங்கரித்தார். இதனால், குஜராத் அரசியல் வரலாற்றில், நீண்டகால முதல்வராக இருந்தவர் என்ற சாதனையைப் பெற்றார். அதோடு நின்று விடாமல், நரேந்திர மோடி மேற்கொண்ட பல்வேறு நலத்திட்டங்களி னால், குஜராத் மக்கள் அனைவரும் பலன் அடைந்துள்ளனர் என்பதற்கு எடுத்துக் காட்டாக, 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற குஜராத் மாநிலத் தேர்தலில் நான்காவது முறையாக வெற்றிபெற்று, இந்திய அரசிய லில் மாபெரும் சாதனையைப் படைத்தார். 2014ம் ஆண்டு 16 ஆம் மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனதாகட்சி முதன்மை யேற்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து தேர்தலை முன்னிட்டு பாரதிய ஜனதாகட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி (தே.ஜ.கூ.) கட்சி வேட்பாளர்களை ஆதரித்து, நரேந்திர மோடி நாடு முழுவதும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டார். 2014 நாடாளுமன்ற தேர்தலுக்கு வாரணாசி மற்றும் வடோதரா ஆகிய இரண்டு நாடாளுமன்ற மக்களவைத் தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் செய்து வெற்றியும் பெற்றார். சோதனைகளை கண்டு ஓடாமல் சவால்களை துணிந்து எதிர்கொண்டு, கட்சிக் காக தன்னை முழுவதுமாக அர்ப்பணித்த மோடி அவர்கள், வடோதரா தொகுதியில் 570,128 வாக்குகள் வித்தியாசத்தில் மாபெரும் வெற்றி பெற்றுள்ளார்.



## ராஜபக்சாவுக்கு எதிராக டெல்லியில் போராட்டம் நடத்திய வைகோ கைது.

நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ள வந்த இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்சாவுக்கு எதிராக டெல்லியில் வைகோ தலைமையில் மதிமுகவினர் கறுப்புக் கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்களைப் போலீஸார் கைது செய்து அங்கிருந்து அப்புறப்படுத்தினர். நரேந்திர மோடி பதவியேற்பு விழாவுக்கு சார்க் நாடுகளின் தலைவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டனர். இதில் இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்சாவும் ஒருவர். ஆனால் ராஜபக்சாவை அழைத்ததற்கு தமிழக அரசும் தமிழக அரசியல் கட்சிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. பாரதிய ஜனதாவின் கூட்டணிக் கட்சியான மதிமுக பொதுச் செயலர் வைகோ டெல்லி சென்று ராஜ்நாத் சிங், மோடியை நேரில் சந்தித்து

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

விளம்பரம் VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# நிதி நிறுவனங்களின் தாராள மனப்பான்மை

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் - 416

வருமானம் குறைந்த வாடிக்கையாளர்களிற்கு கனடிய எட்டு (8) முன்னணி வங்கிகள் மாதாந்த கட்டுப்பணமற்ற வங்கிக்கணக்கை வைத்திருப்பதற்கு முன்வந்துள்ளன. மாதாந்த கொடுப்பனவு செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. இதனால் ஏறக்குறைய ஏழு (7) மில்லியன் கனடிய மக்கள் இலாபம் அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கியமாக இளையவர்கள், மாணவர்கள், வலுகுறைந்தவர்கள் மற்றும் முதியவர்களிற்கு இதன் பலன் கிடைக்கலாம். நிதி அமைச்சர் ஜோ ஒலிவர் இந்த தகவலை மே 27, 2014 அன்று வெளியிட்டுள்ளார். இந்த புதிய சலுகை 2015 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி யிலிருந்து அமலிற்கு வரலாம் என தெரிய வருகின்றது. குறைந்தது ஒவ்வொரு மாதமும் 8 தடவை பற்றுவரவு (Transactions) இலவசமாக பற்றுவாடா செய்யக்கூடியதாக இருக்கும்.

இந்த No Cost வங்கிக்கணக்கில் RBC, TD, CIBC, Scotia Bank, BMO, National Bank,HSBC மற்றும் Laurentian Bank என்பன கையொப்பமிட்டுள்ளன. ஏற்கனவே On line இல் PC (President Choice) வங்கி மற்றும் Tangerine வங்கிகள் மாதாந்த கட்டுப்பணமற்ற வங்கிக் கணக்கை வைத்திருப்பது தெரிந்ததே. பொதுவாக குறைந்த வருமானம் (Low Income) என்று கணக்கிடும்போது 2013 இல் இந்த வருமானம் $20,204 இற்கு குறைவாக இருந்தது. இத்துடன் சகல கனடியர்களும் விரும்பினால் $4 என்ற மாதாந்த கணக்குடன் Low Cost வங்கிக்கணக்கை வைத்திருக்க முடியும்.

யூன் 12, 2014 இல் கனடிய பொதுத்தேர்தல் ஒன்ராரியோவில் நடைபெறுவது தெரிந்ததே. இதில் போட்டிகள் முக்கிய மூன்று கட்சிகளிற்கிடையே நடைபெறுகிறது. அவையாவன ஆட்சியில் ஏற்கனவே இருந்த லிபரல் கட்சி (Liberal), பழமைவாதக்கட்சி (Conservative) மற்றும் புதிய ஜனநாயகக்கட்சி (NDP) ஆகும். ஏற்கனவே 10 வருடங்களாக ஆட்சியிலிருந்த லிபரல் கட்சி தனது நிதி அறிக்கை (Budget) யில் தோல்வி அடைய இருந்ததால் இந்த தேர்தல் நடைபெறுகின்றது.

ஒவ்வொரு கட்சிகளும் தமது தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளன. அதில் ஒவ்வொரு கட்சிகளும் தேர்தல் கொள்கைகளை முன்வைத்திருந்தன. இவற்றில் ரொறொன்ரோ போன்ற முக்கிய கனடிய நகரங்களில்



பெருந்தெருக்கள், சாதாரண தெருக்கள், பாலங்கள், நிலத்தின் கீழான ரயில்கள் (Subways), மற்றும் மக்களிற்குரிய தொழில்வாய்ப்புகள் மிக முக்கியமானவை. மேற்கூறப்பட்டவைகளும் எதிர்கால வளமான ஒன்ராரியோவிற்கு சிறந்ததாக கருதப்படும். பொதுவாக மக்களின் இலகுவான நடமாட்டத்திற்கு நிலத்திற்கு கீழான ரயில்வே திட்டம் சிறந்ததாக கருதப்படுகின்றது. ஒவ்வொரு Subway Station ஐயும் சுற்றி மிகக்கூடிய அபிவிருத்திகள் (Developments) உருவாக்கப்படுகின்றன. உதாரணமாக அடுக்குமாடிக் கட்டிடங்களில் மேலதிகமான மக்கள் குடியேறுவார்கள். புதிய வேலைவாய்ப்புகள் நிச்சயம் உருவாகும். உதாரணமாக Fairview Mall (Donmills / Sheppard) குறிப்பிடலாம். முன்பு சனச்சஞ்சாரம் குறைந்ததாக இருந்த இவ்வியாபார சதுக்கம் (Mall) அதனைச் சுற்றி பல அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டபின்பாக இதன் நிலைமை மாறியுள்ளது. மக்களால் கவரப்படும் (தெரிவு) செய்யப்படும் (Brand Name Stores) பல வியாபார நிலையங்கள் இங்கே தமது வியாபாரத்தை தொடங்கியுள்ளன. இதற்கு காரணம் Sheppard Subway - (Donmills/Sheppare) பகுதியில் அமைக்கப்பட்டதே ஆகும். இது போன்ற பல நன்மைகள் உருவாகலாம். ஆரம்பத்தில் நிலத்திற்கு கீழான ரயில்வே போன்றவற்றின் நிர்மானத்திற்கு செலவு செய்தாலும் நீண்டகாலத்தில் சிறந்ததாக கருதப்படுகின்றது. எனவே இவ்வாறான திட்டத்தை யார் முன்வைத்து போட்டியிடுகிறார்களோ அவர்களை தெரிவு செய்வது சிறந்ததாகலாம். எனவே யூன 12 2014 ஒன்ராரியோ தேர்தலும், ஒக்ரோபர் 27, 2014 அன்று நடைபெற இருக்கும் உள்ளூராட்சி தேர்தலும் முக்கியமாகின்றன.


HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

Raja Mahendran, P.Eng.
Broker / Owner



5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

CONDO FOR SALE
NEILSON & MCLEVIN

2 Bedroom condo for sale. 2 Washrooms, 24 Security. Renovated, newly painted, laminated, 5 appliances, 1 parking included.



Asking price $189,900

TWO GAS STATION FOR SALE
* Brand new gas station.
* Short distance from GTA
* Brand name
* 4 & 6 Pumps
* Additional rental income

Asking price $3.5 Million

HWY 427 & DUNDAS
BRAND NEW CONDO FOR RENT

2 Bedroom condo. for rent.
2 Washrooms.
Laminate floor.
Close to major Highways,Airport & Downtown, Grocery stores.



HOTEL FOR SALE
1. Brand name hotel
2. 1 1/2 hour from Brampton
3. 60 Rooms
4. Over 1 million sale

Asking price $3.3 Million

CONDO FOR SALE
NEILSON & TAPSCOTT

Spacious 1 bedroom condo for sale. Balcony, laundry, kitchen. Low tax, maintenance fee. Walking to Malvern mall, Professional officers



Asking price $99,000

# இந்திய ஆட்சி மாற்றம் இலங்கைத் தமிழர் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துமா?

## தாயக மடல்

- வன்னியிலிருந்து ஆதித்தன் -

இந்தியாவில் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருப்பதும், நரேந்திர மோடி இந்தியாவின் புதிய பிரதமராக பொறுப்பேற்றிருப்பதும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றமையை மறுப்பதற்கில்லை. யார் என்னதான் சொன்னாலும், இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வினைக் காண்பதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். இந்தியாவைக் கடந்து - இந்தியாவைப் புறந்தள்ளி, எந்தவொரு நாடும் இலங்கை விவகாரத்தில் ஒரு முடிவினை மேற்கொள்ள முடியாது.

இது இன்றுள்ள உலக ஒழுங்கின் தவிர்க்கவியலாத விதி மட்டுமல்ல, சர்வதேச, பூகோள அரசியல் யதார்த்தமும் கூட. ஆரம்ப காலங்களில் இலங்கையில் தமிழ் இயக்கங்கள் பல ஆயுதப் போராட்டத்தை நடத்தியதற்கும், அக்காலங்களில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளுக்கும் இந்தியாவே காரணமாக முன்னின்றது. பின்னர் வந்த காலகட்டங்களில் இந்தியாவைத் தவிர்த்து, மேற்குலக அனுசரணை, மத்திஸ்தம் என்று வந்தபோதும் கூட இந்தியாவிற்கான வகிபாகம் ஒன்றிருந்தது. நடைபெறும் பேச்சுக்கள் குறித்த விபரங்கள் உடனுக்குடன் இந்தியாவிற்கு அறிவிக்கப்பட்டே வந்தது. நோர்வேயின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போது கொழும்பிற்கும் கிளிநொச்சிக்கும் பறந்து வரும் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இங்கு பேச்சுக்களை நடத்தி விட்டு இந்தியாவிற்கும் பறந்து கொண்டிருந்தமையினை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

இலங்கையில் ஆயுதப் போராட்டம் நடைபெற்ற காலங்களில், இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் மத்தியஸ்தத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தமைக்கு அன்றைய காலகட்டத்தில் நிலவிய ஆயுதப் போராட்டத்தின் இறுக்கமும் ஒரு காரணமாக அமைந்தது. இன்று மிதவாதத் தலைமைகளுடன் ஒரு பேச்சுவார்த்தையினை மேற்கொள்வதற்கு மிகவும் சாதகமான சூழலே நிலவுகிறது. ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதென்பதே இன்றுள்ள கோரிக்கை. இதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மிகத் தெளிவாகவும், பகிரங்கமாகவும் வெளிப்படுத்தி வருகின்றனர். போர் முடிவுற்றதும் இலங்கை அரசாங்கத்துடன் இதற்கான பேச்சுவார்த்தைகளிலும் அவர்கள் ஈடுபட்டனர். ஆனால், பேச்சுக்களின் போது உறுதியளிக்கப்பட்ட மிகவும் சாதாரணமான விடயங்கள் கூட நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக, இனிவரும் பேச்சுவார்த்தைகள் இன்னொரு தரப்பின் மத்தியஸ்தத்துடன் நடைபெறுவதே நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும் என்ற நம்பிக்கை தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மட்டுமல்லாது இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது.



இவ்வகையில் அண்மைய நாட்களில் தென்னாபிரிக்க அனுசரணை குறித்து பேசப்பட்டு வந்தது. இலங்கை அரசதரப்பும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தென்னாபிரிக்க விஜயங்களை மேற்கொண்டன. தென்னாபிரிக்காவும் இப்பிரச்சினையை கையாள சிறப்பு பிரதிநிதியாக ரமபோசவை நியமித்தது. அவர் விரைவில் இலங்கை வருவார் எனவும் அறிவிக்கப்பட்டது. தற்போது ஏற்பட்டுள்ள இந்திய ஆட்சிமாற்ற சூழலில் தென்னாபிரிக்க அனுசரணை என்பது இரண்டாம் நிலைக்கு தள்ளப்படும் நிலை அல்லது, அது தவிர்க்கப்படும் நிலை ஏற்படலாம் என்றே எண்ணத் தோன்றுகிறது. இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்குவேன் என்று தேர்தல் பரப்புரைகளின் போதே நரேந்திர மோடி தெரிவித்திருந்தார். நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவத்திற்கு சென்றிருந்த இலங்கை ஜனாதிபதியுடனும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து சில விடயங்களை மோடி கலந்துரையாடி இருக்கின்றார். முக்கியமாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தை அமல்படுத்து மாறு மஹிந்த ராஜபக்ஸவிடம் மோடி கோரிக்கை விடுத்துள்ளார். தற்போது வந்திருக்கின்ற மற்றுமொரு செய்தியும் நம்பிக்கைத் துளியினை தமிழ் மக்கள் மனங்களில் விதைப்பதாக அமைந்துள்ளது. ‘இலங்கை விவகாரங்களைக் கவனிப்பதற் கென தனது நேரடி கண்காணிப்பின் கீழ் சிறப்புப் பிரதிநிதி ஒருவரை நியமிக்க இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி முடிவு செய்திருப்பதாக டெல்லி தகவல்கள் தெரிவிக்கின்றன’ என்று வெளியாகியுள்ள செய்திதான் அது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, தமது ஆட்சிக் காலத்தில் இலங்கை விவகாரங்களுக்காக மட்டும் ஜி. பார்த்தசாரதியை சிறப்பு பிரதிநிதியாக நியமித்திருந்தார். அதேபோல் இலங்கை விவகாரங்களை தமது சார்பில் நேரடியாக கையாளக்கூடிய சிறப்பு பிரதிநிதியை நியமிப்பது குறித்து பிரதமர் மோடி ஆலோசிப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அவ்வாறு நியமிக்கப்படும் சிறப்பு பிரதிநிதியானவர் வெளிவிவகார அமைச்சர், அவ்வமைச்சின் செயலாளர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருக்கும் மேலான அதிகாரங்களைக் கொண்டு செயற்படக்கூடியவராக இருப்பார் என்றும் டெல்லி தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனை ஒரு நல்ல ஆரம்பமாகவே பார்க்கலாம். இன்று தமிழ் மக்கள் தாங்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் எதிர்கொள்ளும் பல்வேறு நெருக்கடிகளுக்கும் ஏதோ ஒரு வகையில் தீர்வு ஏற்பட்டு, அச்சுறுத்தல்கள், ஆக்கிரமிப்புக்கள் இன்றி சுதந்திரமானதோர் ஜனநாயக சூழலில் வாழவே விரும்புகின்றனர். இதற்கான முன்னோடி நடவடிக்கைகளை இந்தியாவின் புதிய அரசு ஏற்படுத்த வேண்டும்.

வேறெந்த நாடும் தமிழர் பிரச்சினை தொடர்பில் பேசுவதை விடவும் இந்தியா பேசுவதே யதார்த்தமானதான இருக்கும். இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும் அதனால் ஏற்படுத்தப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தையும் அமல்படுத்தும்படி இந்தியா வலியுறுத்தினாலேயே தமிழ் மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள பெருமளவிலான பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்பட்டு விடும். இந்தியா தமிழர் பிரச்சினை என்று மட்டும் இதனைப் பார்க்காது, தனது நாட்டின் பூகோள நலன்களை முன்வைத்தும், இலங்கை விவகாரங்களில் வேறு நாடுகளை உள் நுழையவிடாமல் பார்க்க வேண்டிய தேவையுள்ளதையும் இங்கு குறிப்பிட வேண்டும். வடக்கில் மேற்கொள்ளப்படுகின்ற சில அபிவிருத்தி வேலைகளைக் காட்டியும், இந்திய மீனவர்களை விடுதலை செய்தும் இந்தியாவை திருப்திப் படுத்தும் செயற்பாடுகளையே இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள நினைப்பதாக தெரிகின்றது. நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்க டில்லி சென்ற இலங்கை ஜனாதிபதி பிரதமர் மோடியுடன் கலந்துரையாடியபோது இலங்கைக்கு விஜயம் செய்யு மாறு அவருக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பை நரேந்திர மோடி ஏற்றுக் கொண்டதாகவும், இலங்கைக்கு விஜயம் செய்வது குறித்து ஜூலை மாதத்திற்குப் பின்னர் முடிவெடுப்பார் என்றும் செய்திகள் கூறுகின்றன.

தமிழ் மக்களுக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றினை ஏற்படுத்த காலம் செல்லலாம். இன்று வடக்கு, கிழக்கில் அவர்கள் இராணுவ அச்சுறுத்தல்களுடன், நெருக்கு வாரங்களுக்குள் வாழும் நிலைக்கு உடனடி மாற்றம் எற்பட வேண்டும். அதற்கு இந்தியாவின் புதிய அரசாங்கம் முதலில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்காக இந்தியா வழங்கும் உதவிகளைக் கூட அதற்கு அடுத்த விடயமாகவே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆகவே. இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வரும்போது வடக்கு கிழக்கிற்கும் அவர் விஜயம் செய்ய வேண்டும். அங்கு அச்சமின்றி ஜனநாயக சூழலில் மக்கள் வாழ்வதை அவர் காண வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை அவர் வருமுன்னர் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நரேந்திர மோடி அவர்களின் இலங்கை விஜயம் அர்த்தமுள்ளதாக அமையும்.


# COTTAGE FOR SALE



- *2 bed rooms, kitchen, living room, and a bunkie, Front and back deck*
- *Fully insulated year around cottage.*
- *Over viewing George and bay lake, Hour and half drive from Scarborough*
- *15 min away Midland church Country side living and*
- *30000 thousand island cruise ,*
- *Drive in theatre, beaches, rail walk along the lake*
- *Appox .5 acre land*
- *Lots of trees*

***Price is $ 137,900***

**Uthayan: 416.818.5493**



Kingston Road, Westhill Drive




3 Bedrooms, 3 W Rooms
Excellent Opportunity To Own Gorgeous & Upgraded Executive Freehold Thouse

Mccowan/Denison




4+2 Bedrooms, 4 W Rooms
Excellent Opportunity To Own Absolutely Gorgeous

Kennedy/S.Major Mac




3 Bedrooms, 3 W Rooms
Excellent Opportunity To Own Absolutely Gorgeous

Mcowan And Lawrence




3 Bedrooms, 1 W Rooms
First Time Offered For Sale In The Last 55 Years. 3 Bedroom Sidesplit

Brimley/Lawrence




3+1 Bedrooms, 2 W Rooms
Well Maintained & Updated Freehold Executive 3+1 Townhouse

16th Ave & 9th Line




2+1 Bedrooms, 3 W Rooms
Located In The Popular Cornell Community Facing School & Park

Markham/ N Of Sheppard




3+1 Bedrooms, 4 W Rooms
1997 Built With Brick Exterior & Fully Finished Basement W/ 3Pc Washroom

Ironwood/Millard




3+1 Bedrooms, 4 W Rooms
Location In The Heart Of Stouffville.

Morningside/Oasis




4+1 Bedrooms, 4 W Rooms
Beautiful Detached 2 Story Brick Home Built By Mattamy

9th Line/14th Ave




3+1 Bedrooms, 4 W Rooms
Beautiful, Luxurious 3+1 Br House In The High Demand Box Grove Area

Middlefield/Denison




4+2 Bedrooms, 4 W Rooms
Fin Bsmnt Apartment Rented For 950/Per Month W/ 2Bdrms & Sep. Side Entrance

E Of Tenth Line & N Of Hoover




4 Bedrooms, 4 W Rooms
Over 2600 Sq.Ft Of Fieldgates Finest. 9 Foot Ceilings, Hardwood

Boxgrove Bypass & 14th Ave





4 Bedrooms, 3 W Rooms
2Beautiful & Extremely Bright 4 Bedroom Corner Unit On Extra Large Lot

Markham / 16th Ave




4+2 Bedrooms, 5 W Rooms
Custom Hardwood Flooring Through-Out. Concrete Patio In Backyard, Front Interlock

Taunton & Salem




9 Bedrooms, 12 W Rooms
Palatial 10 Bdr Estate On 1.83 Acres In Prestigious Cachet Estates Area

Sell your home

# FASTER

and more **MONEY**

## Elaguppillai Srinathan (Mike) B.Sc

**Direct 416 - 276-1225**

**Your home sold in 30 days or we buy it**



KZG 647-200-5833

**Ph1-7800 Woodbine Ave**
**Markham, ON L3R 2N7**
**Office: 905-470-9800**
**Fax: 905-470-7770**

Email: esrinathan@yahoo.com

I can also assist your Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# SPECIAL DEAL FOR BUYERS & SELLERS

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
|---|---|
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |

**Also Free Moving**

## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

## Get More $$$ For Your House By Calling Me!

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

**(This Deal Start From March 01st to November 30th)**



**Lourdson Antonipillai**
(Sales Representative)

**Dir: 416.738.8824**
**Offi: 905.201.9977**

HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

HOMELIFE HIGHER STANDARDS

*Independently Owned & Operated


# காலத்தோடு வளரும் கணினிகள் - 46

அன்பான வாசகர்களே!

விளம்பரம் பத்திரிகையில் "வெகுளாமை" என்ற தலைப்பில் என்னால் எழுதப்பட்ட தொடர்கட்டுரை நூலுருவில் வெளி வந்துள்ளது என்ற செய்தியை வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். வாசகர்களாகிய உங்களில் பலர் வெளியீட்டு நிகழ்வில் கலந்து சிறப்பித்தமைக்காக எனது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நிகழ்வில் கலந்து சிறப்பித்த விளம்பரம் நிறுவனத்தினர்க்கும், சக எழுத்தாளர்களுக்கும் எனது நன்றிகள். இந்த நூலின் பிரதியை வாங்கிக் கொள்ள விரும்புபவர்கள் விளம்பரத்தின் பணிமனையு டன் தொடர்பு கொள்ளவும். இந்த நூலினை வாசித்து நீங்களும் பயனடைவதோடு மேலும் பல படைப்புக்களைக் கொண்டு வருவதற் கான ஊக்கத்தைத் தாருங்கள். இந்த நூல் சுய முன்னேற்றத்திற்கான அறிவியல் நூலாக அமைந்து உள்ளது. நூல் பற்றிய உங்கள் கருத்துக்களையும் தெரிவியுங்கள். வாசகர் களாகிய நீங்களே எனது படைப்புக்களிற் கான உந்து சக்தி என்பதில் ஐயமில்லை. இந்தத் தொடர்கட்டுரையையும் நூலிருவில் கொண்டு வருமாறு பல வாசகர்கள் வேண்டு கோள் விடுத்திருக்கின்றார்கள். எல்லாம் வல்ல இறைவன் செயலால் அதுவும் நிறைவேறும் என நம்புகின்றேன்.


இந்தக் குறிப்புடன் தொடர்கட்டுரையைத் தொடர்கின்றேன். கடந்த இதழில் வரைபியல் வடிவமைப்பு மென்பொருட்கள் பற்றி உரையாடினோம். இவ்வாறாக ஒவ்வொரு விதமான பயன்பாட்டிற்கும் ஏராளமான பயன் பாட்டு மென்பொருட்கள் உள்ளன. கணக்கியல், பொறியியல், மருத்துவம், உயிரியல் விஞ்ஞானம் எனப் பல்வேறு துறைகளில் உள்ளவர்களும் கணினியைத் தமது நாளாந்த வேலைகளில் பயன்படுத்தும் விதமாக மின்பொருட்கள் பாவனையில் உள்ளன. இந்தத் தொடர்கட்டுரையில் பொது அறிவிற்காக யாராலும் பயன்படுத்தக்கூடிய வெவ்வேறு பயன்பாட்டிற்கான மென்பொருட் கள் பற்றி உரையாடிக் கொண்டோம். குறிக்கப்பட்ட தொழில் சார்ந்த மென்பொருட் களைப் பற்றி இந்தத் தொடர்கட்டுரையில் உரையாடுவது பொருத்தமான விடயமாக இருக்காது என நம்புகின்றேன். இவ்வாறான மென்பொருட்கள் பற்றி உரையாடுவதற்கு குறிக்கப்பட்ட துறையில் வாசகர்களுக்கு ஈடுபாடும், துறைசார் கல்வியும் அவசியம் என்பதே இதற்கான காரணமாகும். எந்தத் துறையிலும் உள்ள மென்பொருட்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு கூகிள் சேர்ச் (Google Search) பண்ணி அறிந்து கொள்ளலாம். சில துறைகளில் உள்ள மென் பொருட்களை மட்டும் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றேன்.

மிகவும் பிரசித்தி பெற்ற மென்பொருட்கள் அந்தந்த தொழில் புரிபவர்களால் அறியப் பட்டு இருக்கும். தாங்கள் செய்யும் தொழிலி ற்கு ஏற்றவாறு பொருத்தமான மென் பொருட்களில் செயன்முறை அறிவு பெற்றிருத்தல் அவசியமாகின்றது. உதாரண மாக intuit நிறுவனத்தின் Quickbooks என்ற மென்பொருள் கணக்கியல் துறையில் உள்ளவர்கள் கட்டாயமாக அறிந்திருக்க வேண்டிய ஒரு மென்பொருள் ஆகும். Sage 50 என்பதும் கணக்கியற் துறை சார்ந்த மென்பொருள் ஆகும். ஆரம்ப காலங்களில் கணக்கியல் வேலைகளைச் செய்வதற்கு விரிதாள் (spreadsheet) மென்பொருட்களே




பயன்படுத்தப்பட்டன. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் பெரிய அளவிலான கணக்கியல் அமைப்புக்கள் கணினியில் வந்தன. ஐபிஎம் இனது கணக்கியல் மென்பொருளில் இருந்து படிப்படியாக பல கணக்கியல் மென்பொருட்கள் வெளிவரத் தொடங்கின. சப் (SAP) என்பது ஒரு ஜேர்மனிய மென்பொருள் நிறுவனம் ஆகும். 1973இல் இந்த நிறுவனம் SAP R1 என்ற பெயரில் தனது முதலாவது வர்த்தகப் பாவனைக்கான மென்பொருளை வெளி யிட்டது. அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட முதலாவது கணக்கியல் மென்பொருள் பீச்ரீ அக்கவுண்டிங் (Peachtree Accounting) ஆகும். இந்த மென்பொருள் 1976ஆம் ஆண்டு வெளிவந்தது. குவிக்கின் (Quicken) மென்பொருள் 1983ஆம் ஆண்டு இன்ருயிற் (Intuit) நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப் பட்டது. சிம்பிள் அக்கவுண்டிங் (Simple accounting) என்ற மென்பொருள் சிம்பிள் பிளானிங் (Simple Planning) என்ற நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. அக்கவுண்ட் எட்ஜ் (Account Edge) என்ற கணக்கியல் மென்பொருளை அக்கிலிவிற்றி (Acclivity) என்ற நிறுவனம் உருவாக்கி யுள்ளது. இவற்றைத் தவிர Netsuite, Unit4, Yendo Solo, Free Agent, Less Accounting, WorkingPoint எனப் பல கணக்கியல் மென்பொருட்கள் பாவனையில் உள்ளன. கனடாவில் Quick Books மிகவும் பிரபல்யமாக உள்ளது.

பொறியியல் (Engineering), கட்டிடக்கலை (Architecture) போன்ற துறைகளில் பல படங்களை வரையவேண்டியிருப்பதால் கொம்பியூட்டர் எயிடட் ராவ்றிங் (Computer Aided Drafting) மிகவும் முக்கியமான ஒரு விடயமாகக் கருதப்படுகின்றது. இதனை கொம்பியூட்டர் எயிடட் டிசைன் அன்ட் ராவ்றிங் (Computer Aided Design and Drafting) என்றும் அழைக்கப்படுகின்றது. இதற்கான மென்பொருட்கள் இப்பொழுது முப்பரிமாணப் (Three Dimension) படங்களை உருவாக்கக் கூடியதாக வளர்ச்சி பெற்றிருப்பது முக்கியமானது. 1940இற்கும் 1950இற்கும் இடைப்பட்ட காலத்திலேயே CAD மென்பொருட்கள் வந்து விட்டன. ஆனால் இந்தக் காலத்தில் உலகில் ஒரு சில மிகப்பெரிய நிறுவனங்களால் மட்டுமே பயன்படுத்தப்படும் விடயமாக இருந்தது. 1980இற்கும் 1990இற்கும் இடையில் இந்த நிலைமை மாறி பரவலாகப் பயன்படுத்தப் படும் விடயமாக முன்னேற்றம் அடைந்தது. ஆனாலும் அப்பொழுது முப்பரிமாண வசதிகள் இன்றிக் காணப்பட்டது. இந்தக் காலத்தில் முப்பரிமாண வசதிகளுடன் கூடிய வலுவான CAD மென்பொருட்கள் பயன் பாட்டில் உள்ளன. இவைபற்றி அடுத்த இதழில் உரையாடுவோம்.




என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமை போல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரி யப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும். அன்புடன் அகணி

அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com



# இந்தியாவின்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

ராஜபக்சாவை அழைப்பதை தவிர்க்க கோரினார். அப்படி இல்லையெனில் போராட்டம் நடத்துவோம் என்றும் வைகோ எச்சரித்தார். இந்நிலையில் ராஜபக்சாவின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து டெல்லி ஜந்தர் மந்தரில் கறுப்புக் கொடி ஏந்தி மதிமுகவினர் வைகோ தலைமையில் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான மதிமுக வினர் கலந்து கொண்டனர். இந்தப் போராட்ட த்தின்போது ராஜபக்சாவைக் கண்டித்தும், ஈழப் படுகொலைகளைக் கண்டித்தும் வைகோ உள்ளிட்டோர் கோஷம் எழுப்பினர். போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் பின்னர் டெல்லி பொலீஸார் கைது செய்து வானில் ஏற்றி அப்புறப்படுத்தினர்.

## தினமணி ஆசிரியர் தலையங்கம்

இதுவரை தேசிய அரசில் அங்கம் வகிக்காதவர், வெளிவிவகாரக் கொள்கை பற்றிய சரியான புரிதல் இல்லாதவர் என்றெல்லாம் கருதப்பட்ட ஒரு மாநிலத்தின் முன்னாள் முதல்வர் இந்த அளவுக்கு ராஜதந்திரமாகத் தனது பிரதமர் பொறுப்பில் செயல்படுவார் என்பதை யாருமே எதிர் பார்த்திருக்க முடியாது. தீவிர இந்துத்துவா கொள்கையாளர், பாகிஸ்தானிய எதிர்ப்பாளர் என்றெல்லாம் நரேந்திர மோடி மேலைநாட்டு ஊடகங்களால் வர்ணிக்கப்பட்டும், அவர் பிர-தமரானால் இந்திய பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே அணு ஆயுத யுத்தம் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டும் இருந்த வேளையில், அதிர்ச்சி வைத்தியம் அளித்திருக்கிறார் நரேந்திர மோடி.

தனது தேர்தல் பிரசாரத்தில் வளர்ச்சிப் பாதையில் இந்தியாவை இட்டுச்செல்வேன் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்த மோடி, இந்தியாவைப் பொருளாதார வல்லரசாக்க அண்டை நாடுகளுடனான சுமுக உறவு இன்றியமையாதது என்று புரிந்து வைத்திருக்கிறார் என்பது தெரிகிறது. கடந்த நிதியாண்டுகளில் பாதுகாப்புக்காக நமது நிதி நிலை அறிக்கைகளில் செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடு முறையே ரூ.1,93,407 கோடியும், ரூ.2,03,672 கோடியும். ஆண்டுதோறும் ஏறத்தாழ 2 லட்சம் கோடி ரூபாயை ராணுவத்துக்காக நாம் செலவிடுகிறோம். அண்டை நாடுகளுடன் இந்தியா சுமுகமான உறவை ஏற்படுத்திக் கொள்ளுமேயானால், இந்த ஒதுக்கீட்டில் பாதித்தொகை நமது கட்டமைப்பு வசதிகளுக்குப் பயன்படும். இதை நரேந்திர மோடி உணர்ந்திருக்கிறார் என்று தெரிகிறது.

ஐரோப்பிய நாடுகள் ஒருங்கிணைந்து ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பை ஏற்படுத்தி விட்டன. மத்திய ஆசிய நாடுகள் 'எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள்' என்கிற பெயரில் ஒருங்கிணைந்திருக்கின்றன. கிழக்காசிய நாடுகள் 'ஆசியான்' என்கிற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இப்படி அண்டை நாடுகள் ஒன்றுபட்டால் மட்டுமே இன்றைய சர்வதேச அரங்கில் எந்தவொரு பகுதியும் வளர்ச்சிப் பாதை யில் செல்ல முடியும் என்கிற நிலைமை. இந்தியாவில் இந்திரா காந்திக்குப் பிறகு துணிவும், திறமையுமுள்ள ஒரு நல்ல தலைமை அமையாமல் போனதால்தான் தெற்கு ஆசியா மட்டும் பிரிந்து கிடக்கிறது. நரேந்திர மோடியின் நல்லெண்ணத்தை, அவரால் தொடர்ந்து விமர்சிக்கப்பட்ட பாகிஸ்தான் புரிந்துகொண்டு, பாகிஸ்தானின் பிரதமர் நவாஸ் ஷெரீப் பதவி ஏற்பு விழாவுக்கு வந்தார். இலங்கை அதிபர் ராஜபட்ச பதவி ஏற்பு விழாவுக்கு வருவதற்கு தமிழகத்திலிருந்து எதிர்ப்புக் குரல்கள் வந்தன. நரேந்திர மோடிக்கு விசா வழங்க மறுத்த அமெரிக்க அரசு, அவர் பிரதமரானவுடன் ராஜாங்க ரீதியிலான அழைப்பு விடுத்திருப்பதை நமது தமிழகத் தலைவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கை அதிபர் ராஜபட்ச ஒரு போர்க் குற்றவாளி என்று உலக நாடுகளுடன் சேர்ந்து இந்தியாவும் குரல் கொடுக்கலாம். ஆனால் அவர் இலங்கை அதிபரல்ல என்று ஆகிவிடுமா? அவருடன் பேசமாட்டோம், அவரை அழைக்க மாட்டோம் என்று நாம் முடிவெடுத்தால், போருக்குப் பின் வாழத் துடிக்கும் லட்சக்கணக்கான தமிழர்கள் ஈழத்தில் உயிருடன் இருக்கிறார்களே, அவர்கள் கதி என்ன? நாளும் பொழுதும் நமது மீனவர்கள் சிறைபிடிக்கப் படுகிறார்களே, அவர்களைப் பாதுகாப்பது எங்ஙனம்? கோடிக்கணக்கில் இலங்கையின் வடக்குப் பகுதியைப் புனர் நிர்மாணம் செய்ய இந்தியா வழங்கிய பணம், இலங்கையின் தென் பகுதியை வளப்படுத்துவதாகக் கூறப்படுகிறதே, அதைக் கண்காணித்துத் தட்டிக்கேட்பது எப்படி? அதிபர் ராஜபட்சவின் செயல்பாடுகள் ஏற்புடையவை அல்லதான். அதற்குத் தீர்வு இலங்கையுடன் போர் தொடுப்பதல்ல, அவரை அழைத்துப் பேசுவது, பணிய வைப்பது. அதிபர் ராஜபட்ச வுடன் பேசாமல் இருப்பதாலோ இலங்கையை முற்றிலுமாகப் புறக்கணிப்பதாலோ நாம் சாதிக்கப்போவது என்ன என்பதை தமிழக அரசியல் கட்சிகள் சிந்திக்க கடமைப் பட்டுள்ளன. கடைசியாக ஒரு வார்த்தை. நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, பாகிஸ்தானும் இலங்கையும் நமது அண்டை நாடுகள். அந்த நாடுகளுடன் நட்புறவு பாராட்டி நாம் இயங்கியாக வேண்டும். ஆப்பிரிக்காவுக்கு அப்பால், அல்லது அண்டார்டிக்காவுக்குப் பக்கத்தில் விலகிப்போ என்று சொல்ல முடியாது. ஈழத்தில் போர் நடந்தபோது மத்திய அரசில் அங்கம் வகித்து மௌனம் காத்து துரோகம் இழைத்தவர்களையே நம்மால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இன்னொரு நாட்டு அதிபரான ராஜபட்சயை கண்டிக்க நினைக் கிறோமே, என்ன வேடிக்கை இது? புதிய பிரதமர் புத்திசாலித்தனமாகக் காயை நகர்த்த எத்தனிக்கிறார். அவரது ராஜதந்திர நடவடிக் கைக்கு, நமது தமிழக அரசி யல் கட்சிகள் முட்டுக்கட்டை போடாமல் இருக்கக் கடவது!

## இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார்

இந்தியாவுக்கு வருகை தந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கையுடனான அதன் உறவுகளை இந்தியா மதிப்பதாக ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார். ஒன்றுபட்ட இலங்கையில் சமத்துவம், நீதி மற்றும் சமாதானம் மிக்க ஒரு வாழ்க்கைக்கான தமிழ் சமூகத்தின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையிலான தேசிய நல்லிணக்கத்துக்கான செயல் முறையை துரிதப்படுத்த ராஜபக்ஷவிடம் மோடி கோரிக்கை விடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 13 ஆவது சட்டத்திருத்தத்தை கூடியவிரைவில் அமல்படுத்துவது இந்த செயல்முறைக்கு வழிவகுக்கும் என்றும் மோடி ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார். மே 27, 2014 இல் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுடனான மோடியின் சந்திப்பு குறித்து பேசிய இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் சுஜாதா சிங், 'மீனவர்கள் விவகாரம் குறித்தும், இந்தியாவின் வளர்ச்சி உதவி திட்டம் குறித்தும் பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு குறித்தும் இரு நாட்டு தலைவர்களும் கலந்துரையாடினர். குறிப்பாக 500 மெகாவாட் சம்பூர் நிலக்கரி மின் திட்டம் தொடங்கப்படுவது தொடர்பிலும் இரு நாடுகளுக்கு இடையிலான இணைப்புகளை அதிகப்படுத்துவது தொடர்பிலும் இந்திய பிரதமர் விருப்பம் தெரிவித்தார். இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இரு நாட்டு தலைவர்களும் வலியுறுத்தினர்", என்றார்.

ஈழத்தமிழர் பிரச்சனையில் 13வது அரசியல் சாசன திருத்தம் போன்ற காலாவதியான தீர்வை தற்போதைய பாஜக அரசு முன்வைக்கிறது என்ற அதிருப்தி குரல்கள் ஒருபக்கம் இருக்க முந்தைய பிரதமர்களைப் போல இல்லாமல் இலங்கை அதிபர் ராஜபக்சாவிடம் பிரதமர் நரேந்திர மோடி சற்றே கடுமையான தொனியில்தான் தமது கருத்துகளை முன்வைத்ததாகவும் வெளியுறவுத்துறை அமைச்சக வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்ற போது அனைத்து சார்க் நாடுகளின் தலைவர்களையும் அழைத்திருந்தார். இதில் இலங்கை அதிபர் ராஜபக்சாவும் இந்தியாவுக்கு வருகை தந்திருந்தார். அவருடன் 20 நிமிட நேரம் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த பேச்சுவார்த்தையில் ஈழத்தமிழர் பிரச்சனைக்கு தீர்வாக இலங்கை அரசு விரும்பாத 13வது அரசியல் சாசன திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட விஷயங்களை "கறாராக" பிரதமர் மோடி வலியுறுத்தியதாக கூறப்படுகிறது.

அத்துடன், தமிழர் தாயகப் பிரதேசத்தில் இலங்கை ராணுவத்தினர் நில அபகரிப்பில் ஈடுபடக்கூடாது, தமிழர் தாயகப் பகுதியில் இருக்கும் ராணுவத்தினரை விரைவில் வெளியேற்றிவிட்டு பொலீஸாரிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும், பொலீஸ் அதிகாரங்களை கட்டுப்பட்டுத்தும் உரிமையை மாகாண சபையிடம் கொடுக்க வேண்டும், இந்தியாவுக்கு உறுதியளிக்கப்பட்டபடி தமிழர் பிரச்சினைக்கு



13வது அரசி யல் சாசன திருத்தம் மற்றும் அதற்கு அப்பால் சென்று அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையை தாமதிக்காமல் செயல்படுத்த வேண்டும் என்பதை "கறாரான" குரலில் ராஜபக்சாவிடம் பிரதமர் மோடி கூறியிருக்கிறார்.

பிரதமர் மோடியின் இந்த "கறார்" குரலை ராஜபக்சா எதிர்பார்க்கவில்லை என்பதால் இறுக்கத்துடனேயே அவரும் பேசியிருக்கிறார். மேலும் பிரதமர் மோடியின் கருத்துகளுக்கு பதிலளித்த ராஜபக்சாவோ, இப்பொழுதுதானே யுத்தம் முடிந்துள்ளது. சிறிது காலம் எடுக்கும் என்று பதிலளித்திருக்கிறார். அப்போது இடைமறித்த பிரதமர் மோடி, யுத்தம் முடிந்து 5 ஆண்டுகள் ஓடிவிட்டன. இனியும் தாமதிக்காமல் நடைமுறைப்படுத்துங்கள். இதில் உங்களுக்கு பிரச்சனை எனில் இந்தியா நேரடியாக தலையிட்டு உதவும் என்றும் பிரதமர் மோடி கூறியிருக்கிறார்.

வெளியுறவுத்துறை செயலர் சுஜாதாசிங்கிடம், முன்பு இலங்கைத் தரப்பில் நமக்கு என்ன உறுதிமொழி தரப்பட்டது?

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# தவறான மருத்துவ சிகிச்சையின் விளைவுகளுக்கு கனடாவில் நட்டஈடு கோரல்!

## *MEDICAL MALPRACTICE COMPENSATION*

## கனடிய தகவல் தொடர் 219

1991 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம். ஸ்காபரோவில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் நள்ளிரவு நேரம் அந்தத்தமிழ் பெண்ணுக்கு சுகப்பிரசவமாக குழந்தை பிறந்தது. பிரசவத்தினை முடித்துக் கொண்ட மருத்துவர்கள் யாவரும் தங்கள் வழமை யான இருப்பிடங்களுக்கு சென்று விட்டனர். உறக்க நிலையில் இருக்கின்றார் என கருதிவிட்டிருந்த அந்த தாய் சுயநினைவற்ற நிலைக்கு சென்று முகத்தில் நீல நிறமான படலம் ஒன்று படர்வதனை அவதானித்த அருகில் நின்ற கணவன் தாதிமாருக்கு ஓடிப்போய் முறைப்பாடு செய்தார். அவர் களும் தாம் பிரசவத்தின்போது விட்டிருந்த தவறினை உணர்ந்து அவசர சத்திர சிகிச்சையினை உடனடியாக மேற் கொண்டு, தாயின் கருப்பையினை முற்றாக அகற்றி அந்த பெண்ணின் உயிரை அந்த கணத்தில் தெய்வாதீனமாக காப்பாற்றி விட்டனர்.

பிரசவத்தின் போது வழமையாக செய்யும் கருப்பை நச்சுக்கொடியை அகற்ற மறந்து விட்ட ஒரு மருத்துவ ரீதியான தவறே இந்த ஆபத்தான நிலைக்கு காரணம் என அந்த நேரம் விளக்கம் கூறப்பட்டது. என்னவோ? அந்த இளம் பெண்ணின் உயிர் காப்பாற்றப்பட்டு விட்டது. ஆனால் பிரசவம் பார்த்த மருத்துவர்களின் கவனயின்மை யால், கருப்பை அகற்றப்பட்டது. இதனால் இனிமேல் காலங்களில் அடுத்த வாரிசினை கற்பனை பண்ணியும் பார்க்க ஏலாது என்ற நிலை உருவானது.

அவர்களின் குடும்ப வைத்தியர் ஒரு தமிழ் பெண் வைத்தியர். இப்போது ரொறொன்ரோ வின் வைத்தியசாலைகளில் இருப்பது போல தமிழ் ஊழியர்களோ அல்லது மொழி பெயர்ப்பாளர்களோ இல்லாத காலம். அவர் வைத்தியசாலை மருத்துவர்கள் குழுவினை பயங்கரமாக கண்டித்துவிட்டு, இது சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, மருத்துவ நீதிமன்றத்திற்கு போனால் என்ன நடக்கும் என்று தெரியுமா? என்ற பாணியில் ஒரு எச்சரிக்கையினை மட்டும் வழங்கிவிட்டு இருந்து விட்டாராம். அந்தக்காலகட்டத்தில் கனடாவுக்கு தமிழர்கள் புதிய குடிவரவினர். எல்லாமே ஒரு புதிய உலகில் வாழ்வினை ஆரம்பித்தது போன்ற பிரமை. அந்த சம்பவமும் அத்துடன் மூடப்பட்டுவிட்டது.

ஜனவரி 01, 2014 இல் வெளிவந்த 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில் வைத்தியசாலை மருத்துவதுறையினர் விட்ட தவறினால் ஒரு சிறுமியின் வாழ்வினை பாதித்த சம்பவம் ஒன்று மருத்துவ நீதிமன்ற விசாரணைக்கு வந்து பல வருடங்களாக இழுபட்டு முடிவில் 21 மில்லியன் டொலர் நட்டஈடு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டும் என தீர்ப்பு வெளியாகி இருந்தது. இந்தக்கட்டுரையைன படித்த பின்பே இவை சம்பந்தப்பட்ட விபரங்களை எனது வழமையான தகவல் கட்டுரைக்காக பல இடங்களில் எடுத்துப் படித்தேன். அதன் சாராம்சம் தான் இது.

### நடந்தது என்ன?

ஏப்ரல் 22, 2001 ஆம் ஆண்டு, இரவு சுமார் ஏழு மணி.

மிசுசாகாவில் வாழும் திரு. மக்சூட் டின் (Mr. Maqsood Din), திருமதி. பெய்யா டின் (Mrs. Faiza Din) என்னும் இளம் தம்பதிகளின் மூன்று குழந்தைகளில் மூன்றாவது பெண் நிசா டின் (Niza Din) ஐந்து மாதக்குழந்தை. அதன் வாழ்வு மருத்துவர்களின் தப்பான மதிப்பீடுகளினால் மாறிப்போய்விட்டது. அந்த ஐந்து மாதக் குழந்தைக்கு இரவு நேரம் காய்ச்சல் அதிக மாகியிருந்தது. குழந்தையின் இருதயம் ஏதோ விரைவாக துடிப்பது போல தென்பட்டது. குடித்த பாலை வாந்தியாக வெளியேற்றியது. தொடர்ச்சியான அழுகையினையும் நிறுத்தவில்லை.

இரவு இரவாக ஏதோ ஒருவழியில் சமாளித்து கொண்டிருந்த குழந்தையின் பெற்றோர் அதிகாலை 2:26 மணியளவில் குழந்தையினை பிரம்ரன் - வில்லியம்




சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 18ஆம் பக்கம்


உங்கள் வருங்கால உறவுகளை மில்லியனராக்க






Siva Mailvaganam
Direct: 416 230 2991
Fax: 416 298 4664 Email: Rajah.Siva@yahoo.ca
80 Nashdene Rd Unit B 25-26 Ontario M1V 5E4

Build An Investment & Protection For Your Loved Ones

BONUS: Arrange The Best Auto & Home Insurance Rates In The GTA

| TAX FREE MONEY | AGE | FEMALE | | | MALE | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Term 10 | Term 20 | Term 40 | Term 10 | Term 20 | Term 40 |
| $ 500,000 (half million) | 25 | $ 19.25 | $ 27.00 | $ 42.75 | $ 29.70 | $ 37.35 | $ 54.45 |
| | 30 | $ 20.70 | $ 28.35 | $ 47.70 | $ 30.15 | $ 38.70 | $ 75.15 |
| | 35 | $ 25.20 | $ 33.75 | $ 80.10 | $ 30.15 | $ 43.65 | $ 108.0 |
| | 40 | $ 30.60 | $ 44.10 | $ 119.7 | $ 38.70 | $ 57.60 | $ 168.70 |

TERM PLAN - CONVERTIBLE/RENEWABLE WITHOUT ANY MEDICAL EXAMINATIONS UP TO AGE 85.

RBC Royal Bank · IA Pacific · BMO · Canada Life · Manulife Financial · Assumption Life · Royal Brokers

- Super Visa (100% REFUNDABLE)
- RRSP (SAVE 40%)
- RESP (SAVE UP TO $9200)
- Critical Illness Insurance (100% CASH BACK)
- Life Insurance
- Non-Medical Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Travel Insurance
- 100 Years Term
- 40 Years Term

| | இந்திய தேர்தல் முடிவுகள் 2014 | |
|---|---|---|
| | Party | Seats |
| | National Democratic Alliance | 336 |
| 1 | Bharatiya Janata Party | 282 |
| 2 | Shivsena | 18 |
| 3 | Telugu Desam Party | 16 |
| 4 | Lok Janshakti Party | 6 |
| 5 | Shiromani Akali Dal | 4 |
| 6 | Rashtriya Lok Samta Party | 3 |
| 7 | Apna Dal | 2 |
| 8 | Naga Peoples Front | 1 |
| 9 | Pattali Makkal Katchi | 1 |
| 10 | Swabhimani Paksha | 1 |
| 11 | All India N.R. Congress | 1 |
| 12 | National Peoples Party | 1 |
| | National Democratic Alliance (Outside Supporters) | 15 |
| 1 | Yuvajana Sramika Rythu Congress Party | 9 |
| 2 | All India United Democratic Front | 3 |
| 3 | Indian National Lok Dal | 2 |
| 4 | Sikkim Democratic Front | 1 |
| | United Progressive Alliance | 59 |
| 1 | Indian National Congress | 44 |
| 2 | Nationalist Congress Party | 6 |
| 3 | Rashtriya Janata Dal | 4 |
| 4 | Indian Union Muslim League | 2 |
| 5 | Jharkhand Mukti Morcha | 2 |
| 6 | Kerala Congress (Mani) | 1 |
| | Others | 133 |
| 1 | All India Anna Dravida Munnetra Kazhagam | 37 |
| 2 | All India Trinamool Congress | 34 |
| 3 | Biju Janata Dal | 20 |
| 4 | Telangana Rashtra Samithi | 11 |
| 5 | Communist Party of India (Marxist) | 9 |
| 6 | Samajwadi Party | 5 |
| 7 | Aam Aadmi Party | 4 |
| 8 | Jammu & Kashmir Peoples Democratic Party | 3 |
| 9 | Janata Dal (United) | 2 |
| 10 | Janata Dal (Secular) | 2 |
| 11 | Communist Party of India | 1 |
| 12 | Revolutionary Socialist Party | 1 |
| 13 | All India Majlis-E-Ittehadul Muslimeen | 1 |
| 14 | Independent | 3 |
| | Total | 543 |

# இந்தியாவின்...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

என்று கேட்க, 13வது அரசியல் சாசன திருத்தத்துக்கும் அப்பால் சென்று அதிகாரப் பகிர்வு அளிப்பதாக உறுதியளிக்கப்பட்டிருக்கிறது என்றாராம். ராஜபக்சாவிடம் இதை சுட்டிக் காட்டிய பிர- தமர் மோடி, நீங்கள் அளித்த உறுதிமொழியைத்தான் நிறைவேற்றச் சொல்லுகிறோம். தாமதிக்க வேண்டாம் என்று சொல்ல இலங்கை அதிபர் ராஜபக்சாவின் முகத்தில் அதிர்ச்சிதான் வெளிப்பட்டதாம்.


கடந்த 30 ஆண்டுகாலம் இந்தியாவில் நிலையற்ற அரசு, உறுதியான வெளியுறவுக் கொள்கை எதுவும் இல்லாத நிலையில் இலங்கை தன் இஷ்டத்துக்கு செயல்பட்டு வந்தது. இந்தியாவை மதிப்பதாக இல்லாமல் இந்தியாவுடன் கண்ணாமூச்சி காட்டிக் கொண்டிருந்தது. ஆனால் மோடியின் இந்த கறார் பேச்சுவார்த்தையில் பொறி கலங்கினாராம் மகிந்த ராஜபக்சா. இந்திரா காந்தி அம்மையார் காலத்தில்தான் இந்தியா இப்படி கண்டிப்புடன் நடந்து கொண்டது என்பதையும் தமது சக அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறார் ராஜபக்சா. அத்துடன் இலங்கை அரசு ஊடகங்களில் பிரதமர் மோடி 13வது அரசியல் சாசன திருத்தம் பற்றியும் அதிகாரப் பகிர்வு பற்றியும் பேசியது குறித்து எந்த ஒரு பதிவையும் வெளியிடாமல் மறைத்து இருக்கிறார்.

நாட்டின் பிரதமராக மோடி பதவியேற்ற உடன் அத்தனை புன்முகத்துடன் டெல்லி வந்தார் இலங்கை அதிபர் ராஜபக்சா. அதன் பின்னர் பிரதமர் மோடியுடன் தனியே பேச்சுவார்த்தையும் நடத்தினார். ஆனால் முந்தைய பிரதமர் மன்மோகன்சிங்கிடம் எதிர்பார்த்த இணக்கத்தை மோடியிடம் அவரால் பெறமுடியவில்லை என்று கூறப்பட்டது. இதை உறுதிப்படுத்தும் விதமாக டெல்லியைவிட்டு இலங்கையில் கால் பதித்த உடனே இந்தியாவுடனான “சம்பூர்” அனல் மின் நிலைய திட்டத்தை உடனே செயல்படுத்துமாறு ராஜபக்சா உத்தரவிட்டிருக்கிறார்.

# சார்பியல்

17ஆம் பக்கத்தொடர்ச்சி

கலக்சிகளில் ஒன்றுதான். இக்கலக்சிக் கூட்டங்கள் நிலையாக நின்று சுற்றிக் கொண்டு இராமல், விண்வெளியில் அசைந்து செல்வதையும் ஹபிள் அவதானித்தார். அதனால் அவரது ஆராயும் மூளை இன்னமும் சுறுசுறுப்பை, கலக்சிக் கூட்டங்களின் இயக்கங்களை ஆய்வு செய்தார். ஹொப்பிளரின் விளைவுகளின் அடிப்படையில் பார்க்கும் போது கலக்சிக் கூட்டங்கள் எல்லாம் பொதுப்படையாகப் பார்க்கும் போது ஒன்றை விலத்தி ஒன்று படுவேகமாகச்




செல்வதைக் கண்டு கொண்டார். புவியில் இருந்து அவற்றின் தூரம் அதிகரிக்க அதிகரிக்க விலத்திச் செல்லும் வேகமும் அதிகரித்துக் கொண்டிருப்பதை அவதானித்தார். சில கலக்சிகளின் வேகம் மணிக்கு மில்லியன் மைல்களாகக் கூட இருந்தன. பேரண்டம் நிலையானதாக இருந்தால் இப்படியாக இருக்க முடியாதே என எண்ணிய அவரின் தொடர்ந்த ஆய்வுகள் பேரண்டம் விரிவடைந்து கொண்டு போவதைக் காட்ட, அதனை உலகினருக்கு அறிவித்தார். அயன்ஸ்ரைனின் புலச் சமன்பாடுகள் திருத்தமானவை என்பது, அது பற்றிய எதுவித விபரமும் தெரியாத ஹபிளின் கண்டுபிடிப்பால் உறுதி செய்யப்பட்டது. மீதியை அடுத்த தடவை பார்ப்போம்

விளம்பரம் பத்திரிகையை
இணையத்தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

# மூலநோயும்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

பாலுடன் + பேரீச்சம்பழம் சாப்பிடலாம். அப்பிள் தோல் அகற்றாமல் சாப்பிட வேண்டும். பழச்சாறு, தோடை, திராட்சை போன்றவை எடுக்கலாம். இரவில் வெந்தயத்தை தண்ணீரில் ஊறவைத்து காலையில் குடித்து வரலாம். உடல்நிலை குளிர்ச்சியாக வெப்பகன்று வாழலாம். பப்பாப்பழம், பழச்சாற்று பானங்கள் எடுப்பது நன்று. மேலும் மங்குஸ்தான் பழம், சாப்பாட்டிற்கு பின் எடுத்து வருதல் நன்று. இப்படி பலவகையான பழவகைகள் இங்கு செறிந்து காணப்படுகின்றன. எனவே இவற்றில் தகுந்தவற்றைப் பெற்றுக் கொள்ளவும். இவ்வியாதியால் பாதிக்கப்பட்டோர் பெரும்பாலும் தவிர்க்க வேண்டியவை. முக்கியமாக கோப்பி, ரீ, புகைத்தல், சிகரட், சுருட்டு புகையிலைப் பொடி போன்றவற்றை தவிர்த்தல் உத்தம மாகும். மற்றும் மது வகை, மாமிசம், மீன், முட்டைப்பொரியல், எண்ணெய்வகை, கரியல், பொரியல், பால் பொருட்கள், ஐஸ்கிறீம், கலர் பானங்கள், கடுகு, மசாலா வர்க்கம் தவிர்ப்பது சாலச் சிறந்தது.



விஞ்ஞான வளர்ச்சி வரமுன் பெரும்பாலும் இவ்வியாதிக்கு குணம் கிடைத்து வாழ்ந்தவர்கள் பல உளர். அவர்கள் பின்வருவற்றைக் கையாண்டு சுகம் பெற்றவர்கள் என்பதை அறிந்து கொள்வது நலம்தானே. மூலத்திற்கு வெளி, பிரயோக முறையில் மாதுள இலைக் கொழுந்தை அரிசி கிளைந்த நீரில் அவித்து எடுத்து ஓரளவு ஆற வைத்து மூலத்தில் வைத்து கட்டிவிட முளைப்பகுதி விழுந்து விடும். அடுத்து பசுவின் சலத்தில் புளியம் இலையை அவித்து அதில் இருந்து வரும் ஆவியை லேசாகப் பிடித்து பின் இலையை உரிய இடத்தில் வைத்து கட்டி விட குணம் கிடைக்கும்.

அடுத்து வேப்பம் விதைப்பருப்பை எடுத்து அரைத்து ஒரு இலை மேல் தட்டையாகப் பாகம் செய்து ஆசனப் பகுதியில் வைத்து இரவில் கட்டி காலையில் கழட்டிப் பார்க்க உரிய முளை கரைந்து விடுவதைக் காணமுடியும். இப்படிப்பல நிகழ்வுகள் உண்டு. உள் மருந்தாக சில குடிநீர் வகை, சூரணங்கள், லேகியம் போன்றவையும் பாவிப்பதுண்டு.

கடுக்காயை எடுத்து நன்கு தூளாக்கி மூலத்தில் தடவி வர உரிய தோல் சுருங்கி மூல முளை தெரியாமல் உள் சென்று விடும். மூலத்தால் இரத்தம் கசிந்தவண்ணம் இருந்தால் மாதுளம் பிஞ்சை நன்கு அரைத்து மோரில் கலந்து அருந்தி வரலாம்.

எள்ளு எடுத்து தண்ணீர் விட்டு அரைத்து வெண்ணெய் கலந்து பாவித்து வந்தால் நற்பயன் கிடைக்கும். கரும்பின் சாற்றை இடையிடையே பாவிப்பதினால் தக்க பயன் பெறமுடியும். நெல்லி ரசம், தோடம்பழம் போன்றவையும் நல்லதாகும். கடுக்காய் ,நெல்லிக்காய், தான்றிக்காய் சேர்த்து பவுடராக பாகம் செய்து பாவித்துப் பயன் பெற்றோர் பலர்.

எனவே இவை யாவும் விஞ்ஞான விருத்தியடையாத காலங்களில் அறிய முடிகின்றது. தற்பொழுது சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் இந்தியா,
இலங்கை போன்ற இடங்களில் உள்ளோர் இவற்றை கைவிடாது அனுபவரீதியில் பாவித்து இவ்வியாதியை தணிப்போரும் உளர். இவற்றைக் கையாளும் போது காலம், இடங்களுக்கு ஏற்ப பத்திய பாவனைகள் மிக முக்கியமாகும். எனவே இந்த நாட்டில் பத்திய பாவனை கடைப்பிடிப்பது கடினமாகும் என்பதை நாம் அறிவோம்.

# மூலநோயும் (Piles) உணவும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

### கடந்த இதழ் தொடர்ச்சி...

சிலருக்கு அஜீரணத்தினால் ஏற்படும் வயிற்றோட்டம் (கழிச்சல்) அடுத்து அடுத்து வருவதினால் மூலவியாதி ஏற்படவாய்ப்பு உண்டு. நீண்ட நேரம் தொடர்ந்து வாகனம் ஓட்டுவோருக்கும் (சாரதி), குதிரை சவாரி செய்வோருக்கும், மனநின்மதி அற்றோருக் கும், உறக்கம் இன்றித் தவிப்போருக்கும், கார உணவு உண்போருக்கும், தீவிரமான பசி இருந்தும் உரிய வேளை சாப்பிடாது விட்டாலும் வரவாய்ப்புண்டு.

ஒருவருக்கு மூலரோகம் இருக்கின்றதா? என்பதை அறிந்துகொள்ள சில வழிமுறை கள் உண்டு. இரதத்தக் கசிவு ஏற்பட்டு மூலம் வெளியில் தெரியாமல் இருந்தால் அது முதல் உள்மூலம் - ஆரம்பநிலையாக கருதலாம். இப்படி முதல் நிலையிலிருந்து நாட்பட்டபின் வெளிமூலம் தென்படும். வைத்தியர்களிடம் சென்று உரிய வைத்தியத்தை பெற்றுக்கொள்ளவும்.

சிலர் முக்கியமாக மலம் கழிக்கும்போது சாதாரணமாக மூலம் வெளியே வருவது உண்டு. பின் உள் உரிய இடத்திற்கு சென்று விடும். இப்படி மூலம் படிப்படியாக வெளியேறி வரும்போது நமது கையால் பிடித்து உள்தள்ளி விட லேசாக உள் செல்லும். இப்படி பலமுறை நடந்து இறுதியில் வெளியில் திரட்சியாகத் தங்கி விடும்நிலையும் உண்டு. இந்நிலை ஏற்பட்டால் அறுவை சிகிச்சைதான் பயன் தரும். தங்கள் வைத்தியர்கள் மேலும் சில காரணங்களைச் சொல்லுவார்கள்.



மேலும் வெளியில் வந்த மூலம் உள்செல்லாதிருந்தால் உரியவருக்கு பல சிரமநிலையை கொடுத்தவண்ணம் இருக்கும். இந்நிலை பெரும்பாலும் மலம் கழிக்கும் வேளையில் வெளிவந்து நிலையாக நின்று விடும். முறையாக ஆசனங்களில் அமரமுடியாது, அருவருப்பு நிலை தோன்றும். மலக்குடலில் ஒருவித அசௌகரிய நிலை ஏற்படும். மூலம் தள்ளி நிற்கும்போது ஓரளவு கசிவு நிலையும் தென்படும். அரிப்பு நிலையோடு அருவருப்பு நிலையும் தொடர்ந்து கொள்ளும். வலிக்கின்ற மாதிரி உணர்வும் சிலருக்கு தென்படக்கூடும். மலம் கழிக்கும்போது அடிக்கடி இரத்தம் வெளியேறிக் கொள்வதினால் சோகை நிலையும் ஏற்பட இடம் உண்டு. எனவே எதற்கும் தங்கள் வைத்தியரைக்கண்டு உரிய சிகிச்சை முறைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் இவ்வியாதியினால் ஆசனவாயில் வெடிப்பு நிலையும் ஏற்படுவதுண்டு. இதுபெரும்பாலும் மூலவெப்பு வியாதி எனவும் குறிப்பிடலாம். எனவே இந்நோய் எமக்கு வராது பாதுகாக்க மலபந்தம் இன்றி இருக்க வழியமைத்துக் கொள்ள வேண்டும்.

எதற்கும் நாம் பாவிக்கும் உணவில் தகுந்தவற்றை தேர்ந்து எடுத்தல் வேண்டும். உணவுமுறையை எடுத்துக் கொண்டால் நார்சத்துப்பொருட்கள் உத்தமமாகும். காய் கறிவகை, கீரைவகை, பழவகை வேண்டி யளவு பாவிக்க வேண்டும். நீர் தாரளமாக அருந்திவருதல் வேண்டும். வெப்பு நிலை ஏற்படாது பாதுகாக்க வேண்டும்.

மலவாசல் பரிசோதனை முக்கியமாகும். சிலவேளையில் புற்றுநோய்க்கு இடமாகி விடலாம். இரத்தச் சோகை ஏற்படாதிருக்க தகுந்த இரும்புச் சத்துள்ள உணவுவகை மற்றும் குளிகை வகைகளைத் தங்கள் வைத்தியர்களின் ஆலோசனைக்கு அமையப்பாவித்து வருதல் வேண்டும். சுத்தம் பெரும்பாலும் சுகம் தரும்.

நாட்பட்ட மலச்சிக்கலை தவிர்த்தல் சாலச்சிறந்தது. சீரண பாதைக்கு ஓய்வு கொடுத்து சுத்தம் செய்ய வேண்டும். ஞாபகமாக மலம் இலகுவாக கழிக்க உகந்த பழம், ரசம், மரச்சூப்பு, தாகத்தை தணிக்க தண்ணீர் போன்றவற்றை அருந்த வேண்டும். இதனால் வெப்பு தணிந்து விடும். உடல்நிலையில் குளிர்மை ஏற்படும். வெந்தயத்கீரை, வல்லாரை, பொன்னாங் காணி போன்றவை நாளாந்தம் உணவுடன் எடுத்துவரவும், கருணைக்கிழங்கு, வெண்டிக்காய், சின்னவெங்காயம், புடோல் போன்றவற்றையும் உணவில் சேர்க்கவும்.

சிலர் உடலை ஓய்வு எடுப்பதற்கு உபவாசம் கூட இருப்பதுண்டு. அத்திப்பழம், திராட்சைப் பழம், மாதுளம்பழம் சாப்பிட்டு வரலாம்.


மேலும் தினசரி உணவில் காலையில்


வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.456.9796




தொடர்ச்சி 14ஆம் பக்கம்




High Speed Internet
Truly Unlimited

**Cable Internet 10Mb/1Mb**
From
$33.99*
Unlimited Downloads / Uploads

**FTTN Internet 25Mb/10Mb**
From
$43.99*
Unlimited Downloads / Uploads

*And Get*
**FREE**
**HOME PHONE SERVICE**
10 FREE Calling Features
*For*
**1YEAR**

**iNNSYS**
**416-800-0797**
**1-866-964-7087**
www.innsys.ca

* For New Customers Only Where Technology Permits. One Time Activation Fee Required, 911 Fee And Same Number Porting Fee Applicable. Taxes Extra and Conditions Apply

# சார்பியல் - 47


## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

### விரிவடையும் பேரண்டம்.

கடவுளின் சமன்பாடு எனப்படும் அயன்ஸ்ரைனின் புலச்சமன்பாட்டின் தீர்வுகளில் உலக மக்களிடையே இருந்த நம்பிக்கைகளில் பெரிய மாற்றத்தினை ஏற்படுத்தியது இந்த விரிவடையும் பேரண்டம்தான். மிகவும் சுவரசியமான இந்த விடயத்தினை விரிவாகவே பார்ப்போம். நியூட்டனின் ஈர்ப்பு விதியின்படி பார்த்தால், ஈர்ப்புவிசையின் மொத்த விளைவாகப் பேரண்டம் சுருங்கிக் கொண்டு வரவேண்டும். ஆனால் பேரண்டமானது நிலையானது என்றே கருதப்பட்டது. இதனை அயன்ஸ்ரைன் எப்படிப்பார்த்தாரெனில், பேரண்டமானது எல்லாத்திசைகளிலும் ஒரே மாதிரியானதாக இருக்க வேண்டும், அப்படியென்றால்தான் பேரண்டம் நிலையானதாக இருக்க முடியும். ஆனால் இந்த ஈர்ப்பலைகளின் விளைவானது பேரண்டத்தினை ஏகவினமானதாகக் காட்டாது. அப்படியாயின் ஒன்றில் பேரண்டம் விரிவடைய வேண்டும் அல்லது சுருங்கிக் கொண்டு வரவேண்டும். அயன்ஸ்ரைனின் புலச்சமன்பாடுகளின் தீர்வு ஆச்சரியமாக, வித்தியாசமான முடிவைக் காட்டின. அதன்படி, பேரண்டம் விரிவடைந்து கொண்டு இருக்க வேண்டும்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அயன்ஸ்ரைன் தனது முடிவினை உறுதிப்படுத்த அக்காலத்தில் பிரபலமாக இருந்த வானவியலாளர்களை அணுகினார். 'பேரண்டம் நிலையானது' என அவர்கள் உறுதியாகக் கூறினார்கள். தனது கடுமையான உழைப்பின் பயனாக வந்த சமன்பாட்டை பார்த்தார் அயன்ஸ்ரைன். அருமையான இந்தச் சமன்பாட்டில் வழு உள்ளதா? ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனாலும் திருத்தம் தேவைப்படுகிறதே! மனவிருப்பின்றியே தனது அழகான அந்தச் சமன்பாட்டினுள் 'முரண் ஈர்ப்பு' எனும் பொருள்படும்படியான மாறிலி ஒன்றை வலிந்து புகுத்திக் கொண்டார். தான் புகுத்திய மாறிலிக்கு கிரேக்க எழுத்தான 'லம்டா'வினை அடையாளமாகக் கொடுத்தார். இந்த லம்டா மாறிலியானது, விரிவடையும் பேரண்டக் கணியத்திற்கு எதிராகச் செயற்பட்டு பேரண்டம் நிலையானதாக இருப்பதாகக் காட்டிக் கொண்டது. அயன்ஸ்ரைனின் இந்த லம்டா மாறிலியைக் கூட ஆய்வாளர்கள் ஆச்சரியமாகத்தான் பார்த்தார்கள், பார்க்கிறார்கள். அயன்ஸ்ரைனின் மூளையின் வலுவிற்கான இன்னொரு எடுத்துக் காட்டாக இதனைக் காண்கின்றார்கள். லம்டாவின் விளைவானது மிகக் குறுகிய தூரங்களுக்கு வலுவில்லாது பூச்சியமாக இருக்கும். சாதாரணமாக எடுத்துக் கொண்டால், கிட்டத்தட்ட ஒரு கலக்சியின் பருமனளவிற் பார்க்கையில் லம்டாவின் பெறுமானம் பூச்சியத்தையே காட்டுகின்றது. இன்னமும் பேரண்டத்தின்



அகலமானது பெரியதாக வரவர அதன் லம்டாவின் பெறுமானம் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. அவ்வகையாக லம்டாவின் பயன்பாடு திருத்திய அயன்ஸ்ரைனின் சமன்பாட்டில் காணப்பட்டது.

ஆய்வாளர்கள் ஒவ்வொன்றையும் துருவித் துருவி ஆய்வுகள் செய்வார்கள். அயன்ஸ்ரைன் திருத்தத்திற்காகத் தனது சமன்பாட்டில் புகுத்திய லம்டாவையே இன்னொரு கணித விற்பன்னர் சில நாட்களிலேயே கவனமாக கணித்துப் பார்த்தார். இரசியாவின் கணித விற்பன்னரான அலெக்சான்டரே பிரெட்மான் (Aleksandr Friedmann) அயன்ஸ்ரைன் லம்டாவின் கணிப்பில் சில கணித வழுக்களை விட்டிருந்ததைக் காட்டி, அதனைச் சரிசெய்து லம்டாவின் பெறுமானத்தை கணித்துப் பார்த்தபோது லம்டாவின் பெறுமானம் பூச்சியமாகவே வந்தது. அதாவது அயன்ஸ்ரைனின் புலச் சமன்பாட்டில் லம்டா என்றொரு கணியத்தினை புகுத்தவே முடியாது என்பது தெளிவாயிற்று. அயன்ஸ்ரைனுக்குத் தலையீடு இன்னமும் அதிகமாயிற்று. சிக்கல் என்னவென்றே புரியவில்லை. இந்நிலையில் அயன்ஸ்ரைனுக்குத் தென்பைத் தரக் கூடிய செய்தி வானவியலாளர்களிடையே இருந்து வந்தது. ஐரோப்பாவில் அயன்ஸ்ரைனின் பொதுச் சார்புத் தத்துவத்தின் சமன்பாட்டையும் அதன் விளைவுகளையும் தெரியாத அமெரிக்க வானவியவாளர் எட்வின் ஹபிள் (Edwin Hubble) என்பவர் பேரண்டத்தினுள் எமது ஆகாயகங்கை போன்று பல கலக்சிகள் இருப்பதை கண்டு கொண்டார். அகண்ட பெரிய விண்வெளியில் ஏராளமான கலக்சிகள் கூட்டங் கூட்டமாக கிடப்பதை ஹபிளினால் அவதானிக்க முடிந்தது. எங்களது கதிரவன் இருக்கும்,




**- கனி -**

416.261.1348

leptons@hotmail.ca


பெரிய பரப்பளவில் இருக்கும் பால்வழி என்ற மில்கிவே கலக்சியும் ஒரு சிறு கூட்டமான

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


Sole Solutions Foot Clinic

GENERAL FOOT CARE FOR ALL AGES



• எல்லா வகையான காப்புறுதித்திட்டங்களும், அரச உதவி திட்டங்களும் (ODSP, Social Service) ஏற்றுக்கொள்ளப்படும்.

• தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எமது சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

எமது சேவைகள்

• நீண்ட நேரம் நிற்பதால் உங்கள் பாதங்கள் சோர்வடைகின்றனவா?
• தரமான பாதணிகள் இன்மையால் நடக்க, வேலை செய்ய கஷ்டப்படுகின்றீர்களா?
• நீரிழிவு , இரத்த ஓட்ட குறைபாட்டினால் ஏற்படும் விறைப்பு வலியால் அவதிப்படுகின்றீர்களா?
• பித்த வெடிப்பு, நகச்சுற்று மற்றும் பாத தோல் பிரச்சனைகளினால் அவஸ்த்தைப்படுகின்றீர்களா ?
• மூட்டுவலி, பாதவலியால் வருந்துகின்றீர்களா?

• ஆணிக்கூடு, பித்த வெடிப்பு மற்றும் பாத தோல் பிரச்சனைகள்
• நகச்சுற்று மற்றும் நகத்தில் ஏற்படும் பிரச்சனைகள்
• கணுக்கால், முழங்கால், குதிக்கால் போன்றவற்றில் ஏற்படும் வலிகள்
• நீரிழிவு நோய் பராமரிப்பு
• தட்டையான பாதம், வளைவு கூடிய பாதம் மற்றும் அனைத்து பாத அசாதாரணங்கள்

Our Services

• Custom Made Orthotics and Orthopedic Footwear
• Comfortable, Modern, Therapeutic Footwear
• Compression Stockings, Ankle, Knee and Back Braces

அனைத்து சேவைகளுக்கும் அழையுங்கள்

Call for appointments:

(905) 471-4000

25 Karachi drive, unit 29A
Markham, ON L3S 0B5
Email: solesolutions@hotmail.com

# தவறான...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒஸ்வர் வைத்தியசாலையின் அவசர பிரிவுக்கு (Brampton - William Osler hospital emergency division) எடுத்து சென்றனர். அந்த வைத்தியசாலையின் அவசர பிரிவில் அவ் இரவு நேரம் பணியாற்றிய வைத்தியர் குழந்தைக்கு 'சளியோடு சேர்ந்த மூச்சு நுண் குழாய் அழற்சி' அதற்குரிய மருந்துகளை வழங்கியிருந்தார். ஆனால் அந்த மருந்து குழந்தைக்கு எந்தவிதத்திலும் வேலை செய்யவில்லை. மீண்டும் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிக மாக எக்ஸ்ரே படங்கள் பிடிக்கப்பட்டு குழந்தைகள் வைத்திய நிபுணரும் அழைத்து பரிசோதனை செய்து அது 'ஆஸ்மாவுடன் சேர்ந்த நுரையீரல் சளி' (wheezy bronchitis) என முடிவு பண்ணி அதற்குரிய மருத்துவர் சிகிச்சைகளை வழங்கினார்.

இந்த சிகிச்சைகளுடன் நேரம் கடந்து கொண்டுஇருந்தது, ஆனால் குழந்தையின் நோயில் மாற்றமோ, முன்னேற்றமோ எதுவுமில்லை. தொடர்ந்து குழந்தைகள் சிகிச்சைப்பிரிவு மருத்துவதாதி (Pediatric nurse) இரத்த அழுத்தத்தினை முதன்முறை பரிசோதனை செய்து பார்த்தபோது அது மோசமான நிலைமையினை காட்டியது. நீண்ட நேரமாக மருத்துவ கண்காணிப் பிலிருந்த குழந்தையின் உடல் இயக்கங்களின் செயல்பாடுகள் சிறிது சிறிதாக அடங்கிக் கொண்டு போனது. இறுதியில் அங்கு வழங்கும் சிகிச்சையில் அந்த தம்பதியினருக்கு திருப்தி இருக்காத காரணத்தினால் அங்கிருந்து குழந்தை யினை ரொறொன்ரோ நகரின் குழந்தைகள் மருத்துவமனைக்கு (Sick children hospital) எடுத்துச் சென்றனர். ரொறொன்ரோ குழந்தைகள் மருத்துவமனையில் குழந்தை யின் இடது பக்க நுரையீரலில் 'நிமோனியா பற்றீரியா' (Pneumonia in the left lung) பிடித்துள்ளது என பரிசோதனைகளின் பின்பு கண்டு பிடிக்கப்பட்டு தொடர்ந்து 'அன்ரி பயற்றிக்' (Antibiotic) வழங்கினார்கள்.

இந்த சிகிச்சையை வழங்கிய போதும், குழந்தையின் மூளைக்கு ஒட்சிசன் எடுத்து செல்லப்படுவது தடைப்பட்டிருப்பதால் இது குழந்தையின் மூளை வளர்ச்சியினை பாதிக்கும் என்பது 98% வீதம் முடிவானது எனவும் குறிப்பிட்டிருந்தனர். இன்று அந்தக் குழந்தை வளர்ந்து 14 வயது அழகிய சிறுமியாக, ஆனால் செவிப்புலன், பேசும் புலன், உணர்வுகள் இல்லாது இருப்பத்தி நான்கு மணி நேரமும் தனித்து விட முடியாத நிலையில் எவரோ ஒருவரின் கண்காணிப்பில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குழந்தையின் பெற்றோர் அந்த பிரம்ரன் வில்லியம் ஒஸ்வர் வைத்தியசாலைக்கு எதிராக நட்டஈடு கோரி தங்களின் சட்ட நடவடிக்கைகளை முன் எடுத்தனர். வைத்தியசாலை மருத்துவர்கள் நோய் தொடர்பான சரியான மதிப்பீட்டினை உரிய நேரத்தில் எடுத்து சரியான சிகிச்சையினை மேற்கொண்டிருக்காத காரணங்களினாலே யே இத்தகைய பரிதாப நிலை ஏற்பட்டது என்ற வாதம் பெற்றோர் தரப்பில் வைக்கப் பட்டது. வைத்தியசாலைக்காக அவர்களின் காப்புறுதி கம்பனியின் வக்கீல்மார் தங்கள் பக்கமுள்ள நியாயங் களையும் முன் வைத்தனர். குற்றசாட்டுகள், வைத்திய அறிக்கைகள், மறுப்பு அறிக்கை கள், குழந்தையின் இன்றைய பரிதாபகரமான நிலை யாவும் நீதிபதிகளினால் ஆய்வு செய்யப்பட்டது.

விசாரணை 2001 இல் இருந்து 2013 ஆம் ஆண்டுவரை இழுபட்டு இறுதியில் வைத்தியசாலை மருத்துவர்களின் தவறி



னால் பாதிக்கப்பட்ட அந்த சிறுமியின் புனர் வாழ்வுக்கு 21 மில்லியன் டொலர் நட்டஈடு வழங்க வேண்டும் என தீர்ப்பு வழங்கப் பட்டது. இது ஆங்கில ஊடகங்களில் படங்களுடன் வெளிவந்திருந்தது. (இங்கு 21 மில்லியன் டொலர் நட்டஈட்டினை வைத்தியசாலை காப்புறுதி கம்பனி பாதிக்கப் பட்டவர்களுக்கு என வழங்கினாலும், உடனடியாக முழுத் தொகையினையும் ஒரேயடியாக அவர்களின் கையில் கொடுத்து விடமாட்டார்கள். அந்தப் பிள்ளைக்காக 21 மில்லியன் டொலரும் முதலீடாக இருக்கும். அது 25 வீத கூட்டு வட்டியுடன் வளரும் அதிலிருந்து மாதம் $11,000 டொலர் பிள்ளையின் சகல பராமரிப்பு செலவுகளின் ஒரு பகுதியாக வழங்கப்படும்) இதேபோல கனடாவில் மருத்துவர்கள் வைத்தியசாலை களின் தவறுகளினால் பாதிப்படைந்தவர் களுக்கு அவர்களின் தொழில் பொறுப்பு காப்புறுதி திட்டங்களிலிருந்து நட்டஈடுகள் வழங்கப்பட்ட பல சம்பவங்களை இங்கு மேலும் குறிப்பிடலாம். அதில் இன்னொன்று கீழேதரப்படுகிறது.

### மிசுசாகா வைத்தியசாலையில் நடந்த துர்அதிர்ஷ்டவசமான சிகிச்சை!

இந்த சம்பவம் ஒக்ரோபர் 08, 2003 ஆம் ஆண்டு 'மிசுசாகா - கிறடிற் வலி' வைத்தியசாலையில் (Mississauga - Credit Valley Hospital) நடந்தது. தற்போது ஹல்ப் (Guleph) நகரில் இருக்கும் Ms. ஹரன் ஆம்ஸ்ரோங் என்னும் பெண்ணுக்கு குழந்தை பிறக்க போகும் இறுதி கட்டம்! வைத்தியசாலை பிரசவ அறையில் அந்த நேரம் பிரசவம் பார்த்த டாக்டர் ஏரிஷ் ராமரி (Dr. Erez Tamari). இவர் மிக அனுபவமுள்ள இத்துறை சார்ந்த ஒரு நிபுணர் எனவும் ஒரு வருடத்திற்கு சுமார் 400 பிரசவங்களைப் பார்ப்பவர். என்ன துர்அதிர்ஷ்ட காலமே அன்றைய தினம் அவரது கண்காணிப்பில் நடந்த மகப்பேற்றில் சிறு தப்பு நடந்து அது மருத்துவ நீதிமன்றத்தின் விசாரணைக்கு வந்திருந்தது. சிசு தாயின் கருப்பையினை விட்டு வெளியே வரும் நேரம் தலைப்பகுதி வெளியே வந்துவிட ஏனைய உடம்பின் பாகம் வெளியே வர முடியாது சிக்கி கொண்டது. (இந்த நிலை ஆங்கில மருத்துவ அகராதியில் Shoulder dystocia என குறிப்பிடப்படுகிறது.)

வழமையாக இந்தமாதிரியான நிலையில் செய்வது போல மருத்துவ உபகரணங் களை உபயோகித்து சிசுவினை வெளியே எடுத்தார். அல்லது இழுக்கும்போது அது அந்த சிசுவின் இடது கை, தோள் மூட்டு ஆகியவற்றின் உணர்ச்சி நரம்புகள் பாதிக்கப்பட்டுவிட்டது. இது அக்குழந்தை வளர்ந்து வரும்போது அதன் வாழ்வில் ஒரு குறைபாட்டினை (Brachial plexus) உருவாக்கி விட்டது.

மருத்துவ நீதிமன்றத்திற்கு இந்த சிகிச்சையின் தவறுக்கு நட்டஈடுகோரி வந்தபோது நீதிமன்றம் $1.3 மில்லியன் டொலர் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற தீர்ப்பு வழங்கியது. பொதுவாக வைத்தியர்கள், வைத்திய சாலைகள் தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ளாது அப்பீல் பண்ணுவார்கள். ஆனால் இங்கு மிகப் பிரபல்யமான அனுபவமுள்ள சத்திர சிகிச்சை மருத்துவர் எதுவித ஆட்சேபனை யும் தெரிவிக்காது பாதிக்கப்பட்டவர்களுக்கு தமது காப்புறுதியிலிருந்து நட்டஈடு போகட்டும் என்ற நல்லெண்ணத்தில் குற்றத்தினையே ஏற்றுக்கொண்டு அப்பீல் பண்ணாமலேயே இருந்து விட்டார். மருத்துவர்கள் மற்றும் வைத்தியசாலை களின் தவறுகளில் பாதிப்படைந்தோருக்கு ஆஜராகும் நோவா ஸ்கொஷியா மாகாண வக்கீல் திரு. ஜோன் மக்கிக்கன் (Mr. John Mckiggan) அவர்கள் வெளியிட்ட ஒரு கட்டுரையில் 2005-2010 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் சுமார் 4524 வழக்குகள் மொத்தமாக கனடாவில் மருத்துவர்களின் தவறுகளுக்கு எதிராக நட்டஈடுகோரி தாக்கல் செய்யப்பட்டது. இதில் சுமார் 3089 வழக்குகள் மருத்துவ நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது. வழக்கு தொடர்ந்தவர் களினால் நீண்ட வருடங்கள் காலம் கடந்து கொண்டு போவதால் கைவிடப்பட்டது அல்லது வழக்கு தொடர்ந்த நோயாளி சில இடங்களில் இந்த காலத்தினுள் மரணமடைந்து விட்டால் நிரூபிக்க முடியாமல் போனவை போக மிகுதியானவை 521 வழக்குள். அதில் 116 வழக்குகளில் மட்டுமே நோயாளிக்கு சாதகமாக பணத் தொகை நட்டஈடு வழங்கப்பட்டது எனவும் சராசரியாக $117,000 டொலர்வரை நட்டஈடு வழங்கப் பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டிருந்தார். ஒரு மருத்துவ ரீதியான தவறு மருத்துவ நீதிமன்றத்தின் விசாரணைக்கு வரும்போது, மருத்துவர்கள் பக்கம் உள்ள நியாயங்களை தேடிப்பிடித்து அவர்களுக்கு வக்காலத்து வாங்கி வாதாட கனடாவில் மிகப்பெரிய நிறுவனம் ஒன்று இயங்கி வருகின்றது.

தொடர்ச்சி 34ஆம் பக்கம்


AUM WELLNESS CLINIC IN

Healing Massage, Suffering From Pain?

Get Relief From:

முதுகுவலி கழுத்துவலி தோள்பட்டைவலி
முழங்கால் வலிகள் தீராததலைவலி நரம்புப்பிடிப்பு
நீரிழிவு தூக்கமின்மை கொலஸ்ரோல்
உடல் எடை குறைத்தல் இரத்த ஓட்டத்தை சீராக்குதல்
போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்



Dr. Lata

Based on Appointment

Cell: 416.890.9217 Office: 647.304.6046
5215 Finch Ave. E. #220, Toronto, ON

# திரை விமர்சனம் - கோச்சடையான்

'அசைவு பதிவு' (பர்.ஃ.பார்மென்ஸ் காப்பச்சர்) என்னும் தொழில்நுட்பத்தில் வந்திருக்கும் முதல் தமிழ் படம். அதுவும் ரஜினி படம் என்பதால் கூடுதல் எதிர்பார்ப்பு! படம் தொடங்கும்போது, ஒரு பெண் குரல், படத்தை அறிமுகம் செய்து, அசைவு பதிவுத் தொழில்நுட்பம் சிறப்புகளையும் இந்த தொழில்நுட்பம் எப்படி செயல்படுகிறது என்பதையும், 'அவதார்' போன்ற படங்களின் உதாரணத்துடன் விளக்குகிறது. அதே பின்னணிக் குரலில் கதை சொல்லி கிரா.ஃ.பிக்ஸ் அனிமேஷன் காட்சிகளை விளக்குகிறார்கள். அமிதாப் பச்சன் போன்ற முன்னணி நட்சத்திரங்கள் இம்முயற்சியைப் பாராட்டி பேசுகிறார்கள். பிறகு படம் தொடங்குகிறது.

கோட்டைப்பட்டிணத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன், மலையிலிருந்து நதியில் குதித்து, நீர்விழ்ச்சியில் விழுந்து எழுந்து, மரக்கட்டைகளில் மிதந்து, கலிங்கபுரி வந்து சேர்கிறான். அங்கே அநாதையாக அலைந்து, இராணுவப்பயிற்சி பெற்று, மஹா வீரன் ராணாவாக அறியப்பெறுகிறான். ராணாவின் வீரத்தை உணரும் நான்கைந்து பேர், மன்னரிடம் சென்று நமது தேசத்தின் தளபதி யாக ராணாவை நியமிக்கலாம் என்று சொல்கிறார்கள். மன்னர் எனக்கே அது தெரியும் என்று கொக்கரிக்கிறான். ராணாவை படைத்தளபதியாக்க தேடுகிறார்களா. அப்பொழுது ஒரு மலையுச்சில் இருந்து இன்னொரு மலையுச்சிக்கு குதிரையில் பாயும் வீரனை அப்படியே அந்தரங்கத்தில் 'க்ளோஸ் அப்' செய்தால், அது ரஜினி (ராணா). ஒரு சின்ன 'பிளாஸ்பேக்' கோட்டைப்பட்டினம் மற்றும் கலிங்கபுரி என்னும் இரு அண்டை நாடுகளுக்கிடையே நூற்றாண்டுகளாக பகைமை தொடர்கிறது.



கோட்டைப்பட்டினத்தில் கோச்சடையான் புகழ் பரவுகிறது. இது மன்னருக்குப் பிடிக்க வில்லை. இந்நிலையில், தன்னுடன் வந்த 3000 வீரர்கள் உயிருக்குப் போராடுகையில், அவர்களின் உயிர்காக்கும் மருந்தினைக் கொண்ட எதிரி நாடான கலிங்கபுரியிடம் உதவி பெற்று அவர்களைக் காப்பாற்றுவதா அல்லது மரணமடையச் செய்வதா என்ற இக்கட்டில், உயிர்பிழைத்தால் என்றேனும் அவர்களை மீட்டுவிட முடியும் என்ற நம்பிக்கையில் அவர்களை கலிங்கபுரியில் விட்டுவிட்டு வருகிறான், கோச்சடையான். அதனையே வாய்ப்பாகப் பயன்படுத்தி, கோச்சடையான் செயலைத் தேசதுரோகம் எனக் குற்றம்சாட்டி, மரண தண்டனை அளித்து விடுகிறார் மன்னர். கோச்சடையா னின் மரணத்தருவாயில், இதனை தன் மகன் சோணாவிடம் சொல்லி, வாளைக்கொடுத்து, தனக்கு பிறகு அடிமைகளை மீட்டு நாட்டின் பாதுகாப்பிற்கு பொறுப்பு எடுத்துக்கொள்ளக் கூறுகிறார். ஆனால், சோணா அதைச் செய்வ தில்லை. மற்றொரு மகனான ராணாதான், தந்தை மீதான பழியை நீக்கி, பழிவாங்க புறப்படுகிறான். இப்படி புறப்பட்டவன்தான் ஆரம்பத்தில் மலையிலிருந்து நதியில் குதித்து, நீர்வீழ்ச்சியில் விழுந்து எழுந்து, மரக்கட்டைகளில் மிதந்து, கலிங்கபுரி வந்து சேர்ந்த ராணா.

கலிங்கபுரியில் உள்ள ஆதரவற்ற சிறுவர் இல்லத்தில் வளர்ந்து, வீரனாகி, கலிங்கபுரி இளவரசனின் தோழனாகிப் பின் தளபதி யாகவும் ஆகின்றான். தளபதியான ராணா, கோட்டைப்பட்டினம் மேல் படையெடுக்க விரும்புவதாகக் கூறுகிறான். இதற்காக ஏற்கெனவே தந்தை கோச்சடையானால் விட்டுச்செல்லப்பட்டு இன்று அடிமைகளாக இருக்கும் கோட்டைப்பட்டின வீரர்களையும் அழைத்துச் செல்கிறான். பிறகு, அவர்களுடன் தனது நாட்டுடன் இணைந்து விடுகிறான். ராணாவின் மாமா நாகேஷ் கோச்சடையானின் தங்கையை வளர்த்து வருகிறார். ராணாவின் தங்கையை இளவரசர் சரத் குமார் காதலிக்க, இளவரசி தீபிகா படுகோன் ராணாவை காதலிக்கிறார். இந்த பண்டமாற்று முறை அரசர் நாசரை கடுப் பேற்றிவிடுகிறது. மீண்டும் ஒரு கோச்சடையானா என மன்னர் பொருமுகிறார்.

**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

தொடர்ச்சி 25ஆம் பக்கம்



# மயக்கும் மொறோக்கோ - பகுதி 6

**கடந்த இதழ்தொடர்ச்சி....**

பகியா அரண்மனை - இது மறக்கேசின் தலைசிறந்த மன்னர்களுள் ஒருவராகிய சீ அகமட் பென் மூசா என்பவரால் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டது. இதில் இவர் தனது நான்கு மனைவியர் களுடனும் 24 வைப்பாட்டிகளுடனும் வாழ்ந்து வந்தார். இவ் அரண்மனை இஸ்லாமிய, மொறொக்கன் கட்டிடக்கலைக் கமைய, தலைசிறந்த அரண்மனையாகக் கட்டப்பட்டது. பகியா என்றால் 'ஒளி மயமானது' என அர்த்தமாகும். இவ்வரண்மனையைக் கட்டும்போது அந்தரங்கம் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் மூசா மன்னர் பெரிதும் அக்கறை கொண்டிருந்தார். அதனால் போவோர் வருவோர் அரண்மனையின் உட்புறத்தைப் பார்க்காமல் இருப்பதற்காக பல கதவுகளை அமைத்தார். இதனைக் கட்டுவதற்கு ஏழு ஆண்டுகள் எடுத்தன. பெஸ் நகரத்திலிருந்து வந்த கட்டுமானப் பணியாளர்களும் தச்சர்களும் நூற்றுக்கணக்கா னோர் இதில் வேலை செய்தனர். இவ்வரண்மனை இரு ஏக்கர் தோட்டத்தின் மத்தியில் அமைக்கப்பட்டது. அறைகள் யாவும் நடுவிலிருந்த முற்றத்தை நோக்கி வாசல்களைக் கொண்டிருந்தன. இவ்வரண்மனை மிகவும் சிறப்பானது என யாவராலும் பாராட்டப்பட்டது. குறிப்பாகப் பணக்காரர்கள் இதனைப் பார்த்துப் பொறாமைப்பட்டனர். மூசா மன்னர் 1900 ஆண்டு இறந்த பின்னர் சுல்தான் அப்டெல் அசீஸ் இவ்வரண்மனையை முற்றுகையிட்டு அழித்தான்.

நாம் சென்றபோது வெளிச்சுற்றுவட்ட மதில்களும் மிகப் பெரிய கதவும் வாசலில் இன்னும் இருப்பதைக் காணக் கூடியதாய் இருந்தது. பிற பகுதிகள் யாவும் இடிந்தும் சிதைந்தும் காணப்பட்டன. தோட்டத்தின் நடுப்பகுதியில் தோடை மரங்களும் பூச்செடிகளும் இருந்தன. ஏராளமான



**- துறையூரான் -**

சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து செல்கின்றனர். இங்கு சில காவலாளிகள் மேற்பார்வைக்காக அமர்த்தப்பட்டிருக் கிறார்கள். இடிபாடுகளிலிருந்து இவ்வரண்மனையின் விஸ்தீரணத்தையும் பிரமாண்டமான கட்டிட வேலைப்பாடு களையும் ஓரளவுக்கு ஊகிக்கக் கூடியதாய் இருந்தது. இவ்வாறான ஓர் அரிய அரண்மனையை அழிக்க ஒருவனுக்கு எவ்வாறு மனம் வந்தது என்பது கவலைக்குரியதே.

**கூற்றோபியா பள்ளிவாசல்**

இந்நகரிலுள்ள மிகப்பெரிய பள்ளிவாசல் இதுவே. இது மறக்கேஸ் மெடினாவின் தென்மேற்கில் அமைந்துள்ளது. இது அலிமொகாட் கலிப் யாகுல் அல் மன்சூர் காலத்தில் கட்டப்பட்டது. இது செங்கல்லாலும் செங்கற்கோலாலும் கட்டப்பட்டுள்ளது. இது 2 அடி நீளத்தையும் 200 அடி அகலத்தையும் கொண்டது. அரசனின் அந்தரப்புரத்தில் நடைபெறும் நிகழ்வுகளை இதன் உச்சியிலுள்ள எவரும் காணமுடியாதவாறு இதன் கோபுரம் வடிவமைக்கப்பட் டுள்ளது. இது மணற்கற்களால் கட்டப்பட் டுள்ளது. 253 அடி உயரமானது. இது ஆரம்பத்தில் மறக்காசுக்கே உரித்தான செங்கலவையால் மேற் பூச்சுப்பூசப்பட்டிருந்தது. 1990 இல் இதன் ஆரம்ப கல் வேலைப்பாடுகள் தெரிய வேண்டுமென நிபுணர்களின் கருத்துப்படி மேற்பூச்சு அகற்றப்பட்டது. கோபுரத்தின் உச்சிப் பகுதியில் உள்ள பந்துகள் கீழுள்ளவை பெரியதாயும் மேலேயுள்ளவை சிறியதாயும் உள்ளன. இவை தங்கமுலாம் பூசப்பட்டுள்ளன. இந்த அமைப்பு மறக்கேஸ் நகருக்குத் தனித்துவமானது.

**பென்யுசுவ் பள்ளிவாசல்**

இது பச்சை ஓடுகளால் வேயப்பட்ட கூரையையும் பச்சை நிறக் கோபுரத்தையும் கொண்டுள்ளது. இது நகரிலுள்ள மிகப் பழமை பள்ளிவாசல். இது 12ஆம் நூற்றாண்டில் அலாபின் யுசுவ் என்ற சுல்தானால் கட்டுவிக்கப்பட்டதாகும். அப்போது அது நகரிலுள்ள பெரிய பள்ளிவாசலாக விளங்கியது. பின் நாளடைவில் இது சிதைவுற்றதனால் 1560 களில் இது மீளவும் அப்துல்லா அல் கலீப் என்ற சுல்தானால் மீளவுங் கட்டப்பட்டது. 1948 இல் இதற்கருகாமையில் கூபாபாடின் என்ற இரு மாடிகளைக் கொண்ட விற்பனைச் சாலையொன்று நிலத்துள் புதையுண்ட நிலையில் காணப்பட்டது. இது மொறோக்கன் கட்டிக் கலைப்பாணியில் அமைக்கப்பட்டிருந்தது. இதனை கூரை வளைந்ததாய் 7 கூரான நட்சத்திரங்களைக் கொண்டதாய்க் காட்சியளித்தது. எண்கோண வடிவில் அமைந்திருந்த வளைந்த கூரையின் உட்புறத்தில் வண்ண வேலைப்பாடு களுடன் இதனைக் கட்டிய சுல்தான் யுசுப்பின் பெயரும் பதிக்கப்பட்டதாய் அமைந்திருந்தது. தொடரும்...




# "வெகுளாமை" நூல் வெளியீடு

## மே மாதம் 25ஆம் திகதி 2014

அகணி சுரேஸ் அவர்களால் விளம்பரம் பத்திரிகையில் "வெகுளாமை" தலைப்பில் எழுதப்பட்ட தொடர்கட்டுரை நூலுருவில் வெளிவந்துள்ளது. இதன் வெளியீடு மே மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அலகு 2ஏ, 1160 பேர்ச்மவுண்ட் வீதியில் உள்ள மண்டபத்தில் மாலை 4:15 மணிக்கு ஆரம்பித்து இனிதே நடைபெற்றது. மண்டபம் நிறைந்த பார்வையாளருடன் நடைபெற்ற இந்த நிகழ்வினைச் செல்வி சயனிகா சுரேஸ் தொகுத்து வழங்கினார். நிகழ்வினை கயிலாயர் தம்பதிகள், பண்டிதர் அலெக்ஸ்சாந்தர், திரு. சிவபாலு, கலாநிதி ஸ்ரீஸ்கந்தராசா விளம்பரம் பத்திரிகை ராஜா மகேந்திரன் தம்பதிகள் ஆகியோர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். விக்ரோரியா சாயி நிலையத் மீரா ராசையா ஆய்வுரை வழங்கினார். அடுத்து கலாநிதி இஸ்ஹாக் கலந்தர் கருத்துரை வழங்கினார். நிகழ்வில் திரு. கனகசபாபதி சிறப்புரை ஆற்றினார். வணபிதா பிரான்சிஸ் சேவியர், திருமதி. சிவவதனி பிரபாகரன், செல்வி சுபாங்கி கலாநாதன் ஆகியோரும் நூல் பற்றிய தமது விமர்சனக் கருத்துக்களை வழங்கினார்கள். நூலின் முதற்பிரதியை ராஜா மகேந்திரன் பெற்றுக்கொண்டு நூலாசிரியருக்கு தமது ஆதரவை வழங்கினார். நூலாசிரியருக்கான வாழ்த்துச் செய்தியை திரு. அகஸ்டீன் ஜீவானந்தன், திரு. தர்மலிங்கம் ஆகியோர் வழங்கினார்கள். புலவர் மயில்வாகனன், திரு. மார்க்கம் சந்திரன் ஆகியோர் வாழ்த்து மடல்கள் வழங்கி நூலாசிரியரைக் கௌரவித்தனர். மூத்தோர் மேம்பாட்டுக் கழகத்தினர் நூலாசிரியருக்கு மாலை அணிவித்தும்,










தலைவர் திரு. தர்மராஜா அவர்கள் ஆசியுரை வழங்கினார். பண்டிதர் அலெக்ஸ்சாந்தர், எழுத்தாளர் இணையத்தலைவர் திரு. சிவநேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கவிநாயகர் கந்தவனம் அவர்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் சமூகமளிக்க முடியாததால் திரு. ஞானகணேசன் கவிநாயகர் சார்பாக அவரின் வாழ்த்துச் செய்தியை அவையில் வாசித்தார். நூல் வெளயீட்டிற்கு மாவிலி மைந்தன் திரு. சண்முகராஜா தலைமை வகித்தார். கலாநிதி பாலசுந்தரம் வெளியீட்டுரை வழங்கினார். திருமதி. பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தனர். நிகழ்வில் உரையாற்றியோர் நூலின் சிறப்பையும், நூலாசிரியரின் எழுத்தாற்றலையும் பாராட்டிப் பேசினார்கள். நூலாசிரியர் நூல் வெளியீட்டிற்கு உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து தனது ஏற்புரையை வழங்கினார். ஊடகவியலாளர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், நூலாசிரியரின் நண்பர்கள், உறவினர் எனப் பலரும் சமூகமளித்து நிகழ்வினைச் சிறப்பித்தனர். நூல் வெளியீட்டு நிகழ்வு இனிதே நிறைவுற்றது.




# New Executive Townhomes In Ajax




- Fast Growing Ajax Area..
- Unique designs & outstanding quality...
- One of the most well respected builders in Canada.
- Only 7% Deposit In Total..
- From 1743 Sq.ft.
- $5000 Free Upgrades

**For More details... Call or Visit**

**Direct: 647.955.9544**

## HomeLife GTA Realty Inc., Brokerage

5215 Finch Ave, East, Suite 203, Toronto, ON. Office: 416-321-6969



# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

### இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

அந்த அமாவாசை நாள் வந்தது.

அன்றிரவு கந்தசாமியின் வீட்டில் முத்துப் பூசாரியார் எறிமாடனைத் துரத்தப் பூசை வைக்கப் போறார் என்பது எப்படியோ ஊராருக்குத் தெரிய வந்துவிட்டது. பின்நேரம் நாலுமணிக்கே கந்தசாமியின் அயலட்டை எல்லாம் உறவினர்கள் வீட்டுக்குச் சென்று விட்டார்கள். பக்கத்து வீட்டு முருகேசர் மதியச் சாப்பாட்டுக்கே தனது மச்சான் வேலர் வீட்டுக்குக் குடும்பத்தோடே ஓடிவிட்டார். ஊரிலே அவரைத்தான் நல்ல தைரியசாலி, ஒன்றுக்குமே பயப்படாதவர் எனக் கூறுவார்கள்.

கந்தசாமியின் வீட்டு வளவுக்கும் முருகேசரின் வீட்டு வளவுக்கும் ஒரு வேலிதான். இடைக்கிடை கந்தசாமியோடு வேலிச் சண்டையும் முருகேசருக்கு வரும். வேலியில் இருக்கும் பெரிய, இப்பவோ பையவோ பாறி விழுகிறேன் என இருக்கிற பூவரசால்தான் அதிகம் சச்சரவு வரும். அந்தப் பூவரசின் இலையை யாருடை ஆடு மட்டும் தின்னலாம் என்பதுதான் சண்டையின் உண்மையான கருப்பொருளாக இருக்கும்.

அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களில் மூன்றாவதாகப் பேசப்படுவது இன்பம். இல்லறம் முழுவதும் இழையோடுவது இன்பம் துய்த்தலுக்குரிய செயற்பாடுகள். உலகத்திலே பிறக்கும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் இன்பம் அனுபவிப்பதையே இலக்காகக் கொண்டுள்ளனர். இன்பங்கள் யாவற்றிலும் சிறந்தது அறத்தால் வரும் இன்பம் எனத் தமிழர் கண்டனர். அறம் செய்வதற்குத் தகுந்த வாழ்க்கை இல்லற வாழ்க்கை என்றும் கருதினர்.



அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கைப் பண்பும் பயனும் அது
என்றார் வள்ளுவர் பெருமான்.(7) அவர் குறிப்பிடும் பயனுக்குள் இந்த இன்பமும் அடங்கும். அதாவது அன்பை வளர்த்து, அறத்தைப் புரிந்து இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்பது பொருள். எனவே குடும்ப இன்பம் என்பதைப் பண்டைய தமிழர் வெறும் காம உணர்ச்சி இன்பமாகக் கருதவில்லை என்பது புலப்படும். அது அன்பாகிய மனைவியும் அறமாகிய கணவனும் கலந்து அனுபவிக்கும் நல்வினைப் பயன் கருதிய இன்பம். இதுவே இல்லற இன்பத்துக்கான விளக்கமாகும்.

6. சீரிய ஒழுக்கம்

அன்பாகிய மனைவி தன்னையும் காத்துத் தற்கொண்டானையும் பேணிச் சொற்காத்துச் சோர்விலாது குடும்பத்தைக் கவனிப்பவள். அவள் கற்பெனும் திண்மை மிகுந்தவள். கற்பு எனப்படுவது ‘மகளிர்க்கு மாந்தர்மாட்டு நிகழும் மன நிகழ்ச்சி’ என்று இளம்பூரணரும்(8) ‘தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதொரு மேற்கோள்’ என்று நச்சினார்க்கினியரும்(9) ‘சொற்றிறம்பாவை’ என்று அவ்வையாரும்(10) விளக்குவர்.

கற்பொழுக்கம் குடும்ப விழுமியங்களுட் கண்ணெனப் போற்றப்பட்டது. அதனை ‘தீதிலா வடமீனின் திறத்து’(11) கண்ணகி பாத்திரத்தால் இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தில் சிறப்புறக் காட்டிப் போந்தார். கற்பின் திறத்தைச் சிலப்பதிகாரம் காட்டியதுபோல் வேறெக் காப்பியமும் வலியுறுத்தவில்லை.

பொற்பு வழுதியுந்தன் பூவையரும் மாளிகையும்
விற்பொலியும் சேனையும்மா வேழமும் - கற்புண்ணத்
தீத்தரு வெங்கூடல் தெய்வக் கடவுளரும்
மாத்துவத் தான்மறைந்தார் மற்று

என வரும் பாடலில்(12) கற்பானது மதுரைமா நகரை உண்ண(எரிக்க) தெய்வங்களும் அதனைத் தடுக்க வொண்ணாது வெளி யேறின என்று கூறிக் கற்புக்குப் பேராற்றல் உண்டு என்ற கருத்தை மிக அழுத்தமாவே பதிவு செய்கிறார் இளங்கோ அடிகள்.

பெண்களுக்குக் கற்பைப்போல ஆண் களுக்கும் நிலையில் திரியாத் தோற்றமுண்டு. அறமாகிய கணவன் எனப்படுபவன் பிறன்மனை நோக்காப் பேராண்மை வாய்ந்தவன். ஆண்கள் பரத்தையர் வழிச்சேறல் சங்க இலக்கியங்களிற் பேசப்பட்டிருப்பினும் ஊரவர் அலர் தூற்றுவதால் அதனை ஒரு விழுமியமாக ஆன்றோர் ஏற்றுக்கொண்டதில்லை. ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படல் வேண்டும் என்பது அவர்களது கொள்கையாக இருந்தது.

தொடரும்...



- தமிழ்வேள் விநாயகர் கந்தவனம் -

SMART KID'S SUMMER CAMP
HUNT FOR 2014

HIGH SCHOOL SUMMER
PREPARATION CAMP

- We covers 50% of the school year's curriculum during these two months.
- We focus on the student's weak area will ensure to strengthen it.
- We build very strong communication and reading skills.
- We use very excellent work books designed according to the ontario school curriculum



Are you worried about your High school Dream Success

We finish following subjects before school starts:

Grade 9 & 10
Math & Science

Grade 11
Function Math

Grade 12
Advance Function

ACTIVITIES INCLUDE:
*Math *Writing
*Communication Skill *Reading
*Grammer *World History
*French *Art Club
*Computer for Kids *Chess Club

(COST $2.25 / Hour)

Time 9:00am to 4:30pm (Mon. to Fri.)
(Cost $2.25 / Hour Additional Child in same family $2.00 per hour)
Early drop off and late pick up possible when necessary

Time 11:00am to 3:00pm (Mon. to Fri.)
(Cost $5.00 / Hour Additional Child In same family $3.00 per child)

Starting From July 02nd, 2014
Location: 3001 Markham Rd, Unit 21 Scarborough, ON

Call: 416.738.8824

# அம்மா

## கடந்த இதழ் தொடர்ச்சி...

கடிதத்தை வாசித்து முடித்த தபால் காரர் பெரு மூச்சு விட்டு அப்ப நான் உங்கள் வீட்டுக்கு அடிக்கடி வரவேண்டி வரும் எனக் கூறி சென்றவனை நில்லு தம்பி என்று மறித்த கருத்தாயி இந்தா ராசா ஆர் பெத்த புள்ளையோ இதுக்கு போற வழியில தேத்தண்ணீர் குடியுயென கொடுத்தா. அதற்கு தபால் காரன் அம்மா உங்களின் நிலமை எனக்கு நன்கு தெரியும் நீங்களே இந்த காசை வைத்திருங்கள் என கொடுத்தான். நன்றியம்மா எனக்கூறி சைக்கிளை ஏறி மிதித்தான்.

நாட்கள் விரைந்து மறைந்து. பல கடிதங்கள், பல போராட்டங்களுக்கு ஊடாக தன் உணர்வுகளை அம்மா, சகோதரிகளுடன் மட்டுமல்லாமல் பாடசாலையிலும் பகிர்ந்த கொண்டு இறுதியாண்டுக்கு வந்துவிட்டேனே என எண்ணினாள். சுஜாதாவின் நட்பு கடவள் தந்த வரம் என்று பல தடவைகள் நினைத்த துண்டு. இந்த வருடத்துடன் சுஜாதாவையும் விட்டு பிரியப்போகின்றேனே என்ற ஆதங்கம் மனதில் கவலையை கொடுத்ததில் ஆச்சரியம் இல்லை. இருவர் கண்களிலும் அந்த பிரிவின் வேதனைகள் வெளிப்பட தொடங்கினது. இருந்தும் காட்டிக் கொள்ளாமல் தங்களின் படிப்பில் கவனம் செலுத்தினர்.

பரிட்சை மண்டபத்தினை விட்டு வெளிவே வரும் போது பெரும் மூச்சை விட்டார்கள். தங்களையே சுதாகரித்துக் கொண்டவர்கள், யாரும் தங்களை பார்கவில்லை என்பதனை உறுதிப்படுத்திக்கொண்டு தங்களையும் அறியாமல் ஒருவரை ஒருவர் பார்த்து வெட்கப்பட்டனர். ஷோபாவையும் அறியாமல் மனம் ஒருவகை மகிழ்ச்சியில் அலை பாய்ந்தது. ஷோபா வின் நகர்வுகளில் மாற்றங்களை கண்ட சுஜாதா கேட்டே விட்டாள். என்னடி ஷோபா நீ வீட்டபோறதில் மிகவும் சந்தோசமாக இருக்கின்றாய் போல. இருக்காதா பின்ன, என்ர அம்மா, அக்காகக்களை பார்ப்பதென்பது எவ்வளவு மகிழ்ச்சியான விடயம் என்றாள். இருந்தும் மறுபக்கம் உன்னை பிரிவதும் கஸ்டமாக தான் இருக்கு என்றவள், சுஜாதா உனக்கு தெரியாது எங்கம்மா, அந்த சின்ன வயசிலேயே அப்பா விட்டிட்டு போயிற்ரோ, எங்களை காப்பாத்த பட்ட கஸ்ரங்கள் சொல்லிலடங்காதவை. அதையும் தாண்டி நமது தமிழ் கலாச்சாரத்தில் எல்லா பழியையும் சுமப்பவளாக பெண்தான் இருக்கிறாள். பெண் என்பவளை உலகள வில் ஆண்களுக்கு போதையுட்டி, ஆண்களை மகிழ்சிப்படுத்துபவளாகத்தான் இந்த ஆண் ஆதிக்க வர்க்கம் பார்க்கிறது. அந்த பெண் என்று தாயாகுறாளோ அப்போது தான் எல்லோரையும் விட உயர்ந்த அங்கீகாரம் பெறுகிறாள். அப்போதுதான் அந்த பெண்மையின் மகிமை அறியப்படுகிறது. அப்போது தான் அந்த தாய் உலகின் உச்சத்திற்கு போற்றப்படுகின்றாள். அந்த அளவுகோலையும் விஞ்சி நிற்பவ எங்கள் அம்மா. அவ எங்களின் சொத்து அவவுக் காகத்தான் என் வாழ்க்கையே இருக்கும். அந்த தெய்வத்தை சந்திப்பதென்பது எவ்வளவு மகிழ்ச்சியானது தெரியும் தானே என்ற ஷோபாவை.....

மக்கு நாமதான் எப்படியாவது அடிக்கடி தொலைபேசியில் கதைப்பம், சந்தர்ப்பம் கிடைக்கும்போது சந்தித்து கதைக்கப்போறம் என்று கவலையை வெளிப்படுத்தாமல் ஆறுதல் சொன்னாள் சுஜாதா, ோபாவுக்கு நேரம் நகர்வதாக தெரியவில்லை. ஒவ்வொரு நிமிடமும் வருடங்கள் போல் தோன்றின. இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டு, கன்ரினில் எல்லோருக்கும் நன்றியும், பயண பிரிவையும் பகிர்ந்து கொண்டு இருவரும் தங்கள் அறைக்கு வந்தனர். சில மணித் துளிகள் இருவரும் தங்களின் பள்ளிக்கூட நாட்களை மீண்டும் நினைவுக்கு கொண்டு வந்து மகிழ்ந்தனர். அப்போது சுஜாதா சொன்னாள் பார்த்தியா ஷோபா எத்தனை தடைகள், எத்தனை போராட்டங்களை தாண்டி நாமும் இன்று இறுதி நிலைக்கு வந்துள்ளோம். தலையாட்டி சுஜாதாவின் கருத்தை ஆமோதித்தாள் ஷோபா.

உரையாடலின் ஊடே இருவரும் தங்களை மறந்து தூங்கிப்போனார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளாக நிம்மதியான தூக்கம் இல்லாதவர்கள், இன்று எல்லாம் நல்ல படியாக நிறைவுற்றது என்ற மன நிறைவோடு, அடுத்த வாழ்வின் மாறுதலை பகிர்ந்து கொண்டவர்கள் தங்களையே மறந்த தூங்கிப்போனார்கள். நடு இரவில் ஏதோ நினைவு வந்தவளாக கண் விழித்த ஷோபாவுக்கு அப்போது தான் தெரிந்தது. இருவரும் தூங்கிவிட்டோமே, நைற்றி கூட மாத்தாமல் என்பது. அறை முழுவதும் வெளிச்சமாக இருந்தது. ோபா எழுந்து சுஜாதாவின் உடுப்பை சரி செய்த விட்டு பெட்சீட்டால் மூடிவிட்டு தானும் இரவு உடுப்பை மாற்றிக்கொண்டு மீண்டும் படுத்துக் கொண்டாள். சிறிய தூக்கம் கொண்டதால், உடனே தூக்கம் வராமல் அங்கும், மிங்கும் புரண்டு படுத்த, அப்படியே தூங்கிப்போனா.



காலைச் சூரியனின் சூடு பட்டு எழுந்த சுஜாதாவுக்கு என்ன இது தூங்கிப் போனேனே, நன்றாக விடிந்து விட்டதே என்று எண்ணிக்கொண்டு ஷோபாவின் கட்டிலை பார்த்தாள், அங்கு ஷோபா இல்லை, எங்க இவள் ஏன் என்னை எழுப்பவில்லை என எண்ணும் போது கதவு திறந்து கொண்டு வந்த ஷோபா குட் மோர்னிங் என்றால் பதிலுக்கு மோர்னிங் சொன்ன சுஜாதா என்னடி என்னை எழுப்பாமல் என்று கேட்க, நீ நன்றாக துாங்கிங்க்கொண்டிருந்தாய் அதனால விட்டுவிட்டன் என்றாள். இருவரும் சிறிது நேர உரையாடலின் பின் ஷோபா என்னடி இன்றைய பகல் பொழுதை எப்படி நகர்த்துவதென்று தெரியாமல் உள்ளது என்றாள். அதற்கு சுஜாதா நான் ஒரு யோசனை சொல்லுறன் கேட்பியா? என்றாள். என்ன யோசனை என கேட்ட ஷோபாவுக்கு, நாம் பிரயாணத்திற்கான எல்லா ஆயத்தங் களையும் செய்து விட்டு வெளியில் போய் சாப்பிட்டு வர நேரம் சரியாகிடும் என்றாள்.

ஆமா இது நல்ல யோசனையாக இருக்கிறது என்ற ஷோபா தன்னுடைய பொருட்களை எடுத்து வைக்க ஆரம்பித்தாள். இருவருமாக பயண ஆயத்தங்களை செய்து வைத்துவிட்டு வெளியில் சென்றனர். முதலில் கோவிலுக்கு போய் சாமி கும்பிட்டு விட்டு, சில கடைகளில் ஏறி இறங்கி ஏதும் வேண்டலாமா என சுஜாதா கேட்டாள். ஷோபாவுக்கு எதுவும் வேண்டுவது விருப்பாக இல்லை, காரணம் தேவையான எல்லாம் வேண்டியாகிவிட்டது. இந்த கடை சுற்றுலா வெறும் நேரம் போக்காட்டுவதற்கானது என்பதில் மிகவும் தெளிவாக இருந்தாள். அது மட்டுமல்ல சுஜாதாவையும் எதுவும் வேண்ட விடவில்லை. தங்களின் படிப்பு காலத்தில் பிள்ளைகளுக்கு ரியுசன் சொல்லிக்கொடுத்து வந்த காசில் தான் தங்களின் நாளாந்த தேவைகளை பூர்த்தி செய்து வந்தார்கள். அப்படி வந்த காசில் வீட்டுக்கு கொண்டு போகவேண்டுமென்று சேர்த்து வைத்த காசில் இருந்து செலவு செய்வதற்கு ஷோபாவுக்கு சிறிது கூட விருப்பம் இல்லை.

புகையிரத நிலையத்திற்கு போவதற்கான நேரமும் வந்தது, அவர்கள் சொல்லி வைத்திருந்த வானும் சரியான நேரத்திற்கு வந்தது. ஷோபாவுக்கு ஒரே ஆச்சரியம். வான் ஓட்டினரிடம் கேட்டே விட்டாள் என்னணண்ணே நீங்கள் இன்றைக்கு இப்படி சரியான நேரத்திற்கு வந்திட்டீங்க என்று, ஓட்டினருக்கு ஷோபா கேட்டதின் உள்ளர்த்தம் புரிந்து வெட்கப்பட்டார். காரணம் எப்போதும் பிந்தி வந்து பதட்டத்தை உருவாக்குவது தான் அவரின் செயற்பாடு. பிரிவிற்கு காலம், நேரம் ஏன் வான் கூட ஒத்துழைக்கிறது என்று சுஜாதா சொல்லி சிரித்தாள். வண்டி புகையிரத நிலையத்துக்கு வந்து சேர்ந்தது. இருவரும் வேறு வேறு புகையிரதத்தில் பயணம் செய்யவேண்டும். தங்கள் புகையிர தம் நிற்கும் மேடையை அறிந்து கொண்டு தங்களின் இறுதி பிரியாவிடையை கண்கள் கலங்க பகிர்ந்து கொண்டு விடை- பெற்றனர்.

மாவிலாறு கிராமமே ஒரு வகையான மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தது. கருத்தாயின் எண்ணங்கள் மகள் ஷோபாவையே சுற்றி சுற்றி வந்துகொண்டிருந்தது. தன் வாழ்வில் அனுபவித்த துன்பங்களுக்கெல்லாம் விடிவு காலம் வந்து விட்டது, என் குழந்தைகளின் வாழ்வில் விடியல் ஏற்பட்டு விட்டதென்று நினைத்தவளின் மனதில் சொல்லொனா சந்தோசம். இப்போது கூட தன் வாழ்வைப் பற்றி சித்திக்காதவளாக, பிள்ளைகளின் வாழ்வு சார்ந்தே சிந்தித்தாள். இங்கு தான் பெண்மையின், தாய்மை மனித உள்ளங்களை வெற்றி கொள்கிறது. ராதா, சிநேகா அங்குமிங்கும் ஓடி, ஓடி வேலை செய்துகொண்டு இருந்தார்கள். ஷோபாவின் வரவுக்காய் ஊரே காத்திருந்தது.

புகையிரதத்தை சுற்றி எங்கும் இருள் மயம். நேரமும் நடுச்சாமத்தினை நெருங்கிக் கொண்டிருந்தது. இதனால் அதிகமான பயணிகள் தங்களை மறந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். ஷோபாவின கண்களில் தூக்கம் வரவில்லை. மாறாக தன் தாயின் நினைவுகள் தான் சுற்றிச்சுற்றி வந்தது. அம்மா என் அம்மா என வாய் உசிசரித்தது. எங்கள் குடும்பத்தின் வாழும் தெய்வம். என்றும் தன் சுமைகளை மனம் கலங்காமல் சுமப்பவ என் அம்மா. எங்களோடு என்றும் அன்பைத்தவிர வேறு எதையும் பகிர்ந்து கொண்டவவில்லை. நாங்களாக எங்கள் அம்மாவின் சுமைகளை உணர்ந்து வாழ்ந்து வருகின்றோம். அழகான அக்காக்கள் இன்று எனக்காக எத்தனை தியாகங்களை செய்கின்றார்கள். தங்களின் முழு உழைப்பையும் மகிழ்ச்சியாக என் படிப்பிற்காக செலவு செய்தவர்கள். இளமையின் கனவுகளை தொலைத்தவர்கள் என் அக்காக்கள். என் வாழ்க்கை யாவும் இந்த மூன்று பேரின் மகிழ்ச்சியில் தான் இருக்கின்றது என்பதில் எள்ளளவும் மாற்றம் இல்லாதவளாகவும், தான் வேலை தொடங்கியதும் ராதா அக்காவின் திருமணம் செய்து வைக்கவேண்டுமென்றும் எண்ணிக் கொண்டிருந்த ஷோபா அமைதியின் பிடியில் சிக்கி உறங்கிப்போனாள். தொடரும்...



- ஆசீர் அன்ரனி -
ஸ்காபரோ, கனடா

AERO COURIER
Fast & Secure World Wide Service
உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது......
கொழும்பு-திருகோணமலை-மட்டக்களப்பு-மன்னார்-வவுனியா
கிளிநொச்சி-யாழ்ப்பாணம் கண்டி மற்றும் இந்தியா-ஐரோப்பிய
நாடுகள் அனைத்து இடங்களுக்கும் உங்கள் பொதிகளை
பாதுகாப்பாக அனுப்ப வேண்டுமா? எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!
Tel: 416.292.0444
5635 Finch Ave East Unit 2&3
Toronto On.M1B 5K9

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# ஆசனங்களில் அசத்தும் அதிசயப் பாட்டி!

நானம்மா பாட்டிக்கு வயது 93. “உருவத்தைப் பார்த்து வயதைக் கணக்கிடாதே” என்பது நானம்மா பாட்டிக்கு சரியாகப்பொருந்தும். ஆறு அடியை எட்டும் உயரத்தில் ஆரோக்கியமாக வலம் வருகிறார். 50 வகையான யோகாசனங்களை அசாத்தியமாகச் செய்து நம்மை விழி விரியவைக்கிறார்.




**◊ வரலக்சுமி ◊**

நாள்தோறும் செய்யும் யோகப் பயிற்சியின் மூலம், தனது மனதையும் உடலையும் வலுவாக வைத்துள்ள நானம்மாளை சந்தித்தோம். கோவை கணபதியில் வீடு. தேன் கலந்த தண்ணீர் கொடுத்து உபசரித்தார். தாகத்தில் நாம் செம்பை வாயில் கவிழ்க்க, “மளமளன்னு குடிக்காத கண்ணு! பொறுமையா சுவைச்சுக் குடி” என்று சொன்ன வார்த்தைகளிலேயே, அவர் வாழ்க்கையை எவ்வளவு ரசித்து வாழ்கிறார் என்பது புரிந்தது. என் சொந்த ஊர் பொள்ளாச்சிக்குப் பக்கத்தில் இருக்கிற ஜமீன் காளியாபுரம். 1920-ம் வருடம் பிறந்தேன். எங்க குடும்பத்தில் தொடர்ந்து அஞ்சு தலைமுறையா யோகா செய்துட்டு வர்றோம். என் தாத்தா மன்னார்சாமியிடம், அஞ்சுவயசுல யோகாசனம் கத்துக்க ஆரம்பிச்சேன். கல்யாணமான பிறகும்கூட, தொடர்ந்து பயிற்சி செஞ்சுவந்தேன். எனக்கு ரெண்டு மகன்கள், மூன்று மகள்கள். அஞ்சு பிள்ளைகளுமே சுகப்பிரசவம்தான். எல்லாப் பிள்ளைகளுமே இன்னைக்கு யோகாசன ஆசான்களாக, வேறவேற ஊர்கள்ல இருக்காங்க.

நான் இதுவரை, யோகாசனப் பயிற்சியை எதுக்காகவும் தவிர்த்ததே இல்லை. எனக்கு எந்த வியாதியும் வந்ததும் இல்லை. இன்னிக்கு வரை ஆஸ்பத்திரி பக்கம் போனதும் இல்லை. யோகாசனம் செய்றதால, என் எலும்பு மூட்டுகள் ரொம்பவலுவா இருக்கு. யோகா செய்தால், உள்ளுறுப்புகளுக்கு ரத்த ஓட்டம் கிடைக்கும். கணையம், சிறுநீரகம், இதயம் எல்லாம் முழு பலத்துடன் இயங்குறதால, நோய் எதிர்ப்பு சக்தி உருவாகும். பெண்களுக்கு கர்ப்பப்பை பிரச்னை இருந்தாலும், தானாகவே போயிடும். இந்த விழிப்பு உணர்வு நம்ம மக்கள்கிட்ட வரணும்கிறதுக்காகதான் ஊருக்குள்ள எடுத்துச் சொல்லி வர்றேன்.

யோகாசனம் செய்தால், ஆழ்ந்த அமைதி நிலையை எளிதில் பெறலாம். நான் ராத்திரி படுக்கப்போனால், விடிகாலையில்தான் விழிப்பேன். பல் துலக்குறது, குளிக்கிறது



மாதிரி யோகாசனத்தையும் தினசரி தவறாமல் செஞ்சுடறதுதான் என்னோட பெரிய பலம்!” - அழகாகச் சிரிக்கிறார் பாட்டி. உணவுப் பழக்கத்தைப் பற்றி கேட்டதற்கு, தினமும் காலையில் வேப்பங் குச்சியை ஒரு கால் மணி நேரம் பல்லுக்குள்ளவெச்சு மென்னுக்கிட்டே இருப்பேன். வேப்பங் குச்சியின் கசப்பு வாயில் இறங்குகிறப்போ, ரத்தத்தில் உள்ள கிருமிகள் அழிவதோட சர்க்கரை நோய் வர்றதையும் தடுக்கும். காலையில் சூர்ய நமஸ்காரத்தில் தொடங்கி, சில மணி நேரம் ஆசனங்களைச் செய்வேன். காலையில் ராகி, கம்பு, மக்காச்சோளம், பாசிப்பயிறு, வரகு, தினை, கோதுமை, சிவப்புஅரிசி, தானியங்கள்னு ஏதாவது ஒண்ணை வறுத்து அரைச்ச மாவில் காய்ச்சிய கூழில் மோர், உப்பு சேர்த்துக் குடிப்பேன். மதியம் சாதம், காய்கறிகள், கீரை, கொஞ்சம் மோர் சேர்த்துக்குவேன். ராத்திரிக்கு ஒரு டம்ளர் பால், ரெண்டு வாழைப்பழம்’’ என்ற நானம்மாள் பாட்டி, காபி, டீயைத் தவிர்த்துவிட்டு, கருப்பட்டி கலந்த சுக்குக் காபியைத்தான் அருந்துகிறார்.

செஞ்சுரி அடிக்கப்போகும் இந்த வயதிலும், பாட்டிக்குக் கூர்மையான பார்வைத் திறன். “பூமியில் உள்ள எல்லாமே நம் உடல்ல இருக்கு. நமது சக்திகளின் ஓட்டப்பாதை தடையில்லாமல் போறதுக்கும் உடலைச் சமநிலையில் வெச்சுக்கறதுக்கும் யோகா ஒன்றே தீர்வு’’ எனக் கூறும் இந்தப் “பேரிளம்பெண் தன் உடலை ரப்பர் போல வளைத்து சர்வாங்காசனம், மச்சாசனம், யோகமுத்ரா, வஜ்ராசனம், ஹாலாசனம், தூலாசனம், பச்சிமோதானாசனம் என்று மிகச்சிரமமான ஆசனங்களையும் அனாயாசமாகச் செய்து அசத்துகிறார்.

## பாட்டியின் சாதனைகள்

கோவையில் 50 வயதுக்கு உட்பட்டோருக்கான யோகாசனப் போட்டியில் கலந்துகொண்டு தங்கப்பதக்கம் வென்றவர். மாநில அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு பதக்கங்கள் குவித்தவர். சமீபத்தில் அந்தமான், நிகோபர் தீவில் நடை-



பெற்ற, தேசிய அளவிலான யோகாசனப் போட்டியில், சாம்பியன் ஆப் சாம்பியன்ஸ் பிரிவில் தங்கப் பதக்கம் பெற்றிருக்கிறார். குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் யோகா பயிற்சியளிக்கும் நானம்மாள், துரித உணவுகளைத் தவிர்ப்பது குறித்து பள்ளி, கல்லூரிகளில் விழிப்பு உணர்வு முகாம்களை நடத்துகிறார். வாழ்த்த வயது இல்லை பாட்டி... வணங்குகிறோம்!

## நான் வாசித்து மகிழ்ந்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே. அனுப்புங்கள்

***Vlambaram@sympatio.ca***

யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!


TUTORING

KEEN TUTORING CENTRE

By Qualified & Experienced Tutors

- CHEMISTRY, PHYSICS, BIOLOGY
- FUNCTIONS, ADV. FUNCTIONS
- CALCULUS & VECTORS, DATA MGT
- SCIENCE, MATH, ENGLISH, FRENCH

Individual & Small Group classes, Individual care

GR 1-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"

SPECIAL CLASSES FOR
- PRE-UNIVERSITY
- MCAT EXAM
- IB & AP program

- SUMMER CLASSES "July- August"
- REGULAR CLASSES "Throughout the year"

Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956

www.keentutoringcentre.com

உதைபந்தாட்ட பயிற்சிகள்

ஜாவேஸ் விளையாட்டுக் கழகம்

ரொரன்றோ நகரில் பிரபல்யம் வாய்ந்த Jarvis விளையாட்டு கழகம் கடந்த 29 ஆண்டுகளாக அனுபவம் மிக்க பயிற்சியாளர்கள் மூலம் பல வயதுக்குட்பட்ட பிரிவுகளுடைய உதைபந்தாட்ட வீரர்களுக்கு பயிற்சி அளித்து வருவது யாவரும் அறிந்ததே. 2014 ஆம் ஆண்டு உலகக்கிண்ண (World Cup) போட்டிகளில் கலந்து கொண்ட சேர்பியா நாட்டைச் சேர்ந்த Ratomir Boryaa அவர்களைக் கொண்டு ஒவ்வொரு திங்கள், செவ்வாய் வியாழக்கிழமைகளில் அனைத்து வயதுக்குட்பட்ட விளையாட்டு வீரர்களுக்கும் உதைபந்தாட்ட பயிற்சிகள் ***Scarborough Albert Cambell (MCCOWAN & FINCH) 6:30pm*** ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதால் தயவு செய்து முன் கூட்டியே உங்கள் விண்ணப்பங்களை தொலைபேசி மூலம் பதிவு செய்துகொள்ளுங்கள்.

***Pakker: 416.846.4403 Siva: 416.450.5473***
***Thambiyan: 416.897.5218***

MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at ***Scarborough & Stouffville Contact: 647.340.9490 / 416.732.2228***

# இந்திய திரைஉலக வரலாற்றை மாற்றிய - கோச்சடையான்

ரஜினிகாந், தீபிகா நடித்த, ரஜினியின் மகள் சௌந்தர்யா இயக்கிய, இந்திய திரை உலக வரலாற்றை மாற்றும் என எதிர்பார்க்கப்பட்ட படம் கோச்சடையான். ஒரு வரலாற்று கதையை வைத்து எடுக்கப்பட்ட படம்தான் கோச்சடையான். அனாதை போல் சொந்த ஊரை விட்டு ஓடும் சிறுவனான ரணா என அழைக்கப்படும் ரணதீரனின் கதை இது. ரணா வளர்ந்து கலிங்கபுரி ராஜ்யத்தின் படைத் தளபதி ஆகிறார். பின்னர் அங்கிருந்து கோட்டைப் பட்டினத்திற்கு படையெடுத்து சண்டைக்கு போகும் நேரத்தில் அந்நாட்டு படையுடன் சேருகிறார். இது ஏன் என்று மிச்ச படத்தை பார்த்து அறியலாம்.

மே 23ஆம் திகதி கோச்சடையான் படம் இந்தியாவிலும் வெளிநாட்டுகளிலும் 6,000 திரைகளில் வெளியிடப்பட்டது. இது பல மொழிகளிலும், 3டி இலும் வெளியிடப் பட்டது. இதுதான் இந்தியாவின் முதல் Motion Capture முறையில் தயாரித்த படமாகும். Motion Capture என்றால், நடிகரை ஒரு Suit இல் போட்டு நடிக்க விடுவார்கள். அந்த Suit நடிகரின் அசைவு களையும், முகபாவனைகளையும் கணினியில் பதிக்கும். இதை வைத்து Animators படம் கீறுவார்கள். இதனால் Live action படத்தின் உண்மையான தோற்றமும் Animation கற்பனையும் சேர்ந்து படம் தயாரிக்க முடியும்.

இந்த Motion Capture ஐ Avatar, Adventures of Tintin போன்ற ஆங்கில படங்களில் காணமுடியும். பொதுவாக படத்தின் முக்கியமான கதாபாத்திரம் மனித தோற்றமில்லாதவராக இருந்தால் இதைப் பாவித்து படத்தை செய்வார்கள். கோச்சடை யானின் Animation Avatar ஐ போல் இல்லாமல் இருந்தாலும் இது இந்திய திரை உலகம் எடுக்கும் முதல் முயற்சி என்பதால் இதைப் பாராட்ட வேண்டும். அதற்கு மேல் இதில் தவறுகள் பிடிப்பது கடினம்.



கோச்சடையானில் குதிரையின் காதின் அசைவும், கதாநாயகி ஆடும் போது துணிமடியும் விதமும் மிக நுணுக்கமாக எடுக்கப்பட்டுள்ளது. London, Japan போன்ற நாடுகளிலிருந்து Animators இதை தயாரித்து இருந்தார்கள். படத்தின் தொடக்கத்திலும் பார்வையாளர்களுக்கு படம் தயாரித்த முறையை காட்டுகிறார்கள்.

இப்படத்தில் ஆடல் காட்சிகளும், சண்டைக் காட்சிகளும் நிறைய உள்ளன. ஒரு சண்டை காட்சி நடுக்கடலில் நடக்கிறது. கதாநாயகிக்கு உண்மையான (நகைச்சுவை யாக இல்லாமல்) சண்டை காட்சி ஒன்று உள்ளது. கோச்சடையானுக்கு இதில் ஒரு ஆடல் காட்சியும் உள்ளது.

பாடல்களும் இப்படத்தில் நன்றாக உள்ளன. இது ரஜினி படம் என்பதாலும், பழைய காலத்தில் நடைபெறும் கதை என்பதாலும் வழமையான பாடல்களை விட இது வித்தியாசமானது. இதில் ஒரு பாடலில் கோச்சடையான் தன் படைகளுக்கு அறிவுரைகள் கூறுகிறார். இதில் பல நல்ல கருத்துள்ள வரிகள் உண்டு. உதாரணத்திற்கு, பாட்டின் முதல்வரி, 'எதிரிகளை ஒழிக்க எத்தனையோ வழிகள் உண்டு. முதல் வழி மன்னிப்பு' என்கிறார்.

இந்தியப் படம் உலக நூற்றாண்டு கால வரலாற்றில் தனது அடுத்த படிக்கு முன்னேறியுள்ளது என்பதில் சந்தேக மில்லை. வரலாற்று கதையை பார்க்கவும், வரலாற்றில் பங்குபெற விரும்புபவர்களும் இதைப் பார்க்கலாம்.



ஞா. ஆரணி
அகவை 15

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.


# HOME TUTORING

**About the Teacher**

- Bachelors and Masters in Mathematics (U of Toronto). Masters (2008) and Doctorate (Ph. D, 2013) in Computer Science (U of Ottawa)
- More than ten years of experience as teaching assistant at U of Toronto (Scarborough and St. George) and U of Ottawa. Courses taught include Calculus, Linear Algebra, Java Programming, Operating Systems, Discrete Mathematics, and Linear Programming.
- Extensive knowledge and experience in Mathematics, Physics, Computer Science, Computer Programming
- Expert problem solver. Self-taught in basics of educational psychology

**Courses taught Include:**

- Grade 9 and 10: Mathematics, Science, and Computer(Grade 10 only) Courses (Ontario Secondary Schools)
- Grade 11 and 12: Mathematics, Physics, Chemistry, and Computer Courses (Ontario Secondary Schools)
- University: Mathematics, Computer Science (including computer programming ), Statistics, Physics , and Chemistry(First two years only)

To The Top Tutoring

**Teaching and Learning Philosophy :**

- Teaching should be such that what is offered is perceived as a valuable gift and not as a hard duty.- Albert Einstein (Physicist)
- Develop a passion for learning. If you do, you will never cease to grow. -Anthony J. D'Angelo (Entrepreneur)
- The person who graduates today and stops learning tomorrow is uneducated the day after. - Newton D. Baker (Politician)
- The illiterate of the 21st century will not be those who cannot read and write, but those who cannot learn, unlearn, and relearn. - Alvin Toffler (Writer and Futurist)
- Those who pretend to know what they don't, will be thought ignorant of even what they know. – Thiruvalluvar (Tamil Poet and Philosopher)

Dr. பாலமோகன்: 416.551.2553 / 647.998.2553

# Education

## Answer Key : 14-9

### ➢ FUNCTION 11

(A) $k < 3$

(B) (i) $f(x) = 5x + 7$ (ii) $f(x) = -\frac{3}{2}x + 3$

(C) (i) $\frac{x+3}{x^2-4x-21}$, $\frac{1}{(x-7)}$ $x \neq 7, x \neq -3$

(ii) $\frac{x^2-3x-10}{x^2-2x-15}$ ; $\frac{(x+2)}{(x+3)}$ , $x \neq 5, x \neq -3$

### ➢ ADV. FUNCTIONS 12

Prove , $\frac{2\tan x}{1+\tan^2 x} = \sin 2x$

$2\tan x = \frac{2\sin x}{\cos x}$

$1 + \tan^2 x = 1 + \frac{\sin^2 x}{\cos^2 x}$

$= \frac{\cos^2 x + \sin^2 x}{\cos^2 x} = \frac{1}{\cos^2 x}$

Therefore,

$\frac{2\tan x}{1+\tan^2 x} = 2\sin x . \cos x = \sin 2x$

(ii)$\log_a x = 3$ and $\log_a y = -2$, determine $\log_a(\frac{x^2}{y^3})$

$\log_a x - (\log_a y^3) = \log_a x - 3(\log_a y) = 11$

### ➢ CHEMISTRY 12 & IB

$C_6H_6 + AlCl_3 \rightarrow C_6H_5CH_3 \rightarrow C_6H_5COOH$

$CH_3CH_2CH_2OH + H_2SO_4 \rightarrow CH_3CH(OH)CH_3 \rightarrow CH_3COCH_3$

$CH_3CHO \rightarrow CH_3CH_2OH \rightarrow CH_3COOCH_2CH_3$ ; $CH_3CHO \rightarrow CH_3COOH \rightarrow CH_3COOCH_2CH_3$

(ii) (a)$C_2H_5OH$ –weak base but nucleophilic $SN_1$ favour

$(CH_3)_2CH\text{-}OC_2H_5$ major; $CH_3CHCH_2$ minor

(b) $C_2H_5O^-$ Strong base $E_2$ predominates

$(CH_3)_2CH\text{-}OC_2H_5$ minor; $CH_3CH{=}CH_2$ major

### ➢ PHYSICS 11

The two frequencies are too far apart to produce beats. However, The piano string will oscillate not only in its fundamental mode at (110Hz) when tuned, but also in its second harmony mode (220Hz)) when its tuned. Therefore with the string somewhat out of tune, the frequency of its second harmonic will beat the 220Hz of the tuning fork.

## Review Tutorials 14 -10

### ➢ CHEMISTRY Gr 12

(A)The $K_{sp}$ of AgCl is $1.0 \times 10^{-10}$, and the Ksp of AgI is $8.3 \times 10^{-17}$. A solution is 0.100 M in $F^-$ and $Cl^-$. What is the concentration of iodide ions when AgCl just starts to precipitate?

(B)(i) The data below shows the results of three experiments carried out to find out the rates of the following reaction. $2 NO (g) + Cl_2 (g) \rightarrow 2NOCl(g)$

| Expt | initial con (mol/L) [NO] | $[Cl_2]$ | Initial rate of Reaction.(mol/L.s) |
|---|---|---|---|
| 1 | 0.02 | 0.04 | $3.10 \times 10^{-5}$ |
| 2 | 0.02 | 0.08 | $6.10 \times 10^{-5}$ |
| 3 | 0.04 | 0.12 | $3.61 \times 10^{-4}$ |

Rate = k $[NO]^x [Cl_2]^y$

(a) Determine $x$ and y , and write the rate law equation for the reaction.

(b) Calculate the value of the rate constant, with the appropriate units.

(ii) Determine the standard enthalpy change for the following reaction.

$2 NO (g) + Cl_2 (g) \rightarrow 2NOCl(g)$ ΔH

Heat of formation of NO and NOCl are 90.25KJ/mol and 51.71kJ/mol respectively.

### ➢ BIOLOGY Gr 12

1. Explain, why the use of genetically modified herbicide-resistant crop plants in an agricultural ecosystem is a problem?
2. Two of the side effects of this chemotherapy are that sperm production stops and red blood cell number decreases. Explain why this is the case.

### ➢ PHYSICS Gr 11

(i)Explain why the output of an AC generator is stepped up when in transmitting electric power across long distances.

(ii) A high-resistance voltmeter connected across the battery reads 12 V when the switch is open. When the switch is closed the voltmeter reads 10.8 V. Suggest why this might be.

### ➢ CHEMISTRY Gr 11

A 1.35 g sample of pure Al reacts with excess HCl, and the liberated $H_2$ is collected over water at 30°C. The barometric pressure =755mmHg. What volume of gaseous mixture , in litres, is collected? SVP ($H_2O$) at 30°C=31.5 mmHg.

Answer key 14-10 - next issue

Contact: 647 341 3975
Dr. K.A.Srikrishnaraj
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

# தவறான...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

மருத்துவர்களுக்காக ஆஜராக இந்நிறு வனத்தின் நிபுணர்கள் தயாராக இருப்பதும், சில நேரங்களில் மருத்துவர்களின் தவறுகளை நிரூபிப்பதில் உள்ள சிக்கல்கள் போன்றவற்றால் இவ்வழக்குகளில் வெற்றி பெறுவன 2% மட்டுமே என்கின்றர்.

கனடாவின் மருத்துவ துறையினரை பாதுகாக்கும் 'மருத்துவ பாதுகாப்பு நிறுவனம்' (CANADIAN MEDICAL PROTECTIVE ASSOCIATION) கனடாவில் இயங்கும் மருத்துவர்களை முக்கியமாக சட்டத்தின் பிடியிலிருந்து பாதுகாப்பதற்காக 1901ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வரும் ஒரு மிகப்பெரிய நிறுவனம் இது 'கனடா மருத்துவ பாதுகாப்பு நிறுவனம்' என அழைக்கப்படும். இதன் தலைமையகம் தலைநகரான ஒட்டாவா நகரில் பின்வரும் முகவரியில் இயங்கி வருகின்றது.

**CANADIAN MEDICAL PROTECTIVE ASSOCIATION**
875, CARLING AVE. OTTAWA, ON K1S 5P1
தொலைபேசி - 1.800.267.6522

கனடாவில் இயங்கும் 95% வீதமான மருத்துவர்கள் இந்நிறுவனத்திற்கு வருடா வருடம் கட்டணம் செலுத்தி இதில் அங்கத்தவர்களாக உள்ளனர். 2010 ஆம் ஆண்டு பெறப்பட்ட புள்ளிவிபரப்படி சுமார் 78,000 கனடிய மருத்துவர்கள் இந்நிறுவனத்தில் அங்கத்தவர்களாகவுள்ளனர். இந்நிறுவனம் கனடிய மருத்துவ உலகத்திற்கு தம்மிடம் வளர்ந்து வரும் பலமில்லியன் டொலர் முதலீட்டு திட்டத்தினூ டாக பலபணிகளை செய்து வருகின்றது. முக்கியமாக மருத்துவதுறையின் தவறுகள் நீதிமன்ற விசாரணைக்கு வரும்போது அவர்களை பாதுகாக்கும் சகல சட்ட செலவுகள், நீதிமன்ற கட்டணங்கள் எதிராக தீர்ப்பு வந்தால் நட்டஈடுகள் யாவும் இந்நிறுவனமே பாதிக்கப்பட்ட நோயாளருடன் பேரம்பேசி தீர்த்து வைக்கின்றது. மருத்துவர்களுக்கு எதிராகவோ அல்லது வைத்திய சாலைக்கு எதிராகவோ பாதிக்கப்பட்ட நோயாளிகள் நட்டஈடு கோரி வழக்குகளை முன் எடுக்கும்போது அதில் நோயாளிக்கு சாதகமாக தீர்ப்பு வந்தால் நட்டஈடு என்பது இரு தளங்களிலிருந்து வழங்கப்படுகின்றது.

1. மருத்துவர்கள் வைத்திருக்கும் தொழில் பொறுப்பு காப்புறுதி திட்டம் (Professional liability insurance coverage)

இக்காப்புறுதி ஒப்பந்தம் மருத்துவர்களுக்கு மட்டுமல்ல, சகல தொழில்துறை சார்ந்தவர்களும் தங்களின் தொழில் மூலம் ஏனையோருக்கு பாதிப்பு ஏற்பட்டால் அதற்குரிய நட்டஈடு வழங்கி பாதுகாப்பதற்காக இதற்கு பணம் செலுத்தி பெற்று வைத்திருப்பது வழமையாகும்.

2. கனடிய மருத்துவ பாதுகாப்பு நிறுவனம். (The Canadian medical protection association)

யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

விளம்பரம் பத்திரிகையை இணையத்தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com
www.tamilvanakkam.com



Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# அனுபவ அறிவு வாய்ந்த ஒரு தந்தை மகனுக்கு எழுதிய கடிதம்



ஒரு தந்தை மகனுக்கு எழுதிய கடிதம் மகளுக்கும் கூட இது பொருந்தும்

ஒரு தந்தை தன் மகனுக்கு எழுதிய கடிதம் / அருமையான கடிதம்.

இக்கடிதம் புகழ் பெற்ற ஹொங்காங் தொலைக்காட்சி ஒலிபரப்பாளர், குழந்தை உளவியல் நிபுணரால் அவருடைய மகனுக்கு எழுதப்பட்டது. இக்கடிதத்தில் உள்ள வார்த்தைகள், கருத்துக்கள் உண்மையிலேயே நம் அனைவருக்கும் பயனளிப்பதாகும். இளமையானவர்கள், முதியவர்கள், குழந்தைகள் அல்லது பெற்றோர்கள் அனைவருக்கும் இது பயனளிக்கும். அனைத்து பெற்றோர்களும் தங்களுடைய குழந்தைகளுக்கு இதனை படிப்பினையாக கற்பிக்கலாம்.

## அன்புள்ள மகனுக்கு,

மூன்று காரணங்களுக்காக நான் இதை உனக்கு எழுதுகிறேன்:

1. வாழ்க்கை, அதிஷ்டம், நல்ல வாய்ப்பு, இடையூறுகள் ஆகிய அனைத்தும் முன் மதிப்பிட்டு அறிய (கணிக்க) முடியாதவை. தாம் எவ்வளவு காலம் வாழ்வோம் என்று எவரும் அறிவதில்லை. சில கருத்துக்களை, அறிவுரைகளை சரியான நேரத்தில் (முன்கூட்டியே) கூறிவிடுவது நல்லது.

2. நான் உன்னுடைய தந்தை. நான் உனக்கு இதனை கூறாவிடில் உனக்கு இதனை யாரும் கூறப் போவதில்லை.

3. நான் உனக்கு எழுதுவது யாதெனில், எனக்கேற்பட்ட சிறு அளவிலான சொந்த அனுபவங்களேயாகும். இது ஒரு வேளை தேவையற்ற அதிகப்படியான இதய வலிகளிலிருந்து உன்னைக் காக்க இயலும்.

கீழ்க் கண்டவற்றை நீ உன் வாழ்க்கை முழுவதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. உன்னிடத்தில் நல்லவர்களாக நடந்து கொள்ளாதவரிடம் நீ உன் வன்மத்தை, பொல்லாங்கை காட்டாதே. உன் அம்மாவையும் என்னையும் தவிர உன்னை நல்லவிதமாக நடத்திச் செல்லும் பொறுப்பு எவருக்குமில்லை. உனக்கு யாராவது நல்லவர்களாக இருப்பின் அது உனக்கு கிடைத்த புதையல், பொக்கிஷம் போன்ற தாகும். அவர்களுக்கு நீ நன்றி உடைய வனாக இரு. மேலும் நீ அவர்களிடத்தில் கவனமாக நடந்து கொள்ளுதல் அவசியம். ஏன் எனில் ஒவ்வொருவரின் அணுகுமுறை யும் ஏதேனும் ஒரு நோக்கத்துடனேயே இருக்கிறது. உன்னிடத்தில் ஒரு மனிதன் நல்லவனாக நடந்து கொள்கிறான் என்றால், உன்னை அவன் உண்மையாக நேசிக்கிறான் என்று அர்த்தம் இல்லை. நீ விழிப்புடன் இருக்க வேண்டும். அவனை நீ ஆய்ந்தறியாமல், மதிப்பிடாமல் உண்மையான நண்பன் என்று கொள்ளாதே.

2. இந்த உலகில் இன்றியமையாதது என்று ஒன்று இல்லை. உனக்கு உடமையானது என்று எதுவும் இந்த உலகில் இல்லை. இந்த கூற்றினை நீ புரிந்து கொண்டாய் என்றால், உன்னை சுற்றி மனிதர்கள் சூழ்ந்திருந்தாலும், எவரும் தேவை இல்லை என்றாலும் அல்லது நீ அதிகமாக விரும்பிய ஒன்றையோ, ஒருவரையோ நீ இழக்க நேர்ந்தாலும் உன் வாழ்க்கையை நீ எளிதில் வழி நடத்திச் செல்ல இயலும்.

3. வாழ்க்கை என்பது மிகவும் குறுகிய காலத்திற்கு உட்பட்டது. இன்றைய வாழ்க்கையை நீ வீணடித்தாய் என்றால் உன் வாழ்க்கை உன்னை விட்டு சென்று விட்டதை நாளை நீ கண்டு கொள்வாய். வாழ்க்கையின் மதிப்பினை நீ எவ்வளவு விரைவில் உணர்ந்து கொள்கிறாயோ ஓரளவாகிலும் நீ வாழ்வினை அனுபவிப்பாய்.

4. அன்புதான் என்றாலும் அது உறுதியற்ற ஒரு உணர்வே ஆகும். காலத்தை பொறுத்தும் ஒருவரின் மனநிலையை பொறுத்தும் இந்த உணர்வு மங்கி, குறைந்து விடுகிறது. உன்னை மிகவும் நேசித்தவர் உன்னை விட்டு விலகிச் செல்லும் பொழுது நீ அமைதியாக இரு. காலம் உன் வலிகளையும் கவலை களையும் துடைத்தழித்துக் கொண்டு போய் விடும். இனிமையான அன்பையும், அழகையும் நீ மிகையாக எண்ணாதே. அன்பில்லாமல் போகின்ற தருணத்தில் ஏற்படும் கவலைகளையும் நீ பெரிதாகக் கொள்ளாதே.

5. வெற்றி பெற்ற நிறைய மனிதர்கள் நல்ல கல்வியறிவு பெற்றவர்கள் இல்லை. நீ சிரமப்பட்டு கல்வி பயிலாவிடின் வெற்றி பெற இயலும் என்பது இதன் பொருள் இல்லை. என்னென்ன அறிவுத் திறனைப் நீ பெற்றிருக்கின்றாயோ அது வாழ்க்கையில் உனக்கான ஆயுதங்களாகும். ஒரு சிலர் வாழ்க்கையில் உயர்கின்ற தருணத்தில் இன்னல்களை அனுபவிக்கின்றனர். ஒரு சிலர் துவக்கத்திலேயே இன்னல்களை சந்திக்க நேரிடுகிறது.

6. என்னுடைய வயதான காலத்தில், உன்னுடைய வருமானத்தை சார்ந்து வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எனக்கில்லை. அதேபோன்று உன்னுடைய வாழ்க்கை முழுதும் நான் உனக்கு நிதி ஆதாரங்களை அளிக்க இயலாது. உன்னை வளர்த்து ஆளாக்கும் வரையில் தான் என்னுடைய ஆதரவும் பொறுப்பும், நீ வளர்ந்து விட்ட பிறகு இந்த பொறுப்பு முடிவடைந்து விடுகிறது. அதன் பிறகு நீ தான் முடிவு செய்ய வேண்டும். நீ பயணிக்கப் போவது பொதுப் போக்குவரத்திலா அல்லது உன் சொந்த வாகனத்திலா, இரதத்திலா, வசதி படைத்தவனாக அல்லது ஏழையாக.

7. நீ கூறும் வார்த்தைகளுக்கு நீ மதிப்பளிக்க வேண்டும். ஆனால் பிறர் அவ்வாறு இருத்தல் வேண்டும் என்று நீ எதிர்பார்க்கக் கூடாது. நீ அனைவருக்கும் நல்லவனாக இரு. ஆனால் உனக்கு அனைவரும் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்காதே. நீ இதனை புரிந்து கொள்ளாமல் போனால் உன் வாழ்க்கை தேவையற்ற பிரச்சினை களில் உழல வேண்டி இருக்கும்.

8. நான் பல வருடங்களாக பரிசு சீட்டுக்களை வாங்கி இருக்கிறேன். ஆனால் எந்த பரிசும் எனக்கு அடித்ததில்லை, கிடைக்கவில்லை. நீ வசதி படைத்தவனாக வேண்டுமென்றால் நீ கடினமாக உழைக்க வேண்டும் என்பதையே இதுகாட்டுகிறது. இலவசமாக உணவு கிடைக்காது.

9. நான் உன்னுடன் எவ்வளவு அதிகப் படியான நேரம் இருக்கிறேன் என்பது ஒரு பொருட்டல்ல, நாம் ஒன்றாக இணைந்திருக் கும் அந்த நேரத்தை பெரும் பாக்கியமாகக் (பொக்கிஷம்) கருதுவோம். நமக்கு தெரியாது நாம் மறுபடியும் நம்முடைய அடுத்த பிறவியில் சந்திப்போம் என்று...

அன்புடன்
உன் அப்பா.

# Fascinating Roses



I saw clusters of roses
Where they were ornamenting houses:
Big ones, small ones, some as big as the moon,
Flutter, toss and dance against the sun.

Variety of colours, amber, move crimson,
Red, yellow, pink, lilac and snow white:
Withstand the heat when the sun at noon.
They appease all, and fill their sight.

They bloom here in abundance with little care,
Whereas, in Srilanka, they grow with much care.
Hail from the family of roses acae:
As ornamental plants to lure everyone.


- Kingsley

விரைவில்..........
விளம்பரம் பத்திரிகையில்
அகணி எழுதும் தொடர்கட்டுரை
"அன்புடைமை"

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji







**100% GUARANTEED RESULT**

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் Thulsidhar Swamiji சாஸ்திரிகள் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

* கைரேகை
* கல்வி, உத்தியோகம்
* வதிவிடப் பிரச்சினைகள்
* குடும்ப பிரச்சினைகள்
* குழந்தை பாக்கியம்
* எதிரிகள் பிரச்சினைகள்
* கர்ப்ப தோஷம்
* நாம நட்சத்திரம்
* தொழில் வியாபாரம்
* நீதிமன்ற வழக்குகள்
* திருமண யோகம்
* கணவன் மனைவி ஒற்றுமையின்மை
* சர்ப்ப தோஷம்
* கஸ்ட நஷ்டங்கள்

**பிளேக்**
**மஜிக் 3 நாட்களுக்குள் அகற்றி பதுகாப்புக்**
**கொடுக்கப்படும்**

GTA Square Mall (2nd Floor)
5215 Finch Ave. E., Unit #257
Scarborough ON M1S 0C2
(FINCH & MIDDLEFIELD)

**Tel.:647.856.0559**

**OPEN 7 DAYS A WEEK - 10 AM - 8 PM**

# VOTE EARLY

For Leadership that **Makes Sense** for Scarborough–Rouge River

**Call Neethan's Voting Hotline at 416-287-9292**



Elect

# Neethan Shan

Scarborough–Rouge River



Authorized by the CFO of the Ontario NDP.

**Andrea Horwath**
Leader of Ontario's NDP

**Neethan Shan**
NDP Candidate for Scarborough–Rouge River




எமது சமூகத்தில் கடந்த பல காலமாக ஓர் தன்னார்வத் தொண்டனாகவும், சமூக வேலைகள் பலவற்றை முன்னெடுத்தும், தலைமைதாங்கியும் செய்துவருகின்றேன். ஸ்காபரோ மக்களின் தேவைகளை முன்னிறுத்தி என்னால் திறம்பட செயலாற்ற முடியும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

கடந்த தேர்தலில் மிகச் சொற்ப வித்தியாசத்திலேயே வெற்றியை இழந்திருந்தோம். உங்களின் முழு ஆதரவுடனும், பங்களிப்புடனும் இம்முறை வெற்றியை எமதாக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

எமது பிரச்சார வேலைகளிலும், முன்கூட்டிய வாக்களிப்பிலும் முழுமையாகப் பங்குபற்றி உங்கள் ஆதரவை தருமாறு வேண்டுகிறேன். - நீதன்

416-287-9292
NeethanShan.ca
NeethanShan@ontariondp.ca
5790 Sheppard Avenue East, Unit 1
neethan.shan
@NeethanShan

ONTARIO NDP


289 நகைச்சுவைத் தொடர்


# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீசன்



ஆடுபுலி ஆட்டம், சதுரங்கம், ஏணியும் பாம்பும் வேறு வேறு விதங்களில் கிராமிய நாகரிக முறைகளில் விளையாடும் விளையாட்டுக்கள். ஆனால் பொதுமக்களை வதைப்பதும் சிதைப்பதும் அரசியல் சதுரங்கம்.






செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் ஐ பொட் அகிலாண்டேஸ்வரியும் ரி.வி.யில் மகாபாரதம் சீரியலை மிகவும் சுவராஸ்யமாக ரசித்துக் கொண்டிருந்தனர். பாண்டவர் சூதாட்டத்தினால் நாடு நகரம் ஏன் தங்களையே இழந்ததை அன்று பாரதச்சுருக்கத்தில் படித்ததையும் ரி.வியில் பார்த்ததையும் கலந்து ஐ பொட் அகிலாண்டேஸ்வரிக்கு விளங்கப்படுத்திக் கொண்டிருந்தா செல்லம்மா. பழங்கதையளை விடு. இப்ப நடக்கிறதுதான் உண்மையான ஆடு புலியாட்டம், சூதாட்டம்.



இந்திய புத பிரதமரின் அதிரடி நடவடிக்கையினால் பலர் மூச்சுத்திணறியுள்ளனர்.




பல காலப்பகையுள்ள பாகிஸ்தான் இன்றுவரை இழுபறியிலுள்ள இலங்கைப்பிரச்சினை பிடிபட்ட சிறையிலுள்ள மீனவர், போதைவஸ்து கடத்தியவர்களின் பிரச்சினை தீருமா தீர்க்கப்படுமா என பொதுமக்கள் செய்திகளைப்பார்த்தே காலத்தை வீணாக்குகின்றனர். நாங்கள் பார்க்கிற சீரியலை விட அரசியல் சீரியல் பொழுது போக்காக இருக்கு என சொல்லிச் சிரிச்சா ஆட்டிலறி அன்னம்மா



உலகர் படித்த பாடங்களையும் படிப்பித்தவர்களையும் மறப்பதில்லை...

ராமாயணத்தில் பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்ற கம்பரின் வரிகள்...

இன்றைய இந்தியப் பிரதமரும் பாகிஸ்தான் ஜனாதிபதி நவாஸ் செறிவ் கை குலுக்கும் காட்சி...



என்னமோ நடக்குது உலகத்திலே... மறைந்த சந்திரபாபுவின் பாடல் மனதில் வந்து போனது

அடிக்கடி கேட்ட மேடைப்பேச்சுக்கள் கலைஞர் கருணாநிதியின் குரலில் உலகரின் மனதில் எழுந்து விழுந்தது.

அரசியலில் நிரந்தர நண்பனுமில்லை நிரந்தர எதிரியுமில்லை.
அடேயப்பா! 1330 குறளை எழுதிய வள்ளுவர் இருந்திருந்தால்...
இடையிடை பிரிவதே நட்பு வேண்டின்
(சுயநல) தேவைக்கு சேர்வது தகும் என 1331வது குறள் எழுதியிருப்பார்.

'இப்படி மழையடித்தால் எப்படி குடைபிடிப்பேன்'



குளிர் குறைந்தது. வெயிலும் வெக்கையும், இடையிடை மழை. உலகர் குழாமை சந்தித்துவிட்டு ஐபொட் அகிலா – அகிலாண்டேஸ்வரி அந்தக்காலத்து மாணவிகள் போல சிறிய வர்ணக்குடையுடன் புறப்பட்டு போவதை செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் யன்னலால் பார்ப்பதை உலகர் கடைக்கண்ணால் பார்த்தார். மழை திடீரென இரைச்சலுடன் வரவும் குதியுயர்ந்த சப்பாத்துடன் ஓடவும் முடியாமல் திரும்பவும் உலகர் வீட்டுக்கு வர...

இப்படி மழையடித்தால் எப்படி குடைபிடிப்பேன் என செக்கண்ட்புளோர் செல்லம்மா பாட உலகர் திரும்பிப் பார்த்ததும் பாட்டை நிறுத்தினா செக்கண்ட் புளோர் செல்லம்மா.



வைகாசி ஆனி ஆடி ஆவணி புரட்டாதி - அதாவது அடுத்த குளிர் தொடங்குமுன் எத்தனை நிகழ்ச்சிகள்... கொடியேற்றம் தேர் தீர்த்தம் பூங்காவனம். வடக்கு கிழக்கு தெற்கு மேற்கென ரொரன்ரோவில் சகல திக்குகளிலும் திருவிழாக்கள் களை கட்டுகின்றன.



சீரியல் அடிமை சீனியோர்ஸ் பலர் சீரியலைவிட்டு வரமுடியாமல் சிவனையும் முருகனையும் சீரியல் பிறேக் வரும்போதுதான் நினைக்கின்றனர்.

ஆனால் பலர் சற்று சிந்தித்தவர்களாக முதியோர் நிகழ்சிகள் கருத்தரங்குகளில் பங்குகொண்டு தாமாகவே குழுக்களாக சேர்ந்து ராக்சி பிடித்து கோவில் சேர்ச் பொது நிகழ்வுகளில் பங்கு கொள்கின்றனர்.

இளையபாரதி வானொலியில் குறிப்பிடுவதுபோல இன்னும் கொஞ்சக்காலம் மிஞ்சிக்கிடக்கிறது. நாளை நமதே!

யூன் 2014 ஞாபகம் வருகிறதா

2. மன்னார் தீருக்கேதீச்சரம் கொடி

2. சர்வதேச குழந்தைகள் தினம்

2. 1766 - ப. கந்தப்பிள்ளை (ஆறுமுகநாவலரின் தந்தை) பிறந்தநாள்
 புலவர் ஆராச்சிக் கந்தர்

3. பண்டிதர் தா. முருகேசுபிள்ளை நினைவுநாள்

4. பூமாலை நடவடிக்கை அனுமதியின்றி இந்திய விமானங்கள்
 இலங்கை வான்பரப்பில் உணவுப்பொதிகளை வீசிய தினம்.
 (அனுமதியுடன் வந்து குண்டுகள் வீசியது பிற்காலம்)

5. 1956 யூன் 5 சிங்களம் மட்டும் சட்டம் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

5. உரும்பிராய் பொன். சிவகுமாரன் 1974 ல் பொலீஸ் சுற்றிவளைப்பின் போது
 சயனைட் அருந்தி தன் இன்னுயிரை மாய்த்த தினம்.




5. மறைந்த இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி சீக்கியர்களின் பொற்கோவில்
 தாக்க உத்தரவிட்ட தினம் (படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்)

5. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றோனால்ட் றீகன் நினைவு தினம் (2004)

5. உலக சுற்றுச்சூழல் நாள்

5. மு. சிவசிதம்பரம் நினைவுதினம் (2002) தமிழர் கூட்டணித்தலைவர்




6. 1930 இலங்கையில் வீரகேசரி நாளிதழ் தொடங்கப்பட்டது

11. ஈழத்துப்புலவர் சோ. இளமுருகனார்
 (நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் மகன் (1975)
 (ஈழத்து சிதம்பர புராணத்தை எழுதியவர்)




12. உலகக்குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புதினம்.

14. சர்வதேச இரத்த வழங்கல் நாள்

14. ஈழத்துப்பெரியார் தென் புலோலியூர் கந்தமுருகேசனார் நினைவுதினம் 1965 (1902-1965)
(வறுமையின் காரணமாக கல்வியைத் தொடரமுடியாமலும் 25 வயதில் கால்கள் வலுவிழந்ததாலும் வீட்டையே திண்ணைப்பள்ளிக்கூடமாக்கி பலருக்கு கல்வி போதித்தவர்)



15. ஆன்மீகவாதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுதினம் 2008
 (1925 - 2008)

**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


**நாளை ஒதுக்கி வைத்து நல்வரவு தாருங்கள்........**

**நாள்:** Friday, June 13th 2014 Evening 5.00 pm
**இடம்:** Scarborough Civic Centre

வீட்டிலிருந்தே தமிழ் படிக்கத் தொடங்கலாம்!

**வெளியீட்டு விழா! வெளியீட்டுவீழா!**

**"தமிழ் படிப்போம்"**

தமிழ் கற்கவிரும்பும் தொடக்கநிலை மாணவருக்கான பயிற்சி நூல் (தமிழ், ஆங்கிலம், பிரெஞ்ச் மொழி அறிவுறுத்தல்களுடன் கூடிய நூல்.)

**"வாசிப்போம் எழுதுவோம்"**

(கட்டுரை எழுதும் பயிற்சி: ஆண்டு 2, 3) (தொடக்க நிலை வகுப்பிற் தமிழ் கற்கும் மாணவர் சொல்லியங்களை அமைக்கப் பழக்கும் முயற்சி.)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன். நன்றி.
இவ்வண்ணம், அன்புடன்,
சபா. அருள்சுப்பிரமணியம் M.A.
Thamil Poonka. 328, Passmore Ave.# 25, Scarborough
905. 479.5375 / 647.378.3006


GAS STATION FOR SALE
HWY 403 / King George Rd - Brantford
BUSY ESSO ON THE RUN FOR SALE IN TOWN, RENOVATED EXTENSIVELY. NOI OVER $200,000. ASKING ONLY $1.99M POTENTIAL FOR EXPANSION TDL/ SUBWAY/ COIN CAR WASH/ OIL CHANGER. FINANCING HELP AVAILABLE FOR A QUALIFIED BUYER.
Nel Ketha
Smart Real Estate Solutions
Sales Representative
416.677.4707
HomeLife GTA Realty Inc. Brokerage
Tel: 416.321.6969, Fax: 416.321.6963
www. homelifegtarealty.com
203-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2
CCIM Individual Member


வாகன விபத்து
MOTOR VEHICLE ACCIDENT
SKT PARALEGAL SERVICE
CRIMINAL MATTERS
SUMMARY
416.803.5296
Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்
SK THEESAN
TRAFFIC TICKETS
LICENSED PARALEGAL
sktheesan@gmail.com
MOTOR VEHICLE ACCIDENT
SERIOUSLY INJURED ?
ACCIDENT BENEFITS
PERSONAL INJURY
TRAFFIC TICKETS
DON'T MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS
CRIMINAL CONVICTION
PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP
CRIME
CRIMINAL CHARGES ?
EXPERIENCED LAWYERS AVAILABLE

CENTUM Optima Mortgages Inc.

**Need a Mortgage?**

- Residential and Commercial Mortgage
- 2nd Mortgage
- Purchase & Refinance
- Renewal & Switch
- Home Equity loan

Gini Annarasa
Mortgage Broker Lic #M08005550
Cell: 416.830.3241
Email: gini.annarasa@gmail.com



BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL

Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca

HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6962

GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!



உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்

SASI CHELVARATNAM
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S 0C2
*Independently Owned & Operated



"Let me help you make the right choice"

Schuren Sriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393





Low Mortgage Rates

TD Canada Trust

Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable

கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்

Buying Home Home Equity Line of Credit
Consolidation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

Free Real Estate Class - Call: 416.321.6969

**RealEstate / Mortgage / Commercial Investments**

ELLESM & MEADOW



Bedrooms: 4+
Washrooms: 3
Price: $799,900
3200Sq.ft

MARKHAM & STEELES



RestaurantBUSINESS FOR SALE
Price: $22,900

LAWRENCE & MIDLAND



Bedrooms: 2
Washrooms: 3
Price: $219,900
900 Sq.ft

HWY 48 & STOUFF





Bedrooms: 4 + 1
Washrooms: 5
4000 Sq.ft

STOUFFVILLE



Bedrooms: 4
Washrooms: 3
Price: $570,00
2400 Sq.ft

RICHMOND HILL



Bedrooms: 3 + 2
Washrooms: 4
Price: $699,900
2800 Sq.ft



MORTGAGE ALLIANCE
RE/MAX Dynasty Realty Inc. Real Estate Brokerage

A. Anton Jeeva B.Eng
Hall Of Fame Award Winner
Ranked among the top 1% of all Realtors in the GTA
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX All-Stars Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com



வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit
கவலை வேண்டாம்
Guaranteed Result

WHY ME....
- Honest, Reliable & Client Focus
- Full Time Sales Representative
- Flexible Listing commission
- Free Neighbourhood Pricing & • Free market Evaluation

HomeLife / Future Realty Inc., Brokerage*
*Independently Owned & Operated



Latha Gopalu
(Sales Representative)
Tel: 647.898.2734
lathagopalu@gmail.com
Bus: 905.201.9977 Fax: 905.201.9229 205 - 7 Eastvale Dr., Markham ON L3S 4N8

Sales Reps. Welcome

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



For All your Real Estate & Investments Needs!

HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED